# சேலை



## முல்லையூரான்



# பதிப்புரை

நண்பர் முல்லையூரான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துப் பட்டதாரி. இவரது துணைவியாரும் இப் பல்கலைக் கழகப் பட்டதாரியே.

இவர்கள் இருவரினதும் பட்டமளிப்பு விழாவுக்கு, நான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு நேரில் சென்று இவர்கள் இருவருக்கும் வாழ்த்துக் கூறியது இன்றும் பசுமையாக என் நெஞ்சில் இருக்கிறது.

பட்டப் படிப்பு நடந்தேறியதன் பின்னர் தான் இவர்கள் இருவருமே வாழ்க்கையிலும் இணைந்து கொண்டனர். அந்தக் காலத்தில் - பல்கலைக் கழக மாணவப் பருவத்தில் - இவர் ஒரு வளரும் கவிஞராகவே விளங்கி வந்தார். சிறு கவிதை வரிகளில் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

அந்த இலக்கிய உணர்வுதான் இவரை மல்லிகையுடன் நெருங்கி வரச் செய்தது. அடிக்கடி மல்லிகைக் காரியாலயத்திற்கு வந்து தனது இலக்கிய நட்பைப் புதுப்பித்துக் கொண்டவர்களில் இவரும் ஒருவர்.

அந்தக் காலகட்டத்தில் தான் மல்லிகைச் சிறப்பிதழாக 'முல்லைத் தீவுச் சிறப்பிதழ்' வெளிவந்து முல்லைத் தீவு இலக்கிய உலகில் பேசப்பட்டு வந்தது. அந்தச் சிறப்பிதழின் வெளியீட்டு விழா முல்லைத் தீவில் வெகு கோலாகலமாக நடைபெற்றது. அந்த விழாவில் நான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டேன்.

அந்த வெளியீட்டு விழாவுக்கு நண்பர் முல்லையூரானும் வந்திருந்தார். அந்த விழாச் சிறப்புடன் நிறைவேறத் தனது அயராத உழைப்பை நல்கிச் சிறப்பித்தவர்களில் இவரும் ஒருவர் என மேடையிலேயே பலர் இவரைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

வெறும் அறிமுக நட்பாக இருந்து வந்துள்ள நமது நெருக்கம், இந்த விழாத் தொடர்பு மூலம் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தெரிந்து, புரிந்து கொள்ளத்தக்க விதத்தில் இறுக்கமடைந்தது. அதன் பின்னர் இவரைப் பற்றிய எந்தவிதமான தகவலுமே கிடைக்கவில்லை. பலரிடம் இவரைப் பற்றி விசாரித்துப் பார்த்தேன். எந்த விதமான தகவலையும் தெரிந்து கொள்ள என்னால் இயலவில்லை. பின்னர் பல ஆண்டுகள்

கழிந்த பின்னர் டென்மார்க்கிலிருந்து கொழும்பு மல்லிகைக் காரியாலயத்திற்குக் கவிதை ஒன்று வந்திருந்தது.

எனக்கு இவரது தொடர்பு கிடைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இடையே இவரிடமிருந்து சிறுகதைகள் அடங்கிய தபால் பொதி ஒன்று கிடைத்தது.

முல்லையூரானை ஆரம்ப காலத்திலிருந்தே ஒரு கவிஞராக இனங்கண்டு வைத்திருந்த எனக்கு, இவரை ஒரு சிறுகதையாளனாகத் தரிசித்ததில் பெருவியப்பு ஏற்பட்டது.

குடும்பத்துடன் புலம் பெயர்ந்து இன்று டென்மார்க் வாசியாகிவிட்டார் என்பதை இவரது சிறு கதைகள் மூலம் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.

இன்று கனடா, லண்டன், நோர்வே, டென்மார்க், பாரிஸ், சுவிஸ், ஜெர்மனி, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நமது இளைஞர்கள் இலக்கிய உலகில் நமது ஈழத்துத் தமிழை விதைத்து விதைத்து, அறுவடை செய்து வருவதை நான் அநுபவ பூர்வமாகவே உணர்ந்து வருகின்றேன்.

நமது தமிழை இவர்களது உழைப்பு சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்கின்றது என்ற நியாயமான சுய பெருமை எனக்கு எப்போதும் உண்டு. அற்புதமான எழுத்துக் கலைஞர்கள் இவர்களிடமிருந்து முகிழ்ந்து வருகின்றனர் என்ற பெருமிதமும் எனக்கு ஏற்கெனவே உண்டு.

இப்படியான புதுப் புலத்தைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் நம்மவர்கள் தமிழக 'புத்தக யாவாரி'களிடம் விலை போகக் கூடாது. என்ற மன ஆதங்கமும் எனக்கு நிறையவே உண்டு.

கடல் கடந்தும், கண்டம் தாண்டியும், நாடு விட்டு நாடு மாறியும் தமது தாய்த் தமிழை மறக்காதவர்களில் ஒருவர் நண்பர் முல்லையூரான்.

தனது ஐரோப்பிய அநுபவங்களை நமது தமிழருக்குச் சிறுகதை மூலம் தந்துள்ளார்.

மல்லிகைப் பந்தலின் மூலம் இவரது சிறுகதைத் தொகுதியான 'சேலை'யை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அட்டையை உருவாக்க உதவிய இளம் கலையார்வ நண்பர் எஸ். திவாகரன் அவர்களுக்கும் படிகளைத் திருத்தி உதவிய திரு. மா. பாலசிங்கம் அவர்களுக்கும் அச்சகத் தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

*டொமினிக் ஜீவா*

*19 – 03 – 2002*

# அணிந்துரை

புலோலியூர்
க. சதாசிவம்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் அதன் போக்கிலும், வளர்ச்சியிலும் ஒவ்வொரு காலகட்டங்களிலும் சிற்சில பண்புகள் முனைப்புடனும் சமூகமாற்றங்களின் இசைவுக்கேற்ப காலத்தேவையை ஒட்டி உள்ளடக்கத்திலும் – உருவத்திலும் – புதுப் பொலிவு எடுத்தும், புதிய வரவாகவும் மிளிர்ந்து ஈழத்து இலக்கியத்திற்கு வனப்பும் வளமும் சேர்க்கின்றன. இந்தவகையில் இன்று புலம் பெயர் இலக்கியம் ஒரு தனி இடத்தைப் பெறுகிறது. புலம் பெயர்ந்து வாழ்வோரின் சூழல், எதிர்நோக்கும் சிக்கல்கள், வேறுபட்ட வாழ்க்கை முறைகள், புதிய விழுமியங்கள் தழுவிய கலாசாரம் தோற்றுவித்த முரண்பாடுகள், தாயகத்துடன் கொடியறாத தொப்புள் உறவுப் பிணைப்பு – இவைகள் எல்லாம் கதைக் கருவாக, களமாக, தொனிப் பொருளாக, புதுவரவாகியுள்ளது. ஈழத்து இலக்கியத்திற்கு, முல்லையூரான் சேலை கண்ணையும் கருத்தையும் கவரும் புதுவரவாகும்.

ஆக்க இலக்கிய ஆற்றலுடன், வடபுல சமூகப் பின்னணியில் வாழ்ந்து டென்மார்க்குக்குப் புலம் பெயர்ந்த முல்லையூரானின் வடதுருவ சிந்தனை மாற்றத்தில் உருவாகிய கதைகளின் தொகுதி 'சேலை' புலம் பெயர் இலக்கியத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்கிறது. ஈழத்து ஆக்க இலக்கியத்திற்கு புதிய முகத்தைத் தருகிறது. புதிய பார்வையை அறிமுகமாக்குகிறது.

மல்லிகை டொமினிக் ஜீவாவின் ஊடாக முல்லையூரான் "எனது சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரையை எனக்கு மிகவும் பிடித்த நாடறிந்த எழுத்தாளராகிய தங்களிடம் பெறவிரும்புகிறேன்" என்று கேட்டபோது நான் ஒருகணம் சிலிர்த்துக் கொண்டாலும் எனக்கு பெருவியப்பாக இருந்தது. ஏதாவது ஒரு வழியில் பிரபல்யம் அடைந்தவர்களிடமிருந்தே அணிந்துரை வாங்குவது வழக்கம். ஈழத்தில் வெளிவந்த படைப்புக்களில் தரமேம்பாடுடையவையைச் சில விமர்சகர்கள் பட்டியல் போடும் போதும், கருத்தரங்குகளில் என்னைச் சிலாகித்துக் கூறும் போதும் நான் இவை விதந்துரை

என வியப்படைவதுண்டு. முல்லையூரானின் புகழுரையும் எனக்கு வியப்பைத் தந்தது. பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு பண்டாரவளையில் எனது மனைவியுடன் சக ஆசிரியர்களாகக் கடமையாற்றிய முல்லையூரானும் அவரது மனைவியும் எனது மருத்துவமனை பங்களாவிற்கு வருகை தந்து ஓரிரவு தங்கி இலக்கியம் பேசிப் பிரிந்தது நன்றாக நினைவு இருக்கிறது. அதற்குப் பின் சந்திக்கவேயில்லை. 'மல்லிகை'யில் இவரது சில கவிதைகள் படித்த ஞாபகம். இப்போது இத்தொகுதியைப் படித்த பின் முல்லையூரான் ஓர் ஆற்றல் மிகு படைப்பாளி என இனங்காண்கிறேன்.

ஆக்க இலக்கிய கர்த்தா சமகால வரலாற்றை எழுதுபவன் என்ற பொறுப்புணர்வுடன் முல்லையூரான் படைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளமை வரவேற்றுப் போற்றக்கூடியதொன்றாகும். 'புலம் பெயர் சமுதாயத்தைப் பிரதிபலிப்பவன் என்ற முறையில் இன்றைய அக்கரைக்குரிய விடயங்களைப் பற்றி பேசப்படும் காரணத்தால் மட்டுமல்ல பொதுவாக புலம் பெயர் மக்களின் எரியும் பிரச்சனைகள், எதிர்காலம் பற்றிய ஏக்கங்கள், புதிய பரம்பரையின் போக்குகள், புலம் பெயர்ந்து வந்த தாயகத்தின் உறவின் தாக்கம் இன்னும் இவை சார்ந்த விடயங்களைச் சீரிய முறையில் சிந்திக்க வைக்கிறது 'சேலை'. புலம் பெயர்ந்து வாழும் சமூகத்தில் வாழ்வியலைப் பல கோணங்களிலும் இவரது படைப்புகள் காட்டி நிற்கின்றன.

முல்லையூரான் கதை சொல்வதில் ஒரு புதுமையிருக்கிறது. புதுப்புனல் ஊற்றின் குளிர்மை பிரவகிக்கின்றது. பலவித 'இசங்க'ளால் மூளை குழம்பிப் போயிருக்கும் இளைய இலக்கியச் சந்ததிக்கு இது ஒரு மாற்றீடு (Alternative) எனலாம். பல கதைகளில் உருவம் சார்ந்த சில உத்திகளைக் கையாண்டிருக்கிறார். சிலவற்றில் குறிப்பிடக் கூடிய வெற்றியும் அடைந்துள்ளார். ஒரு சிறுகதை எப்படி அமைய வேண்டும் என்று சில வார்த்தைகளில் கூறிவிடமுடியாது. ஆனால் ஒரு சிறுகதையைப் படித்து முடித்ததும் அது தரும் உணர்வுகள் நல்ல விகிதாசாரத்தில் படிப்பவர்கள் சிந்தனையில் தொற்றி, மனத்தில் தொங்கி நிற்குமாயின் அதுவே சிறந்த சிறுகதை என மதிப்பிட வைக்கிறது. முல்லையூரானின் கதைகளைப் படித்து முடித்ததும் எமது சிந்தனை விரிகின்றது. பல விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் தூண்டப் படுகின்றது. வாதப் பிரதி வாதங்கள் எழுகின்றன.

பொதுவாக இவரால் படைக்கப் பட்ட பாத்திரங்கள் உயிர்த்துடிப்புடன் உள்ளன. சில பாத்திரங்கள் உணர்ச்சி வடிவை விடக் கருத்துவடிவில் கம்பீரமாக நிற்கின்றன. அந்நியமான உளப்பாங்கினைக் கொண்ட சில பாத்திரங்களை இவர் படைத்துள்ளார். புலம் பெயர் மக்களின் சமூக உட்கட்டமைப்பில் உருவான பாத்திரங்கள் அவை. எல்லாம் இருந்தும் இல்லாத நிலை. புலம் பெயர்ந்த நாட்டில் வேண்டாத விருந்தாளியாக அகதி அந்தஸ்துடன் இருப்பது, புலம் பெயர்ந்த ஐரோப்பியத் தமிழனாக, நிறபேதவாதிகளால் அசிங்கப் பொருளாக நோக்கப் பட்டு, 'கறுப்பனாக' குற்ற உணர்வுடன் வாழ்வது......, இவைகள் எல்லாம் பாத்திர வார்ப்பில் தத்ரூபமாகக் காட்டப் பட்டுள்ளன. டெனிஸ் பையன்களின் நிறபேத வெறியின் நிகழ்வால் புலம் பெயர் சமூகப் பையனிடம் ஏற்படும் உள்ளக் குமுறல்களை உருக்கமாக கலாநுட்பத்துடன் காட்டுகிறார். ஒரு கதையில்

புலம் பெயர்ந்து சென்ற ஆடவர்களுக்கு மணப்பெண்ணாகப் புலம் பெயரும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தப் பண்புடன் எடுத்துக் காட்டுகிறது விஜி என்ற பாத்திரம்.

புலம் பெயர் எழுத்தாளர்கள் தாங்கள் பெற்ற புதிய அனுபவங்களின் ஒளியில் தாயகத்தைப் பின் நோக்கி, மீளாய்வு செய்யும் போது தாயக சமூகத்தின் பெறுமானம் இருப்பு, உட்கட்டமைப்பு ஆகியவற்றைப் புதிய கோணத்தில் பார்க்கிறார்கள். இந்த வரவு எமது இலக்கியத்திற்கு புதிய நோக்காகச் சோபை தருகிறது. இதனை முல்லையூரானின் படைப்புக்களில் தெளிவாகக் காணமுடிகிறது.

முல்லையூரானின் பார்வையில் சிந்தனைத் தெளிவு இருக்கிறது. உலகளாவிய மானுடப் பிரிவு இழையோடுகிறது. காலம் காலமாக கறையாகப் படிந்துவிட்ட நிறவாத உணர்வுள்ள இனத்தில் நீறு பூத்த நெருப்பாக உள்ள மானிடத்தைத் தேடுகிறார் முற்போக்குச் சிந்தனையுடன் முல்லையூரான். பூகோள மயமாகும் போது நிறபேதம் மானிட நேசத்திற்கு மண்டியிடும். பொருளாதார ஏற்றத் தாழ்வே உலகில் முன்நிற்கும் என்பதை டெனிஸ் அடிமட்ட மக்களின் வாழ்வினை எடுத்துக் காட்டுவதின் மூலம் எதிர்வு கூறுகிறார்.

கேள்விக்குறியாக அமைந்துள்ள புலம் பெயர் மக்களின் எதிர்காலம்..? ஒரு பரம்பரை வேர் இங்கும், விழுது அங்குமாக வாழ, புதிய பரம்பரை இன அடையாளத்தை மாற்றி அல்லது தொலைத்து வாழ்வார்களா? அல்லது குளிர்காலத்தில் இடம் பெயர்ந்து கூட்டம் கூட்டமாக வேறு நாட்டிற்குப் பறந்து சென்று குளிர் காலம் முடிய மீண்டும் தாயகம் திரும்பும் பறவை இனங்கள் போல இருக்குமா? அல்லது நாட்டிற்கு நாடு இடம் பெயரும் நாடோடிகளா? சீரிய முறையில் சிந்திக்க வைக்கிறார் முல்லையூரான். புலம் பெயர்ந்து வந்த நாட்டில் சமாதானம் வந்தபோது தாயகம் திரும்பும் போஸ்னியா இனத்தைச் சேர்ந்த குடும்பத்தைக் காட்டும் விவரணப் படக்காட்சி சிந்தனைச் செறிவுக்கு ஒரு சிகரம்.

புலம் பெயர் இலக்கியம் ஈழத்து இலக்கியத்திற்குப் புதிய இரத்தம் பாய்ச்சி வரும் இக்கால கட்டத்தில் முல்லையூரானின் 'சேலை' வெளிவருவது சாலப் பொருத்தமாகும். இந்நூலை இலக்கிய உலகம் வரவேற்று, புலம் பெயர் சமூகத்திற்கும் தாயக சமூகத்திற்கும் இலக்கியப் பரிமாற்றமாக மனங்கொண்டு ஆரோக்கியமான திறனாய்வு செய்யுமாயின் இவரின் முயற்சி புலம் பெயர் இலக்கியத்தின் ஒரு மைல்கல் என்பது புலனாகும்.

இக்கதாசிரியர் முன் உலகம் விரிந்து கிடக்கிறது. இவரது சமூக பகுப்பாய்வுச் சிந்தனை செறிந்த ஆக்க இலக்கிய ஆற்றல் நாவல் வடிவத்தில் சங்கமிக்குமாயின் அது உன்னத ஆக்கமாக மிளிரலாம்.

முல்லையூரான் தொடர்ந்து ஆக்க இலக்கியம் பல படைத்து ஈழத்து இலக்கியத்திற்கும் புலம் பெயர் இலக்கியத்திற்கும் வளமும் வனப்பும் சேர்க்க வேண்டுமென மனமார வாழ்த்துவோமாக!

# என்னுரை

வணக்கம!

இப்படித்தான் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இத்தகையதொரு அன்புசார் புலம் பெயர் கலாசாரம் ஒன்று இன்று புலம் பெயர் மக்களால் கைக்கொள்ளப் படுகின்ற ஒரு முற்போக்கம்சமாகும். தமிழ் என்பதால் மட்டும் புலம் பெயர்ந்து வாழும் இந்த எல்லாம் இருந்தும் இல்லாத வாழ்வாக வாழ்வியற்றும் கையறு நிலைத் தமிழர்களில் நானும் ஒருவன். அதைவிடவும் ஒரு படைப்பாளியாக இருந்துகொண்டு இந்தப் புலம்பெயர் சமூகத்தை பிரதிபலிப்பவன் என்கின்ற முறையில் இன்றைய அக்கறைக்குரிய விடயங்கள் பற்றிப் பேசவேண்டிய சந்தர்ப்ப நிர்ப்பந்தமொன்று எமக்கு உள்ளது.

இன்று புலம்பெயர் இலக்கியம் பற்றிப் பலராலும் பலவிதமாகப் பேசப்படுகிறது. தாயகத்தின் எல்லைகளைக் கடந்தும், வேறுபட்ட பின்புலமொன்றிலிருந்து பேசப்படுகின்ற தன்மைகளால் மட்டும் ஈழத்து இலக்கியத்திற்கும், புலம் பெயர் இலக்கியத்திற்குமான வேறுபாடாக நாம் வரையறை செய்து கொள்ளலாமா? அவ்வாறல்ல. அதைவிடவும் அக்கறைக்குரிய பல விடயங்கள் இந்த விடயத்தில் உள்ளதை நாம் உணரவேண்டும். இவை சார்ந்து சிந்திக்க விரும்புவர்களுக்கு இந்தச் 'சேலை' என்ற சிறுகதைத் தொகுதியிலுள்ள பலகதைகள் உதவலாம்.

தொலைபேசிப் பாலம் என்னும் ஒரு பாலத்தால் மட்டும் தொடர்பு வைத்துள்ள புலம் பெயர் சமூகம், தாயகத்தினுடனான தனது தொடர்பை வைத்துக் கொண்டு மட்டும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார உறவு நிலைகளையும் தக்கவைத்துக் கொள்வது முடியாத காரியமாகும். அத்துடன் பணம் சார்ந்து தங்கிவாழ் சூழலும் மாறுபட்ட உறவுப் பிரச்சினைகளையும் கொண்டுவரும். கொண்டுவருகிறது. இந்த நிலையில் பற்பல சமுதாய முரண்பாடுகளைக் கொண்டுள்ளதும் ஏலவே சமூக இணைவாக்கமின்றிக் குழம்பியுள்ளதுமான ஒரு தமிழ்ச் சமுதாயப் பின்னணியிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் இந்தச் சமூகம் மிகவும் சிக்கல் நிறைந்த வாழ்வியலைக் கொண்டுள்ள நிலையில்........

இந்தச் சமூகத்தைப் பற்றி ஒரு திடமான வரையறை செய்து கொண்டு அச்சமூகத்தை ஓர் இலக்கு நோக்கி நகர்த்துவது என்பது மிகவும் சிக்கலானது என்பதை இன்று புலம் பெயர் மக்களின் வாழ்வும் அச்சமூகம் பற்றியதாக முன்வைக்கும் எழுத்துக்கள் முன்வைக்கும் விமர்சனம் அல்லது கருத்தாடல் என்பதுவும் இன்று முக்கியத்துவம் பெறுகிறது.

வெறுமனே 'ஓடிப்போனவர்கள்' என்ற புறநிலை சார்ந்து புலம் பெயர் மக்களைப் பார்ப்பதென்பது தவறானதாகும். தாயக சமூகத்திற்கும் புலம் பெயர் சமூகத்திற்கும் இடையே

ஒரு சரியான இலக்கியப் பரிமாற்றம் கூட இல்லாத நிலை இன்று காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் எனது இந்தச் சேலை சிறுகதைத் தொகுதி ஈழத்துச் சமூகத்திடை வெளிவருவது என்பது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது என நான் எண்ணுகிறேன். அதைவிடவும் ஈழத்து இலக்கியத்தின் ஒரு விரிவாக பருவமெய்திவரும் புலம் பெயர் இலக்கியம் அல்லது இலக்கியச் சூழல் என்பது இன்று எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்பல. அவற்றில் மாற்றம் கொண்டுள்ள வேறொரு பகைப்புலத்தில் இருந்து கொண்டு தமிழ் சிந்தனைகளை வெளிப்பாடு செய்யும் முயற்சியில் இறங்கும் ஒருவருக்கு, தமிழ் பற்றிய ஒரு சாராம்சம் அல்லது தமிழின் சுருக்கம் என்பது முக்கியத்துவம் பெறுகிறது. மாறாக ஈழத்து இலக்கியப் பரப்பளவில் சமூக விமர்சனம் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறதோ அதே அடித்தளத்திலிருந்து கொண்டு புலம் பெயர் இலக்கியத்தில் பொதுவாகவே படைப்புகள் மொத்தமாகவே தமிழை விமர்சனம் செய்கின்ற பாங்கு அலாதியானது. மேலும் தமிழில் வளர்ந்து தமிழாய் வாழ்ந்து இன்னொரு நாட்டில் வட துருவச் சிந்தனைமாற்றத்தோடு படைப்பாற்றல் வெளிப்படும்போது அதுவும் தமிழிற்கு ஒரு புதிய முகத்தைத் தருகிறது. இவற்றை ஒரு பொதுப்படையாக நான் இங்கு விதந்துரைப்பதற்கு காரணம் உண்டு. அதாவது இத்தகைய சில தகவல்களோடு இந்த நூலை வாசிப்பவர் தன்னைத் தயார் செய்து கொண்டால்தான் இக்கதைகளில் கையாளப்பட்டிருக்கும் செய்திகளைப் புரிந்து கொள்ள முடியுமென்பது எனது எண்ணமாகும். உந்துதல் எதுவுமின்றிக் கிடக்கும் புலம்பெயர் சமூகத்தில் ஒரு படைப்பாளியாக வாழ்வது என்பதும், படைப்புத் தொழிலை தங்குதடையின்றி நிகழ்த்துவதென்பதும் மிகவும் கடினமானதாகும். இப்படி ஒரு மன அழுத்தத்தோடுதான் நானும் வாழ்ந்து வருகிறேன். ஆனால், திடீரென ஒரு நாள் திரு. டொமினிக் ஜீவா அவர்கள் ஐரோப்பாவுக்கு வருகை தருகிறார் என்ற செய்தி கிடைத்தபோது என்னைப் போன்ற கருத்துடையவர்கள் உற்சாகமும் உந்துதலும் பெற்றோம் என்பது வெறும் புகழ்ச்சியல்ல.

அதுவும் பல இடங்களில் அவர் ஆற்றிய உரைகளாலும், தெரிவித்த கருத்துகளாலும் எனது மனம் ஒரு புதிய உந்துதலோடு வெளிப்பட்டது. இத்தகைய ஓர் உற்சாகமே இன்று இந்தத் தொகுதி வெளிவருவதற்கும் அதுவும் மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளி வருவதற்கும் காரணமாயிற்று. இதற்காக நான் மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இந்தக் கதைகளை படித்து அக்கறையோடு அணிந்துரை ஒன்றினை வழங்கிய எனக்குப் பிடித்த எழுத்தாளர்களில் ஒருவரான புலோலியூர் சதாசிவம் அவர்களுக்கும், இந்நூலின் வாயிலாகப் பின் புறத்து அட்டையில் என்னை அறிமுகம் செய்து வைத்திருக்கும் எனது அன்புத் தம்பி திரு. யூலியஸ் அன்ரனி அவர்களுக்கும், அட்டைப் படத்தினை வரைந்து உதவிய பெயர் சொல்ல விரும்பாத அந்த ஓவியருக்கும், மேலாக அவ்வப்போது எழுதிவைத்த கதைகளைப் பாதுகாத்து, சேர்த்துவைத்து உரிய நேரத்திற்கு பதிப்புச் செய்ய உதவிய எனது துணைவியார் நாகேஸ்வரிக்கும் எனது நன்றிகள்.

முல்லையூரான்
(டென்மார்க்)

# வெளியீடுகள்

1. *டொமினிக் ஜீவா* – சிறுகதைகள்
(தேர்ந்தெடுக்கப் பெற்ற 50 சிறுகதைகளின் தொகுப்பு)
2. தூண்டில் - *டொமினிக் ஜீவா* (கேள்வி - பதில்)
3. எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்
(சுயவரலாறு - 2ம் பதிப்பு) - *டொமினிக் ஜீவா*
4. நானும் எனது நாவல்களும் –*செங்கை ஆழியான்*
5. எழுதப்பட்ட அத்தியாயங்கள் –*சாந்தன்*
6. கிழக்கிலங்கைக் கிராமியம்
(நாட்டார். இயல்) - *ரமீஸ் அப்துல்லாஹ்*
7. மண்ணின் மலர்கள் -
(13 யாழ் பல்கலைக் கழக மாணவர் சிறுகதைகள்.)
8. முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள்.
(ஐரோப்பியப் பயணக் கட்டுரை.) - *டொமினிக் ஜீவா*
9. மல்லிகை ஜீவா - மணிவிழா மலர்
10. டொமினிக் ஜீவா - கருத்துக் கோவை
11. இப்படியும் ஒருவன் - (சிறுகதைத் தொகுதி) **மா. பாலசிங்கம்**
12. மனசின் பிடிக்குள் (ஹைக்கூக் கவிதைகள்) - *பாலரஞ்சனி*
13. பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும் -
14. சேலை - (சிறுகதைத் தொகுதி) **முல்லையூரான்**
15. அநுபவ முத்திரைகள் - (ஐம்பது புதிய அநுபவத் தொகுப்பு)
16. அட்டைப் படங்கள் - (44 அட்டைப் படக் குறிப்புகள்)

## சமர்ப்பணம்

முல்லைத்தீவு பட்டினசபைத் தலைவரும், சுருக்கமாய் ஊரில் எஸ்.எஸ். எனவும், மெம்பரெனவும் அழைக்கப்படும்.... திரு. எஸ். எஸ். மயில்வாகனம் அவர்களுக்கு.....

# சேலை

27 - புரட்டாதி - 1995

எனது பெயர் மல்லிகை. ஆம்........... அந்தப் பூக்கும் மல்லிகைதான். கிளிநொச்சியில் ஒரு முற்றத்தில் நிற்கிறேன். முற்றத்தில் நிற்பதனால் என்னை முற்றத்து மல்லிகை என்றே அழைப்பர். எனக்கு வயதாகிவிட்டது!. நீரைத் தேடி எனது வேர்களை நிலத்துள் ஆழ்த்துகிறேன். மழை அது இல்லை. தேகம் கொதிக்கிறது....... எனது இலைகள் துடிக்கின்றன. நிலம் சுடுகிறது. வானம் அது ஏனோ கோபித்துக் கொண்டதைப் போல...... சும்மா விரிந்து கிடக்கிறது. எனக்கு இப்போதெல்லாம் பூப்பதற்கும் சக்தியில்லை. அப்படிப் பூத்தாலும் காலுயிர்ப் பூக்களாகவே பூக்க முடிகிறது. இந்த முற்றம் வெடித்து நிலத்துள் இறங்கி இறந்து போவேனா என அடிக்கடி பனியிரவில் கனவுவருகிறது. காலத்தால் மழைதான் பெய்தாலும் நான் நிற்கும் இந்த முற்றத்து வீட்டுக் காரர் வீட்டில் இருந்திருந்தால்....... அவர்கள் என்னை நீர்வார்த்துக் காத்திருப்பர். பாவம் அவர்களும் வீட்டைத் துறந்து எங்கோ போய்விட்டார்கள். இந்த முற்றம் வெறிச்சோடிக் கிடக்கிறது. எனது மலர்களை முகர்ந்து மகிழ்வெய்தும் அவர்கள் இல்லாத இந்த முற்றத்தில் நான் பூத்தென்ன பூக்காத மூளியாய் நின்றாலென்ன? இங்கு அவர்கள் எவ்வளவு அமைதியாக வாழ்ந்தார்கள் என்பது எனக்கும தெரியும்.

அந்த அவர்களுள் எனக்குப் பிடித்தவள் அர்த பிடிவாதக்காரி. பெயர் சாந்தா. அவள் அழகானவள், என்னைப் போல. அவள் அதிகாலையில் எனக்கு நீரூற்றிவிட்டு எனது மலர்களை முகர்வாள். அப்போது நான் அவளை முகர்வேன். எனது மலரைப் போல வெள்ளை முகம். நான் மலர்த்தும் மலர்களைப் போல அவளும்

எனக்குப் பிள்ளை. அந்தப் பிள்ளையில் எனக்குப் பிடித்தது என்னவென்றால், அவள் தினமும் கட்டும் சேலைதான். எப்போதும் சேலைதான். அதிலொரு பிடிவாதம். அக்கறை. எனது பூ நிலத்தில் விழுந்தாலேயே பதகளித்துப் போகின்ற மனத்தவள். அவள் புனையும் சேலைகளில் எங்கோ ஒரு சிகப்பு வர்ணமும் கலந்திருக்கும். அதுவும் அவளில் எனக்குப் பிடித்த ஒன்று. முற்றத்திற்கு எனது மல்லிகைப் பூக்கள் தரும் அழகினைவிடவும் சேலைக்கார சாந்தா தான் முற்றத்திற்கு அழகு என்பேன் நான்.

இப்போதெல்லாம் அவளையும அவளது சேலையழகையும் இந்த முற்றத்தில் காண்பதே இல்லை. எங்கோ குளிர் தேசமொன்றில் அகதியாக வாழ்கின்றாளாம். இப்போதும் அங்கு சேலைதான் உடுப்பாளோ என்னவோ எனக்குத் தெரியாது.

சாந்தா என்ற அந்தச் சேலைக்காரி திரிந்த முற்றமெங்கும் இப்போதெல்லாம் துப்பாக்கிக்காரர்களே வந்து போகின்றனர். முதலை போன்ற சப்பாத்து. கையில் துவக்கு. முகத்தில் பயம். எனது மலர்களை முகரவே மனமற்றுப் பீதியோடு திரியும் இவர்களுக்கெல்லாம் என்ன நடந்தது. நடக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை.

இந்த ஊரில எனது மல்லிகை மலர்களுக்கு மதிப்பேதுமில்லை. சிகப்பு மலர்களையே பெரிதும் விரும்புகின்றனர். துப்பாக்கி முனையிலும் சிகப்பு மலர்களையே சூடிக் கொண்டு சிலர் வந்துபோவர். அவர்களது விருப்புக்கு ஏற்றாற் போல் என்னால் சிகப்பு மலர்களை மலர்த்த முடிவதில்லை. நான் இப்போதும் வெள்ளை மலர்களாகவே பூக்கிறேன். இந்தக் கொடுவெயிலிலும் நீராக, மழையாக, நினைவில் வரும்........ எனது வேர்களும் நீரூற்றிய அந்தச் சேலைக்காரி சாந்தா. நான் நிலத்துள் இறங்கி இறப்பதற்குள் இந்த முற்றத்திற்கு மீண்டும் வருவாளா? மீண்டும் அவள் வந்து எனது வேர்களுக்கு நீர்தருவாளா? என்று மழைபோலக் காத்திருக்கிறேன். இந்த கிளிநொச்சி முற்றமொன்றில்.

## 2

27 - புரட்டாதி - 1996 (காலை)

நான்தான் அந்தச் சாந்தா. எனக்குப் பிடித்தமான அந்தச் சேலையை எடுத்துக் கொள்கிறேன். இளம் ரோஜா வர்ணத்தில் சிகப்பு வர்ணக் கோடுகளுடனான மெல்லிய சேலை. அந்தச் சேலையைக் கையுள் வைத்துக் குழைத்து மகிழ்வது போல மனம் மென்மையாக இருக்கிறது இன்று. எனக்குள் அதை நினைக்க நினைக்க மகிழ்ச்சி ஆரவாரிக்கிறது. போனபோக்கில் ஜன்னலூடாகப் பார்க்கிறேன். வெளியிலே குளிர்தான். மரங்கள் மஞ்சளாகி பசுமை இறந்து பனிக்காலம் தொடங்குவதற்கான அறிகுறிகள். குருவி ஒன்று குளிரைத் தள்ளிக் கொண்டு இலாவகமாகப் பறக்கிறது. பக்கத்து வளவில் பறக்கும் டென்மார்க் தேசியக் கொடி அமைதியாக அசைகிறது. கண்டங்களைக் கண்டுபிடித்த எமது முன்னோர்கள்

கூட. என்னைப் போலத்தான். அன்று சந்தோஷப் பட்டார்கள். ஒரு பரீட்சையில் தேறிய மாணவிபோல எனக்குள் மட்டற்ற மலர்கள் விதம் விதமாய் நிறங்களோடு விரிகின்றன. நான் சந்தோசமாக இருக்கிறேன்.

இன்று நான் கொண்டாடும் வெற்றிக்காக நான் பட்ட துயரங்கள் களைப்புகள் எல்லாம் சூரியக் கதிர் முகர்ந்த பனியாய் கரைந்தோடிப் போயின. கோடையில் தொலைந்த தனது மூக்குத்தியை மாரியில் மீண்டெடுத்ததாகச் சொல்லி மகிழ்ந்த எனது ஊர் நாவற்பழக்காரி நினைவில் வருகிறாள். இன்றெனக்கு எல்லாமே அழகாகத் தெரிந்தன. வீட்டு மூலையில் இருக்கும் அந்தக் கடதாசி மலர்கூட புதிதாய்ப் பிறந்தது போல்...... அழகாய். இறைச்சி வெட்டுகின்ற அந்த மொட்டைக் கத்தி கூட கூர்மையாய் அழகாய் நினைவில் வருகிறது. மனம் மகிழ்ச்சியோடு கலியாணம் செய்து கொண்டால் திண்மங்களோடு கூட, குடும்பம் நடததலாம். சரி அறையின் நிலைக் கண்ணாடியின் முன் நிற்கிறேன். சேலை உடுத்தாயிற்று. வடிவாகவே இருக்கிறது. வழமையைவிடவும் முகம் அழகால் குதிர்க்கிறது. தலையை வாரிக் கொள்கிறேன். சிக்கலேதுமில்லை. இயல்பாக சீப்புப் பாடிக் கொண்டே பதிகிறது. கம்பீரமாக ஒரு செருக்குக் கொண்டை இட்டுக் கொள்கிறேன். எனது முகத்தை இரு கைகளாலும் வட்டமிட்டு வருடிவிடுகிறேன். "நீ கெட்டிக்காரியடி" எனறு நானே எனக்குள் சொல்லி ஆசைதீர்க்கிறேன். எனது விழிகளைப் பார்க்கிறேன். வழமையை விடவும் இரண்டு மூன்றுதரம் வாளால் வெட்டுவதைப் போல வெட்டி வெட்டி என்னை அவை பாராட்டுகின்றன. சாதித்துக் கொண்டு விட்டாயே என்று எனது சிகப்புக்கல் தோடுகள் அமைதியாகப் பார்க்கின்றன. சந்தோசத்தால் எனது மனம் வெப்பமாய் இருக்கிறது. அலைகள் பிணைந்து திரள்வதைப் போல குளிரும் வெப்பம். அது ஆனந்த வெப்பம். அந்த வெப்பம் எனது உடலெங்கும் மெதுமெதுவாய் பரவுகிறது. ஒரு தெம்பும் உற்சாகத்தின் திரள்வையும் அது தருகிறது. எனக்குச் சும்மா கிடைத்த வெற்றியாக இது எனது நம்பிக்கையிலும் இடையறாத தேடலிலுமல்லவா விளைந்தது. எத்தனை வீதிகள். படிகளில் வளைந்தும் ஏறியும், இறங்கியும், விழுந்தும். எழுந்தும் பெற்ற எழுச்சியல்லவா இது. இதற்கு நான் சநதோசப் பட்டே ஆகவேண்டும்.

கடந்த கால அதிர்வுகளின் உடைவில் இன்று பரிணாமமாகும் வெப்பம். குங்குமத்தை நடுவிரலில் எடுத்துக் கொள்கிறேன். நெற்றியின் நடுமையத்தை குறிவைக்கிறேன். கொட்டாமல் சிந்தாமல் எனது நெற்றியில் திலகமிடுகிறேன். தணல் போல பொலக்கிறது. குண்டு குண்டாய்ச் சுடுநீர் வழிதலில் கன்னம் சுடுகிறது. தூரத்தே இருக்கும் அம்மாவே வந்து வெற்றித் திலகமிட்டு 'முதல் நாள் வேலைக்கு" வழியனுப்புவதுபோல நினைவோ...... என்னவோ அந்த இன்ப அழுகையும் தையல் நூல் அறுந்தது போல 'பட்'டென மறைகிறது. மெல்லிய காய்ந்த புற்களினால் பின்னப்பட்ட எனது தோள் கூடையைத் தோளில் மாட்டிக் கொள்ளுகிறேன்.

மாடியிலிருந்து படிகள் வழியனுப்பி வைக்கின்றன. பாதங்களுள் சேலை மிதிபடாதபடி படிகளில் இறங்கி வருகிறேன். சிரிப்போடு கணவர் கீழே நிற்கிறார்.

"போட்டுவாரும் சாந்தா" என்கிறார். வீதியில் இறங்குகிறேன். குளிர் தனது குணத்தைக் காட்டியது. கைகளை இறுக்கிக் கொள்கிறேன். இப்போதுதான் அந்த ஜென்சனின் ஞாபகம் தலைதூக்குகிறது.

சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னா் நடந்தது. எனது தொழில்சார் கல்வியை ஆரம்பித்தபோது அந்த ஜென்சன்தான் எமது வகுப்பிற்கு பொறுப்பாசிரியராக இருந்தார். ஆரம்ப நாட்களில் அவரும் நல்ல விதமாகவே பழகினார். உதவிகளும் மற்ற நாட்டு மாணவர்களுக்கு உரியதுபோலவே எனக்கும் செய்து தந்தார். அமைதியாகப் பழகும் சுபாவமுடையவர். ஆனாலும் அவர் எதையும் திட்டமிட்டு அவதானத்தோடு நறுக்காகப் பழகும் பேர்வழி என்று நான் கணித்திருந்தேன். நாட்கள் செல்லச் செல்ல நான் தினமும் அணியும் சேலை விவகாரம் பற்றிப் பேசத் தொடங்கினார். நானும் எனது இந்த ஆடையை அணிவதில் எனக்குள்ள திருப்தி பற்றி அவரிடம் எடுத்துச் சொல்வேன். நாட்கள் செல்லச் செல்ல எனது இந்த சேலை அணியும் விவகாரத்தில் சற்றுக் கடுமையாகவே தலையிடத் தொடங்கினார். அப்போதெல்லாம் இந்த சேலை விவகாரத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நானோ தினமும் சேலை அணிந்து கொள்வதில் எனக்கு எதுவித சிரமமும் இருக்கவில்லை. மிகக் கடுமையான குளிர் நாட்களில் 'சரி இனி சேலைக்குப் பதிலாக தடித்த கார்சட்டை போன்றவற்றை அணிவோமா?' எனச் சிந்தித்தாலும் அதில் அதிக அக்கறை செலுத்தவில்லை.

எனது சேலை அணியும் விவகாரம் இப்போதுதான் பூகம்பமாக வெடித்தது. அது பாடசாலைக் கல்விக் காலம் முடிந்து பயிற்சிக்களம் ஒன்றினைத் தொழில் நிலையங்களில் தேட வேண்டிய காலம். வெளியிடங்களில் இத்தகைய பயிற்சிக்களம் ஒன்றினை எடுத்துத் தருவதற்கு ஜென்சன் போன்ற பொறுப்பாசிரியர்களே பொறுப்பாக இருப்பதுண்டு. அவரே பயிற்சிக் களமொன்றினை எனக்கும் எடுத்துத் தருவதில் பொறுப்பாக இருந்தார். அந்த விடயத்தில் ஜென்சன் மிகக் கறாராக நடந்து கொண்டார். எனது வகுப்புச் சக மாணவர்களுக்கான பயிற்சிக் கள இடம் கிடைத்து விட்டது. ஆனால் ஜென்சனே முழுக் காரணியாக இருந்தார். "நீ தொடர்ந்தும் சேலை அணிவதெனில் உந்த உடையோடு உன்னை ஏற்றுக் கொண்டு இடம் தருவதற்கு டென்மார்க்கில் யாரும் தயாராக இருக்க மாட்டார்கள்" என்றும் அதற்காகத் தான் எந்த முயற்சியும் எடுக்கப் போவதில்லை எனச் சொல்லி எனது எதிர் காலத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

எனது கல்வித்தராதரம், பாடசாலை ஒழுங்கு, வேலை செய்யும் திறன் எதுவுமே கணக்கிலெடுக்கப் படாது நான் விரும்பி அணியும் இச்சேலை விவகாரமே பெரிது படுத்தப் பட்டு.... அதுவே எனக்கான பயிற்சிக்களத்தைப் பெறுவதற்குத் தடையாகிவிட்டதே என நினைக்க மனதுக்கு ஒருமாதிரியாகிவிட்டது. அப்போதுதான் எனது எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டது. விரும்பியோ விரும்பாமலோ சாதரணமாக நான் அணிந்து வந்த சேலையை அப்போதிருந்து நான் நேசிக்கத் தொடங்கினேன்.

அதை விடவும் ஜென்சனால் வெறுக்கப் பட்ட அந்தச் சேலையை அணிந்து கொண்டே 'பயிற்சிக் களம்' ஒன்றினை சுயமாகத் தேடிப் பெற எங்கெல்லாமோ

அலைந்தேன். அது எனக்கு இலகுவானதாக இருக்கவில்லை. அதேவேளை அது மிகக் கடுமையானதாகவும் இருக்கவில்லை. ஆர்வத்தோடும் சாதிக்க வேண்டும் என்ற முனைப்போடும் எனது தேடுதல் இருந்ததால் களைப்பில் கூட உற்சாகமாக இருந்தேன். அந்த எனது முயற்சியில் தளராது தனித்துப் போராடினேன். படிகளில் ஏறும்போது உற்சாக அலைகள் படை எடுக்கும். ஆனால், தோல்வியோடு படிகளில் மீண்டும் இறங்கும் போது அந்த உற்சாக அலைகள் முறிந்து விழுந்து கரைபுரளும்.

இப்படியாகவே நாட்கள் ஓடிக் கொண்டே இருந்தன. மனதுக்குள் களைப்புத்தான், நோவும் தான். எமது விருப்பங்களுக்கான பதில்கள் எல்லாமே எங்கோ ஓர் இடத்தில் இருக்கின்றன. ஆனால் அவற்றை தேடிக் கண்டுகொள்வதிலேதான் சிரமம் இருக்கிறதே தவிர, அவைகள் நிச்சயமாக ஓரிடத்தில் இருக்கின்றன என்பதில் நம்பிக்கை உள்ளவளாக இருந்தேன்.

அதே காலத்தில் தான்..... எனது பகுதியில் வசிக்கும் இன்னொரு தமிழ் அகதி ஒருவர் "கண்டறியாத தமிழ் கலாசாரத்தை, சாந்தா ஒருத்தி தான் ஐரோப்பாவில் காப்பாற்றுகின்றாவாம்.......... காச்சட்டையைப் போட்டால் தேடுகிறது உடனேயே கிடைத்தவிடும். ..... நடக்கிற காரியத்தைப் பார்க்காமல்" என்ற அவரது கேலியைக் கேள்விப்பட்டு எனக்குள் சிரித்துக் கொண்டேன். நானொன்றும் தமிழ் கலாசாரத்தைப் பாதுகாக்கப் போராடவில்லை. சொல்லப் போனால் தமிழ் கலாசாரம் பற்றி இங்குள்ளவர்களைவிட எனக்கு அதிகமேதும் தெரியாது.

என்னையும் எனது விருப்பங்களையும் எனது உணர்வுகளையும் ஏன் இந்த உலகம் ஏற்றுக் கொள்ளத் தவறுகின்றது. உண்மையிலேயே ஜென்சன் கூறுவது போல எனது சேலை விவகாரம் எனக்கொரு பயிற்சிக் களமும் ஒரு வேலையும் பெறுவதற்கு பெரும் தடையாக இருக்கிறதா? அவ்வளவு தூரத்திற்கு இந்த உலகம் இன்னமும் சிறிதாகவே இருக்கிறதா? என்பவைகளே அன்று என்முன்னுள்ள கேள்வியும். அதற்கு விடைதேடும் போராட்டமாகவும் இருந்தது.

சிறிது நாட்களில் எனது பாடசாலைப் பொறுப்பாசிரியரின் விதந்துரைக் கடிதமொன்றுடன் லண்டன் சென்றால் அங்கு எனக்கான பயிற்சிக் களமொன்றினைப் பெறுவதற்கான வாய்ப்புப் பெருமளவு இருக்கவே மீண்டும் நான் ஜென்சனிடம் சென்றேன். விபரத்தை விளக்கமாகச் சொன்னேன்.

"நீ இப்போதும் அதே சேலையோடுதான் வந்திருக்கிறாய். உன்னுள் இந்தச் சேலை விவகாரத்தில் மாற்றம் ஏதும் ஏற்படாத பட்சத்தில் என்னால் உனக்கு உதவியேதும் செய்யமுடியாது" என்றபடி வெளியேறும் கதவைத் திறந்து அனுப்பி வைத்தார். டென்மார்க்குக்குள் மட்டுமன்றி ஐரோப்பா எங்குமே இந்த ஜென்சனின் அதிகாரங்கள் விரிந்திருப்பதை உணர்ந்தேன். மனதுக்குள் மட்டற்ற கோபம் அழுகை. மீண்டும் புதிய புதிய சவால்கள், புதிய புதிய உற்சாகங்கள். விரைவான தேடல்கள். விண்ணப்பங்களை எழுதி அனுப்பினேன். நேரிலும் தொலைபேசியிலும் அந்தப் பயிற்சிக் களத்துக்கான இடத்தை எடுத்துவிடுவதிலேயே அக்கறையாக இருந்தேன்.

சில இடங்களில் நறுக்கென்ற பதில்கள். சில இடங்களில் வெளிநாட்டுக்காரியின் குரல் என்றதுமே பேச்சைத் துண்டித்தல்...... இப்படி இப்படி .....நாக்கிளிப்புழுவொன்று அரைவது போல காலம் நழுங்கியது. அப்போதுதான் அவளைச் சந்திக்க நேர்ந்தது. பயிற்சிக்களம் ஒன்றுக்கான நேரடிக் கலந்துரையாடல் ஒன்றுக்காக அவள் என்னை அழைத்திருந்தாள். சென்றேன்.

காலை வணக்கம் கூறியபடியே கைகுலுக்கிக் கொண்டாள். நான் அமரவேண்டிய கதிரையை காட்டியபடியே தானும் அமர்ந்தாள். நானும் எனது சேலையை ஒதுக்கியபடி உட்கார்ந்தேன். எனது கல்வித் தராதரப் பத்திரங்களை அவள் மேசையில் வைத்தேன். அவள் அதனைத் திறக்கவே இல்லை. "உனது உந்த உடை அழகாக இருக்கிறதே" என ஆச்சரித்து முகத்தை விரித்தாள். சிரிப்பும் மலர்ந்தது. எனக்கோ ஒருவிதமாகப் போய்விட்டது. "ஆரம்பிக்கக் கூடாத இடத்திலிருந்து ஆரம்பிக்கின்றாளே" என்ற அந்தரம்.

"நீ அணிந்திருக்கும் இந்த ஆடையை எப்படி அழைப்பது" என வினவினாள்.

"சேலை' என்று அழைப்பர்" என்றேன் அமைதியாக.

ஓ! "சோலையா அழகான பெயர்" என்றபடி சிரித்துக் கொட்டினாள். "இல்லை இல்லை 'சேலை' என்று திருத்திச் சொல்லி 'சோலை' என்பதற்கு தமிழில் அழகிய பூவனம் என்கின்ற ஒரு அர்த்தம் உண்டு" என்று சொல்லவும்;

"ஆமாம் ஆமாம் அதுவும் சரிதான். உனது இந்தச் சேலையில் ஒரு பூவனமே இருக்கிறதல்லவா!" எனப் பேச்சுத் தொடர்ந்தது. பயிற்சிக் களத் தேர்வுக்கான தராதரம் மற்றும் அவை தொடர்பான பேச்சுக்களில் அவள் எனது பதில்களில் திருப்தி அடைந்தாள. அடுத்த நாளே பணியை ஆரம்பிக்கவும் சொன்னாள். மனதுக்குள் குளிர் மலை ஒன்று உருகி ஓடுவது போலவும் கற்களிடை அலைமோதி ஓசை இடுவது போலவும் ஒரு கண உணர்வு என்னை அழுத்தியது.

மீண்டும் மனதுக்குள் சந்தேகம். "நான் இப்படியான சேலை அணிந்து கொண்டேதான் அலுவலகத்துக்கு வர ஆசைப்படுகின்றேன். இதுபற்றித் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை உண்டா?" என எனது சந்தேகத்தைக் கேட்டேன்.

"ஓ! இதுவா..... ஒரு பெண்ணை நிறுத்தி, உயர்த்தி, வளைத்து, அழகாக்கி கம்பீரம் தரும் இச் சேலையை யார்தான் வெறுப்பர்." என்று தொடர்ந்தாள்....... இங்கே உனது சேலை வேலை செய்யப் போவதில்லை. அதற்குள் இருக்கும் நீயேதான் பணிபுரியப் போகின்றாய்...... அதுவுமல்லாமல்... நான் எனது ஆடையை அணிவதற்கு யாரிடமாவது அனுமதி பெறவேண்டி இருக்கிறதா? இல்லையே. அதுபோல அது எல்லோர்க்கும் பொதுவானது." என்றாள். சந்திப்புக்கு நன்றிகூறி விடைபெறுவதற்காய் அவளுடன் நான் கை குலுக்கிக் கொள்ளும் போது எனது உள்ளங்கை வியர்த்திருந்ததை உணர்ந்தேன்.

மீண்டும் ஒரு புத்துயிர்ப்புக்காய் இன்று எரிந்து கொண்டிருக்கும் காடுகளை விலக்கியபடி நான் அமர்ந்திருக்கும் பேருந்து விரைந்து கொண்டிருக்கிறது.

ஜென்சனின் பழங்கால நினைவுகளிலிருந்து அறுபட்டுக் கொள்கிறேன். பேருந்து பறக்கிறது. நான் எனது புதிய வேலையைப் பொறுப்பேற்பதற்கான தயாரிப்பு வேலைகளில் மூள்குகிறேன். எனது மனம் சொல்லிக் கொள்கிறது. "உலகம் இன்னமும் உயிரோடுதான் இருக்கின்றது" என்று.

# 3

27 - புரட்டாதி 1996 (மாலை)

ஒவ்வொரு நாள் மாலையும் சந்தோசமாக முடிவதில்லை. அதுபோலத்தான் இன்றும் எனக்கு முடிந்திருக்கிறது. இப்ப வேலை நாட்களில் அதிக நாட்கள் சந்தோசமின்றியே எனக்கு முடிந்து விடுவதுண்டு. இது எனது குறையா? அல்லது மற்றவர்களதா? என்பதை என்னால் கண்டறிய முடிவதில்லை. இன்றும் அப்படித்தான். வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன். அவள் தான்..... சாந்தா எனக்கு ரெலிபோன் செய்திருக்கவே கூடாது. செய்து விட்டாளே. விரையும் பேருந்திலிருந்தபடி எனது மீசையை வருடிக் கொள்கிறேன். மறக்க நினைக்கும் அந்தத் தமிழ் சாந்தாதான் நினைவுள் நிற்கிறாள். இன்று காலையில் தான் ரெலிபோன் செய்தாள்.

" நான் சாந்தா பேசுகிறேன்."

"ஆம் நான் ஜென்சன் பேசுகிறேன். என்ன விடயம்? நான் என்ன உதவி செய்ய வேண்டும்" என்று கேட்கிறான்.

"எனக்கு இனிமேல் உனது உதவி தேவைப் படாது. ஆனால் எனக்கு இன்று சந்தோசமான நாள்" என்கிறாள் சாந்தா ரெலிபோனில் சிரித்தபடியே.

"அப்படியென்றால்............. என இழுக்கிறேன்"

"நான் தேடிக் கொண்டிருந்த பயிற்சிக் களம் எனக்குக் கிடைத்து விட்டது." என்ற கூறி மீண்டும் சிரிக்கிறாள்.

"நல்லது. வாழ்த்துக்கள்." என்கிறேன் நான்.

ஆனால் எனது வாழ்த்துக்களில் முழு உண்மையும் இருக்கவில்லை.

"வேறு என்ன" என்றபடி பேச்சைத் துண்டிக்க முயல்கிறேன்.

"இல்லை நான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும்" என்கிறாள் வசந்தா.

"எதற்காக" என வினவுகிறேன் நான்.

"ஜென்சன்....... நீங்கள் எனது சேலையை வெறுத்திருக்கா விட்டால் நான் எனது சேலையை நேசித்திருக்க முடியாது போயிருக்கும். அத்தோடு எனது சேலையோடு என்னை விரும்பும் ஒருத்தியை நான் சந்தித்திருக்கவும் முடியாது போயிருக்கும்.

"அதற்காக நான் உங்களுக்கு நன்றிசொல்ல வேண்டும்" என்ற சாந்தா அதிகாரத் தோடு கூறினாளே.........

அதை என்னால் சீரணிக்க முடியவில்லை. அவளது வெற்றி எனது தோல்வி. குளிருக்குள்ளும் எனது முகம் வியர்க்கிறது. உண்மையில் இது அவளுக்கு சந்தோசத்தைக் கொடுக்கக் கூடிய வெற்றி தான்.

"சேலையுடன் என்னை அலுவலகத்துள் அனுமதித்து ஏற்றுக் கொள்பவர்கள் எங்கோ இருப்பார்கள். அவர்களைத் தேடிப் புறப்படப் போகிறேன்" என்று அன்று சொன்னாளே............

இந்தத் தேடலும் கண்டுபிடிப்பும் அவளது வெற்றிதான். நான் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தினேன். அவளது விருப்பத்துக்கு மாறாக நிர்பந்தங்களையும் வரையறைகளையும் ஏற்படுத்தினேன். அப்போதுதான் அவள் தனது சேலை விவகாரத்தில் அழுத்தம் கொள்ளத் தொடங்கியிருப்பாள் என நினைக்கிறேன். அது எனது தவறாகவும் இருக்கலாம். ஆனாலும்.............

நான் பயணிக்கும் பேருந்து தரிக்கிறது. ஒருத்தி ஏறிவருகிறாள். அவள் தனது தலையில் முக்காடு போட்டிருந்தாள். எனக்கு எரிச்சலாக இருந்தது. இந்த வெளிநாட்டுப் பெண்கள் இப்படித்தான். தமது இன அடையாளங்களுடனேயே மேற்குலகிலும் வாழ முயற்சிக்கிறார்கள். இதைத்தான் தவறு என்கிறேன்.

பேருந்தின் சன்னல் வழியாகப் பாா்க்கிறேன். பச்சை, மஞ்சள், சிகப்பு, கறுப்பாக கலந்து போட்ட காடாக இயற்கை தெரிகிறது. உண்மையில் இந்த நிறங்கள் கலந்து இருக்கின்றனவா? அல்லது, எல்லா நிறங்களும் சேர்ந்திருந்து கலந்திருப்பதுபோல தெரிகின்றனவா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. பேருந்து மீண்டும் தரித்துக் கொள்கிறது. இவன் கறுப்பு இளைஞன். அவனுடன் ஒரு டனிஸ் பெட்டை கைகோர்த்தபடியே ஏறிவந்து அமர்கின்றாள். அவனது தலை சுருள் சுருளாக இருந்தது. கூட்டிவாரிக் கட்டியிருந்தான். அவனது தோற்றம் ஒரு டனிஸ் இளைஞனுக்குரிய அடையாளங்கள் ஏதும் அவனிடமில்லை. முற்றாகவே மாறியிருந்தான். இவனைப் பார்க்கவும் எனக்குள் எரிச்சல் மூண்டு கொண்டு வருகிறது. தூர எங்காவது பார்த்துக் கவனத்தைத் திசை திருப்ப முயல்கிறேன். முடியவில்லை. கோபமும் ஆத்திரமும். இந்த இளைஞன் ஒருநாள் இவளை கைவிட்டு விடுவான். இவர்களால் சேர்ந்து வாழமுடியாமலிருக்கும். ஒரு நாள் வெள்ளைத் தோலும் சுருட்டை மயிருடனான ஒரு குழந்தையுடன் அவள் திரிவாள். நினைக்கவே அசிங்கமாக இருந்தது. இன்று ஏனோ எல்லாவற்றையும் முரண்பாடாகவே நினைக்கிறேன். ஒருவேளை நான் சாந்தாவிடம் தோற்றுப் போனதன் விளைவா? பேருந்து மீண்டும் தரிக்கிறது. அவளேதான். சாந்தாதான். ஏறி வருகிறாள். அதே சேலையோடு. எனதருகில் வருகிறாள். சிரிக்கிறாள் சாந்தா. அது ஒரு மழுப்புச் சிரிப்பு. பதிலுக்கு நானும் சிரிக்கிறேன். பேருந்து விரைகிறது. அருகே காடுகள பல நிறங்களோடு சேர்ந்து கலந்திருக்கக் காண்கிறேன். ●

*1997-06-05.*

# பழந் தமிழ்

சாவகச்சேரி பெருங்குளப் பகுதிக்கு நான் தான் அப்போது விதானையார். ஊர் நன்மை தீமைகளை விதானையார் தானே தீர்மானிக்கிறவர். அந்தக் காலத்தில் தான் இதுவும் நடந்தது. சாவகச்சேரியி மூன்று பெரிய கல்லூரிகளில் ஒன்று மகளிர் கல்லூரி. அந்த மகளிர் கல்லூரிக்குப் போகும் பாதையில் ஒரு சிங்கப்பூர் பென்சன்காரர் வந்து மதிலும் வீடுமாய்க் கட்டிக் குடியேறினார். வடிவான வீடு அத்துடன் பூங்கன்றுகள் சுற்றிவர நடுவில் ஒரு நீர்த் தொட்டியும். அதன் நடுவில் ஒரு பளிங்குச் சிலையும் வைத்திருந்தார். சிலைக்கு உடுப்பொன்றும் இல்லை. அம்மணமான நிலையில் அதுவும் கன்னிப் பெண்ணின் சிலை. வெள்ளைப் பளிங்கினாலான அச்சிலை வயது வித்தியாசமின்றி எல்லோரையும் பார்க்கச் செய்தது.

தோளில் வழியும் கூந்தல் கூசியபடி சரித்த தலை, நிலம் நோக்கும் விழிகள், நாணத்தில் மெல்லிய கரங்களின் நெரிப்பில் பொருமிய மார்பகங்கள், மெல்லிடை, தொடர்ந்து நிலம் வரை நீண்ட பளபளத்த கால்கள். இங்ஙனம் இவள் நிற்க, அவள் மேல் எழுந்து விரிந்து சொரிந்து விழும் குளிர் நீரில் சதா அவள் நீராடிக் கொண்டிருக்கும் தோற்றம் ஊரிடை பரவியது. கல்லூரி மாணவர்கள் படை காலை மாலை, இடைவேளை என்று வந்து இரசித்துத் திரும்பியது. மகளிர் கல்லூரி மாணவிகள் தமது போக்குவரத்துப் பாதையை திசைமாற்ற வேண்டிய அளவுக்கு அது ஒரு பெரிய விடயமாகிவிட்டது.

சிங்கப்பூர் பென்சினியர் தனது குமரை வீட்டோடு அடைத்து விட்டார், என்று கூறி..... கதையை இடைநிறுத்தி விட்டுப் பலமாகச் சிரித்துக் கொண்டார், துரைராசா விதானையார்.

கறுப்புக் கோட்டுக்கு வெளியே தெரியும் தனது இரண்டு கைகளையும் கோர்த்தபடி கால்மேல் காலிருப்பைச் சரிசெய்தபடி நிமிர்ந்து உட்கார்ந்தபடி கதையைத் தொடர்ந்தார் விதானையார். வரச் சொல்லி விட்டதற்கும் கதைக்கும் தொடர்பு விளங்காமல் பக்கத்து வாங்கில் அமர்ந்திருந்தார் சின்னத்துரை. குளிர் விலகி - சூரியகாலமாதலால் டென்மார்க்கின் அந்தச் சிறு நகரத்தின் மனிதப் பரபரப்புக்கிடையே இலங்கையிலிருந்து வந்து தமது பிள்ளைகளுடன் இருப்பவர்கள் தான் விதானையாரும், சின்னத்துரையும.

வீதிமருங்கில் உட்கார்ந்து இத்தமிழ் வயோதிபர்களை வேடிக்கை பார்த்தபடி பியர் அருந்திக் கொண்டிருந்த டனிஸ் இளைஞன் தனக்குள் ஏதோ சொல்லிக் கொண்டான்.துரைராசா விதானையார் தொடர்ந்து......

மதிலுக்குள்ளே சிங்கப்பூர் பென்சன்காரரின் பாம்பு தூக்கிய குரங்கின் நிலையும், முற்றத்தின் நடுவே குளிக்கும் நிர்வாணச்சிலையும், மதிலுக்கு வெளியே இளைஞர்களும் சைக்கிள்களுமாய்..... பிரச்சனை தொடர்ந்தது. இது பென்சன்காரர் வீட்டுப் பிரச்சனையில்லாமல் ஊர்ப் பிரச்சனை ஆகிவிட...... ஊர் விதானையார் என்ற முறையில் தலையிட்டு இறுதியில் அந்தச சிலையை அந்த இடத்திலிருந்து எடுத்துவிட்டோம்.

"ஊர் நியாயமென்று சில உண்டு. அவைகளை மீறக்கூடாது. காலத்திற்கேற்ப சில அனுசரிப்புக்கள் வேண்டுமானால் செய்யலாம். உதாரணமாக நீ சமபந்தியாய் ஊரில என்னோடு இருந்து பேசலாமோ? இல்ல. ஆனால் டென்மார்க்கில் வெளிக்குத் தெரியாமல் நாங்கள் பெருந்தன்மையாய் நடந்து கொள்கிறோம்தானே. அதற்காக சாதியள் கலந்து கலியாணம்...... நினைக்கிறியே நடக்குமென்று." சற்று கோபமாக பேசிய விதானையாரின் கைகள் நடுங்கின.

ஊரின் நன்மை கருதிச் சிலையை எடுத்தவர்கள் தனது பேரனின் நலன்கருதி எனது பேத்தி வனிதாவின் உயிரை ஏன் எடுக்கமாட்டார்கள்?........ நினைவுகளால் அதிர்ந்து போன சின்னத்துரை அந்த வாங்கில் குனிந்தபடி முகத்திடை கைகளைப் புதைத்தபடி மௌனமானார். நினைவுகள் நீண்டன...........

ஒரு நாள் கள்ளிறக்கி வரச் சென்ற தனது தம்பி மிருசுவிலில் மரத்திலேறிய சந்தர்ப்பத்தில் அவன் இருந்த மரத்தைத் தறித்து அவனை வெட்டிக் கொன்ற சம்பவமும், அவனது குடும்பம் இன்றுவரை அல்லாடும் நிகழ்ச்சிகளும் சின்னத்துரையின் மனதிலோடிக் கண்கள் நீரில் நிறைந்து மனது விம்மும் போது அவரின் முன்னால் இரண்டு சப்பாத்துக் கால்கள் தெரிந்தன. நிமிர்ந்தார் சின்னத்துரை. அது அந்த டனிஸ்காரன். குடித்து முடிக்காத அந்த பியர் போத்தில் ஒரு கையிலும், மறுகையை அவர் தோள்களில் வைத்து அவரை அணைத்தபடி சமாதானப் படுத்தும் பாணியில் ஏதோ சொன்னான். கூச்சமிகுதியால் விடுவிப்பதுபோலத் தன்னை விடுவித்துக் கொண்டார் சின்னத்துரை.

சூரியகாலமென்பதனால் இதமான காற்றும் பசிய இலைகளின் சலசலப்பும்

பட்சிகளின் பாட்டும் வெளியெங்கும் நிறைந்திருந்தது. இவைக்கும் அப்பால் சின்னத்துரை பெரியவரின் வழமையான அந்தத் தளர்ந்த நடை வீடு நோக்கி ஆடிக் கொண்டு போனது.

விதானையார் துரைராசாவின் பதட்டம் குறையவில்லை. இருக்கையிலேயே கால்கள் நடுங்கின. கண்களைத் தூர விலக்கி சிந்தனையைத் திசைதிருப்ப விரும்பினார். அது நன்றாகவே இருந்தது. அங்கே இளம்பராயத்தினர் இருவர் முத்தமிட்டுக் கொண்டிருந்தனர். அதுவும் அயலில் அயலறியாத முத்தம். கட்டுப்பாடற்ற சமூகமொன்றுள் தனது சந்ததி அகப்பட்டதன் விளைவே இன்று தனது பேரன் ரமணன் சாதி கடந்து கல்யாணம் வரை வரத் துணிச்சலையும், முதியோரை மதிக்காத தன்மைகளையும் வளர்த்திருக்கிறது எனத் தன்னுள் எண்ணிக் கொண்டார். இப்ப கிரங்க முத்தங்கள் பற்றிய அவரது எரிச்சல் இன்று நியாயமானதே. ஆனால், அவரது ஆறுமாதகால வெளிநாட்டு வாழ்க்கையுள் அவருக்கிருக்கும் அச்சமூகம் பற்றிய அறிவும், ஒரு உயர் மத்தியதர தமிழ் வாழ்வில் கட்டுண்டு கிடந்து முதுமையின் எல்லையில் நிற்கும் இவரது பார்வையையும் அப்படித்தான் நினைக்கத் தோன்றும். அது இயல்பானதும் கூட. கட்டுண்ட தமிழ்வாழ்வில் வளர்ந்த இவரது எண்ணங்கள், விருப்பங்கள் எல்லாமே தனது பேரன் ரமணனின் திருமண விவகாரம் தான். எப்படியாவது இதனை நிறுத்தி விட வேண்டுமென்ற ஆர்வம் கத்தியோடு நின்றது. எழுந்து வீடு நோக்கி நடக்கலானார்.

தான் எடுத்த முடிவுக்கே வெற்றி வேண்டும் என்ற விருப்பம் அனலாய்க் கொதித்தது. ஏதோ அடுத்த திட்டமொன்று உள்ளவர் போன்ற தெம்பு அவரது நடையில் கிடந்தது. தூரத்தே ஒரு டனிஸ்காரன் தனது நாயுடன் வந்து கொண்டிருந்தான். விதானையார் ஒரு ஓரமாக ஒதுங்கி நடந்தார். நாய் இவரைப் பார்த்து இரண்டு தடவை குலைத்து விட்டு நடந்தது. நாயின் குலைப்புடன் அந்த டனிஸ் காரன் இவரைப் பார்த்துத் தனது மொழியில்....... "நரகங்களே வீட்டுக்குப் போங்கள்" என்று கூறினான். மொழிபுரியாததனால் விதானையார் சிரித்தபடி நகர்ந்தார். அவன் ஏதாவது நாய்க்குக் கூறியிருப்பான் என்பது அவரது ஊகம். அழுத்தமான தார்வீதிகளில் அவரது கறுப்புச் சப்பாத்து அசைய நன்கு விறைத்த தேகத்தில், சாதிக்கும் அதிகார மனம் நெஞ்சை நிமிர்த்த வீட்டுள் நுழைந்தார் விதானையார். வீடு அமைதியாக இருந்தது. ரமணனின் தகப்பனும் தாயும் சோபாச் சூட்டில் தொலைக்காட்சியில் மூழ்கியிருந்தனர்.

புதிதா. இவள் ரமணனின் இளைய தங்கை. எட்டு வயதுச் சிறுமி. அவளும் அவர்களுடன் ஒட்டிக் கொண்டிருந்தாள். மகன் விவகாரத்தில் தந்தையாரை விட, பேரன் விதானையார் துரைராசா அதிக கவனமெடுப்பதில் தாயாருக்குச் சந்தோசம் அதிகம். இந்த விவகாரத்தில் இதற்கு மேல் என்ன என்பது போல அவளும் இன்று சும்மா இருந்தாள்.

"ரமணன் எங்கே?" என விதானையார் உரத்துக் கேட்கவும், ரமணன் வெளியே வந்தான். வனிதா அதே அமைதியுடன் அவன் பின் வந்தாள். விதானையார்

அமைதியானார். பக்கத்தே கிடந்த கதிரையில் அமர்ந்து கொண்டார். எல்லோரும் அமைதியாயினர். தொலைக் காட்சி தன் பாட்டில் எதையோ விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தது.

"தாத்தா........" ரமணன் தொடங்கினான். "உங்களுக்கு ஓய்வுகாலம் இது. நீங்க இப்போ விதானையாரில்லை. மாட்டிறைச்சி அடுப்படிக்குள் அவிந்து கொண்டிருக்க..... நீங்கள் வராந்தாவில் இருந்து இந்துக்கள் புலாலுண்பதில்லையென்று டனிஸ்காரருக்குக் கூறிப் பெருமைப் படுகிறவர்கள். உங்கள் மூதாதையர் விட்டுச் சென்ற பொய்களுடனேயே வாழ்வைத் தொடங்கி வாழ்ந்து முடியும் தறுவாயில் அதையே என்னிடம் தர கை நீட்டுகின்றீர்கள். நான் அகதியானபோது, உங்கள் முதுசங்களை இழந்த போது, அதனுள் எல்லாமே எரிந்து போயிற்று. பெரியவர்களை மதிக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்கின்றீர்கள். பெரியவர்கள் என்பது உயர்ந்த சிந்தனைகளையே குறிப்பாக நினைக்க வேண்டும். ரமணன் என்ற அகதிக்கும் வனிதா என்ற ஈழவளுக்கும் எல்லாமுதுசங்களுமே சாம்பாரானதாய் இருக்கட்டும்......" அமைதியாகச் சொல்லி முடித்து நிமிர்ந்தான் ரமணன்.

விதானையாரைக் கதிரையில் காணவில்லை. தொலைக்காட்சியை அணைக்க முயன்றார் ரமணனின் அப்பா. சிறுமி புதிதா அதை அணைக்கவிடாது தடுத்தாள். அப்பா சொன்னார் "இது வயது வந்தவர்களுக்கு மட்டும் தான்" என்று. "அப்போ எப்போது குழந்தைகளுக்கு மட்டும் படம் போடுவார்கள்?" என்று புதிதா கேட்டாள். அப்பா சும்மா இருந்தார். அவரும் பழம் பெரும் தமிழர் தானே!

# குளிரும் போரும்

அந்தச் சிறுகடல் நீரால் நிரம்பி வழியும் காலமது. ஈழத்தில் நான் பிறந்து வளர்ந்த கிராமத்தின் மாரி காலம். அந்தக் கிராமத்தில் நல்லையா என்றொருவர் இருந்தார். வேட்டை ஆடுவதில் மிகுந்த திறமையும், அனுபவமும் உள்ளவர். அதனால் அவரை வெடிகார நல்லையா என ஊர் அழைத்து வந்தது. இழுத்து இறுக்கிக் கட்டிய காற்சட்டையோடு பாய்ந்து வரும் வெள்ளத்தில் புரண்டு விளையாடித் திரிந்த அந்தக் காலம் மிக அழகானதெனக்கு. அந்த ஊரின் அம்மன் கோவில் முன்னால் வெள்ளத்தால் தளதளத்துக் கொண்டிருக்கும் அச்சிறு கடலில் கறுப்பு நிறச் சிறகையினங்கள் வந்து விழுந்து குவிந்துபோய் நீரில் கிடக்கும். அந்தச் சிறகையினப் பறவைகள் எங்கள் நாட்டில் நிரந்தரமாக வாழ்பவையல்ல . அவை அயல் நாட்டுப் பறவைகள்.

வின்ரர்காலக் குளிரைத் தாங்க முடியாது புலம்பெயர்ந்து வெப்ப நாடுகளை நோக்கி வந்து குறுங்காலமொன்றில் தங்கி வாழ்ந்து விட்டுத் தமது சொந்த நாடுகளில் காலநிலை சீரானதும் - தமது சொந்த நாடுகளுக்கு மீண்டும் திரும்பி விடும் பறவைகள்.

அப்போதெல்லாம் அப்பறவைகளின் புலம் பெயர்வு பற்றி நான் அதிகம் அக்கறைப் பட்டதில்லை. ஆனால் அந்த விருந்தினப் பறவைகளை சுட்டுக் கொல்லுதல் இலங்கைச் சட்டத்தில் தடை செய்யப் பட்டிருந்தமை எனக்குப் பிடித்த விடயமாக அன்றிருந்தது. அது ஒரு நல்ல விடையமும். அத்துடன்

மகிழ்ச்சிக் குரியதும் கூட...... வானத்தில் எப்போதும் நேர்கோடாகவும் சமாந்தரமாகவும் பறக்கும் பழக்கமுள்ள இப்பறவைகள் ஒவ்வொரு வருடமாரி காலத்திலும் அசசிறுகடலுக்கு வந்து சேர்ந்து விடும். தவறாது வரும் குளிர் போல அவையும் அச்சிறு கடலுக்கு வந்துவிடும்.

அம்மாரி காலத்தில் ஒரு நாள் 1960 களின் நடுப்பகுதிக் காலம்...... அச்சிறுகடலை நோக்கித் தரையில் படுத்தபடி நழுந்திச் செல்லும் நல்லையாவின் கையில் துவக்கு. ஓசைப்படாமல் புல்லோடு புல்லாக. சேற்றோடு சேறாக நுழுந்தி நுழுந்தி......... அச்சிறகைகளுக்குச் குறிவைத்தபடி இரட்டைக் குழல் துப்பாக்கியோடு அவர் அணுஅணுவாக நகர்ந்து கொண்டிருக்கிறார். நல்லையாவின் துவக்கு விடயம் அறியாத பறவைகள் தம்பாட்டில் விளையாடிக் கொண்டிருந்தன.

அக்கடலோரக் கரைதோறும் எப்போதும் நிரம்பிக் கிடக்கும் ஆட்காட்டிக் குருவியின் சப்தத்தை எழவிடாது ஓசைப்படாமல் வெடிக்கார நல்லையாவின் துவக்கு நகர்ந்து கொண்டிருக்கிறது. சரி.... வெடிவைக்கக் கூடிய தூரத்தை அண்மித்தாயிற்று. அவர் வில்லை இழுத்து விடுகிறார்.

வெடிச் சத்தத்தில் சிறகையினங்கள் அலறியடித்துக் குவியலாக மேலே எழுகின்றன. வெடிக்கார நல்லையாவின் அடுத்த தோட்டா வெடிப்பதங்குள் குறைவானத்தில் எழுந்த அப்பறவைகளை சுட்டு வீழ்த்தியபடி 10. 15 தோட்டாச் சத்தங்கள்.

வெடிக்கார நல்லையா வெடி வந்த திசை நோக்கிப் பார்க்கிறார். அக்கடலின் அடுத்த கரையில் முகாமிட்டிருக்கும் ஆமிக்காரர்கள் அவர்கள்.

கறுப்பு லோங்சும், வெள்ளை ரீசேட்டுமாக மீசையில்லாத வழித்த முகத்தோடு அந்தப் பச்சை நிற றக்கில் அவர்கள் சிரித்தபடி துப்பாக்கியுடன் நின்றனர். வெடிக்கார நல்லையா அவர்களிடம் செல்கிறார். அந்த ஆமிக்கார இளைஞர்கள் சிரித்தபடி சிங்களம் கலந்த தமிழில் அவருடன் கதைத்துக் கொள்கின்றனர். சுட்டு வீழ்த்திய அந்த நூற்றுக் கணக்கான பறவைகளை எல்லோரும் சேர்ந்து பொறுக்கி எடுத்து வந்து தமது றக்கில் போட்டுக் கொண்டு நல்லையாவிற்கும் 10. 15 பறவைகளைக் கொடுத்து விட்டு அந்த ஆமிக்கார றக் மறைந்து விடுகின்றது.

அன்று நல்லையாவிடமும் துவக்கு. அந்தக் கால ஆமிக்காரரிடமும் துவக்கு. ஆனால், ஆளை ஆள் சுட்டுக் கொண்டதில்லை. பயந்து ஒதுங்கினதில்லை. சிரிப்புக்கள் கைகோர்த்துக் கொண்ட காலம்.

லீவு நாட்களில் ஆமிக்காரர் வீடு செல்லும் போது பினாட்டும், கருவாடும், மாம்பழமும் பனங்கிழங்கும் கட்டி வழியனுப்பி வைக்கும் குறையற்ற அந்தக் கிராமத்தவர்களுக் கென்று அன்னாசிப் பழமும், பட்ட புறாட்.

றம்பட்டான், மங்குஸ்தான் பழவகை முடிச்சுகளோடு லீவு முடித்துவரும் ஆமிக்காரர் சுமந்து வருவர்.

"இப்படியாக நாங்கள் அவர்களோடு வாழ்ந்த காலம் ஒன்றும் உண்டு" என்று என்னைப் பேட்டி காண வந்திருந்த அந்த டனிஸ் பாடசாலை மாணவர்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அடுத்தடுத்து வழமையான கேள்விகள். யுத்தம். பிரிவு. கவலை, வெற்றி என்றெல்லாம் பதில் சொல்லிக் கொள்கிறேன். தொடர்ந்து அந்தத் தங்க முடிக்காரி ஒரு கேள்வி கேட்கிறாள்.

"உலகமெலாம் பரந்திருக்க..... நீ ஏன் டென்மார்க்கைத் தேர்ந்தெடுத்து வந்தாய்? என்பதுவே கேள்வி.

"குளிருக்குப் பயந்து வாழமுடியாமல் எங்கள் நாட்டுக்கு புலம் பெயர்ந்து வரும் அந்தச் சிறகையினப் பறவைகளை "ஏன் நீங்கள் இலங்கைக்கு ஓடி வந்தீர்கள்? என்று நாம் கேட்டதில்லை" என்று பதில் சொல்கிறேன். அவள் சிரிக்கிறாள்......... அவளின் அடுத்த கேள்வி......... அந்தச் சிறகையினங்கள் குளிர் காலம் முடித்துத் தமது நாட்டிற்கு திரும்புவது பற்றியதாக இருக்கலாம். நான் ஆர்வத்தோடு பதில் சொல்லத் தயாராகினேன்.

●

# குதிரைகள்

அன்றும் அவன் அதே புகையிரதப் பெட்டிக்குள்ளே தான் இருந்தான். அவனை எனக்குச் சில காலங்களாகத் தெரியும். ஆனால் நான் அவனுடன என்றும் கதைத்ததில்லை. அவனும் நானும் டென்மார்க்கில் அகதிகள்.

நான் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவன். அவன் சோமாலியாவிலிருந்து புலம் பெயர்ந்தவன். அவனுக்கு வயது 50 இருக்கும். மெலிந்த கறுத்த உருவம். தலையில் அதிகம் முடி இல்லை. ஒரே ஆடையையே அவன் அணிந்திருப்பான். அவை அழுக்காகவும் இருக்கும். நான் அவனைக் காணும் போதெல்லாம் அவன் மது அருந்திய படியே இருப்பான்.

தனது தாய் மொழியில் கதைப்பான். எழுந்து நின்று ஜன்னல் வழியே கத்துவான். மதுப் போத்தலை உயர்த்திப் பிடித்தபடி நாட்டுப் பாடல்களைப் பாடிச் சிரிப்பான். அந்தப் புகையிரதப் பெட்டிக்குள் இருக்கும் டனிஸ் மக்கள் அவனை பார்க்கார்கள். ஆனால் ஒன்றுமே சொல்லிக் கொள்ளவும் மாட்டார்கள். இதனைப் பார்க்க எனக்கு தர்ம சங்கடமாக இருக்கும்.

சோமாலியாக்காரனோ அதைப் பற்றி அக்கறைப் படமாட்டான். அவன் தனது தாய் மொழியில் கதையும், சிரிப்பும், பாட்டுமாக இருப்பான். அவனது செய்கைகள் எனக்கு எரிச்சலைத் தருவன. இன்றும் அவன் நான் இருந்த புகையிரதப் பெட்டிக் குள்ளே தான் இருந்தான். "இப்படியான அகதிகளாலேதான்...... இந்த நாட்டு மக்கள் அகதிகளை வெறுக்கின்றார்கள்..." என்று எனது அருகிலிருந்த அந்த 18 வயது டனிஸ் பையனிடம் சொன்னேன். அவன் சிரித்தான்.

அந்தச் சோமாலியாக் காரனின் அட்டகாசம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

மீண்டும் "இப்படியானவர்கள் தான்......... என்று சொல்ல வந்த என்னை அந்த 18 வயது இளைஞன் இடைமறித்து விட்டு". அவன் என்னையும் உன்னையும் விடப் பலவீனமானவனாக இருக்கிறான். இதைப் புரிந்து கொண்டாயானால் அவன் மீது நீ வெறுப்படைய வேண்டியிருக்காது.........

.........ஒரு அகதியாக வாழும் உன்னாலேயே அவனது உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லையா? என்று அவன் கேட்டதும் நான் எனக்குள் வெட்கப் பட்டுக் கொண்டேன். ஒரு மேற்குலக இளைஞன் எவ்வளவு எளிதாக அகதிகளாகிய நாங்களே எங்களுக்குள் இணைவாக்க மின்றி இருக்கிறோம் என்பதை தெளிவாக்கி இருக்கிறான். புகையிரதம் நின்றது. எல்லோரும் இறங்கி..... பிரிந்தோம். நல்ல வெய்யில். வீதியில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பது போல் எனக்குள் ஒரு தோற்றம்...... நடந்து கொண்டிருக்கிறேன். "அவன் என்னையும் உன்னையும் விட பலவீனமானவனாக இருக்கிறான்" என்ற அந்த டனிஸ் இளைஞனின் வார்த்தைகள் சேமக்கல ஒலிபோல் கேட்டுக் கொண்டே இருக்கிறது. நடந்து கொண்டே இருக்கிறேன்.

"நில்லடா" என்றது ஒரு தமிழ்க் குரல்.

நடுவீதியிலேயே நின்று விட்டேன். ஒருவன் என்னை நோக்கி அவசரமாக வருகிறான். அவன் கோபமாக இருந்தான். தாறு மாறாக என்னை அவன் அடிக்கிறான்.

தினவெடுத்த குதிரைபோல அவனது கோபத்திற்குக் குதிரைத் தொழுவத்து வைக்கோல் போல அவனின் அடி உதையில் நான் மிதிபட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு இன்னமும் காரணம் புரியாத அந்தச் சம்பவம் முடிந்து போனது.

அந்தத் தமிழன் தன் வழியே போனான். நான் என் வழியே வந்தேன். இப்போதும் தான் அந்த டனிஸ் இளைஞன் சொன்ன...... "அவன் என்னையும் உன்னையும் விட, பலவீனமானவனாக இருக்கிறான்" என்ற அந்தப் போதமொழி சேமக்கல ஒலியாய் என்னுள் அதிர்ந்து கொண்டிருந்தது. சிரிக்கிறேன். நான் இனிமேற் தான் அந்த சோமாலியாக்காரனையும் நேசிக்கப் போகிறேன்.

"பலவீனங்களை ஆட்கொள்வதே பலம்"

●

# குறை மதி

நாதன் அவனது பெயர். டென்மார்க்கில் பல வருட வாழ்வில் பலரிடமும் நல்ல பெயர் எடுத்தவன். தனியாக ஒரு வீடும் வாங்கி அன்றாடப் பாவனைக்குரிய சகல சாமான்களுடனும் வசதியாக வாழ்பவன். வயது 29. இவனைப் போன்ற இங்கு வாழும் ஏனைய இளைஞர்களைப் போலன்றி வெறுக்கத்தக்க பழக்க வழக்கங்கள் எதுவுமில்லாதவன். தானுண்டு தன் தொழிலுண்டு என்பதும், தேவையற்ற செலவுகள் செய்யும் பழக்கமற்றவன் என்பதனாலும் தாராளமாகவே யாழ்ப்பாணத்தில் வாழும் தனது பெற்றோருக்கும் சகோதரர்களுக்குமாகப் பண உதவி செய்தும் அவர்களது நல்வாழ்க்கையில் மனம் பூரித்துப் போயிருப்பவன்தான் நாதன். இன்று சனிக் கிழமை என்பதனால் அவனுக்கும் விடுமுறை. நேரம் 10 மணியாகியும் எழுந்திருக்க மனமற்ற வேலைப் பளுவில் உடல் அசதியை போக்கிக் கொண்டிருந்தான் நாதன். கோழிப் பண்ணை ஒன்றில் தான் வேலை. உயிர் கோழிகளைக் கத்தக் கத்த தூக்கி - அவைகள் இறைக்கைகளை அடிக்க அடிக்க கால்களால் விறாண்ட விறாண்ட ஓடிக் கொண்டிருக்கும் கம்பிகளில் கோழிகளைப் பிணைத்து விடுவதே அவனது அன்றாட வேலை.

வண்ணவண்ணப் பூக்கள் நிறைந்த உறை அணிந்த போர்வையை நகர்த்தி அதனுள் இருந்து தனது கைகளை வெளியே எடுத்து பார்க்கின்றான் நாதன். அவனது வலது கரத்தில் கோழிக் கால்கள் கீறிய விறாண்டல்களை அடுத்த கரத்தினால் தடவிக் கொள்கிறான் நாதன். தடவிக் கொள்கின்ற அடுத்த கரத்திலும் அதே போன்று காயங்கள் தான். ஒரு கரத்தை மறுகரத்தால் மாறிமாறித் தடவிக் கொள்கின்றானே என்ற நினைவுவர கட்டிலிலிருந்து எழுந்து குளியலறைக்குள் நுளைந்தான். சுவர்க் கண்ணாடி அவனை என்றும் போல் காட்டியது. கச்சிதமாக

மேவியிழுக்கப் பட்ட கேசம் அழகாக இருந்தது. காலைக் கடன்கள் கச்சிதமாக முடிந்தன. இப்போது இன்னமும் அழகாக இருந்தான் நாதன். வெண்பற்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டன அவனது கறுப்புக் கண்கள். நெஞ்சில் சிந்திக் கிடந்த நீர்த் திவலைகளை அந்த நீலத் துவாயினால் துடைத்துக் கொண்டான். நாதனுக்கு மூத்த சகோதரிகள் மூன்று பேருக்கும் நல்ல சீதனம் கொடுத்து நல்லவரன்கள் பார்த்துப் பிரச்சனையையும் முடித்து வைத்தவனும் நாதன்தான். இதனாலும் அவனது மனதுக்கு ஒரு சுமை தளர்ந்த உற்சாகம் தான். சென்ற வருடம் வரைதான் அந்தச் சுமை தளர்ந்த உற்சாகமும் நீடித்தது. இனி ஐயா அம்மாவின் வாழ்வுச் சுமையைப் போக்குவது என்பது பெரியசுமையுமல்ல என நினைத்துச் சமாதானமாக இருந்தவன் தான் நாதன். ஆனால், இப்போது ஒரு புதிய பிரச்சனை பூதாகரமாக எழுந்து நின்றது. முடிவெடுக்க முடியாமல் தனக்குள் தவித்துக் கொண்டிருந்தான் அவன். அடுத்தடுத்து கேள்விகளே தலை தூக்குகின்றனவே தவிரவும் பதிலோ அல்லது திடமாக இந்தப் பிரச்சினைக்கு முடிவெடுக்கவோ அவனால் முடியவில்லை. மனம் விட்டுப் பேசக் கூடிய நண்பர்களோ அல்லது வயது வந்த ஆட்களோ அவனுக்கு இந்த வெளி நாட்டு வாழ்க்கையில் இல்லை. பழகுபவர்களும் சீட்டு, வட்டி, கொடுக்கல் வாங்கல்களோடு சரி. குசினிக்குள் நின்றவாறே வீட்டின் முன்னால் நிற்கும் அவனது சிகப்புக் காரை பார்த்துக் கொண்டே தேனீர் தயாரிப்பில் அக்கறையாக இருந்தான். மனம் விட்டுப் பழகக் கூடிய ஒரு குடும்பத்தினர் அந்தப் பகுதியில் வாழ்ந்தார்கள் தான். முன்னரெல்லாம் அடிக்கடி அவர்கள் வருவதும் அவனை அழைத்து விருந்து கொடுப்பதும் அவர்களின் வழக்கமாக இருந்தது. ஆனால் சென்ற வருடக் கோடை கால விடுமுறைக்கு யாழ் சென்று நாதன் தனது திருமணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய கையோடு - அவர்களும் செத்த மாட்டில் உண்ணி கழர்வது போலத் தம்மைக் கழற்றிக் கொண்டு விட்டார்கள். இப்போதெல்லாம் தனிமைதான்.

இத்தோடு இந்தப் புதிய சிக்கல் வேறு அவனை ஆட்டிப் படைத்தது. இந்த விடயத்தில் முடிவெடுக்கவே அவனுக்குப் பயமாகக் கூட இருந்தது. அதோ பாபுவேதான் வருகிறான். அழைப்பு மணி அடிக்கு முன்னரே கதவைத் திறந்து நாதனின் அந்த ஒரு சிரிப்போடு பாபுவும் வந்து சோபாவில் அமரவும் நாதனும் தேனீரைப் பாபுவின் முன்னர் வைத்துக் கொண்டு தானும் அமர்ந்து கொண்டான்.

"என்ன நாதன் எப்பிடி இருக்கிறாய். கனகாலம் காணேல்ல...... இலங்கைப் பயணம் எல்லாம் எப்பிடி? உன்ர கலியாணம் எப்பிடி நல்லாய் நடந்ததோ?"

இப்படித் தனது கேள்விகளைக் கேட்டுக் கொண்டே தனது தேனீரை உறிஞ்சினான் பாபு.

"ஓமோம்........." என்று இழுத்தபடியே நாதன் அப்பேச்சுக்களில் சுவாரசியமற்றவன் போல் இருந்தான்.

"தமிழ் ரேடியோவைப் போடன் என்ன சொல்லுகினம் எண்டு கேப்பம்" என்ற பாபுவுக்காக ரேடியோவைப் போட்டான் நாதன். ரேடியோவில் விளம்பரங்கள் போய்க் கொண்டிருந்தன.

"இண்டைக்குத் தமிழினம் தான் உலகம் முழுக்க ஓடிக் கொண்டிருக்கிறது எண்டு எனக்குத் தெரியும். ஆனால் இன்றைய ரேடியோ கூறுவதுபோல படையப்பாதான் உலகம் முழுக்க ஓடிக் கொண்டிருக்கிறது. என்று தான் சொல்லுகினம்." என்று சிரித்துக் கொண்டான் பாபு.

"நீ இயக்கக் காரன் பாபு உப்பிடித்தான் கதைப்பாய். ஆனால், என்னைப் போல ஆக்களுக்கு இந்த படமும். பாட்டும் இல்லை எண்டால்.......... என்ன பொழுது போக்கு. மனிசர் சந்தோஷமாகவும் இருக்கவேணும் தான்" என்ற நாதனை இடைமறித்து.......

"அது இருக்கட்டும் நாதன் எங்க உன்ர மனிசியின்ர படமேதும் கிடந்தால் காட்டன் பாப்பம்" என்ற பாபுவின் ஆர்வத்தை நிறைவு செய்வது போல் ஒரு புகைப்பட அல்பத்தை பாபுவிடம் கொடுத்தான் நாதன்.

முதலாவது படம். அது அழகானது.

அவள் தான் நாதனின் மனைவி. பெயர் மதி வயது 25. ஒரு நீலச் சேலையில் இருந்தாள். நீளமான கூந்தல் பின்புறமாக விழுந்து கிடந்தது. ஒரு மல்லிகைச் செடியில் பூக்கொயவது போன்ற சாயலுடன் ஒரு கையை உயர்த்தியபடி நின்றிருந்தாள். அடுத்த படம் அதுவும் அழகாகவே இருந்தது. இரு மண்ணிறச் சேலை. புலிகளின் வரிக்கோடுகள் போலக் கறுப்பு மஞ்சல் நிறங்களில். நாதன் ஒரு நீல நிறமோட்டார் சைக்கிளில் அமர்ந்திருக்க, அவனது தோளைப் பற்றியபடி அவளது முகம் நாதனின் முதுகுப் புறத்தில் மறைந்திருக்க பவ்வியமாக அமர்ந்திருந்தாள்.

"சிங்கப்பூரிலிருந்து நான் எடுத்துக் கொண்டுபோன சேலைகள் தான். வடிவாக இருக்கிறதா." என அபிப்பிராயம் கேட்டபடியே அல்பத்தின் அடுத்த பக்கத்தைப் புரட்ட உதவினான் நாதன்.

அடுத்த படமும் அழகானது தான். இப்போது சேலையுள் அவளில்லை. நீலநிறப் பாவாடையும் அதற்கேற்ற இளநீல மேற்சட்டையும் அணிந்திருந்தாள். மதி. முற்றத்தில் கட்டப்பட்டிருக்கும் ஒரு பசுமாட்டிற்குக் கிழுவங்குழை தின்னக் கொடுப்பது போன்ற காட்சியில் நாதனின் மனைவி நின்றிருந்தாள். "நல்லாய் இருக்குது நாதன்". என்றபடி புகைப்படங்களை விரைவாகத் தட்டி முடித்தான் பாபு.

"நாதன்.......... உன்னில் எனக்குப் பிடிச்சது என்னவென்றால்..... உன்ர சொந்த மச்சாளையே கலியாணம் செய்திருக்கிறாய். அதுவும் ஒரு சதம் சீதனமும் வாங்காமலேயே. கலியாணச் செலவுகளையும் பொறுப்பெடுத்துச் செய்து முடித்ததுதான். இப்ப வெளிநாட்டு மாப்பிள்ளையெண்டால் லட்சக் கணக்கில் சீதனமும் வீடு வாசலெண்டு வாங்கித்தான் கலியாணம் செய்து இஞ்சை கொண்டு வந்து அதுகளையும் வேலைக்கு அனுப்பிப் படாத பாடுபடுகுதுகள்" என்றான் பாபு.

"அது சரி நாதன் உன்ர மனிசியின்ர அத்தனை படங்களையும் காட்டினாய் பாத்தன்....... எங்களின்ர யாழ்ப்பாணத்தையும் அதன் பின்புலத்தில பார்க்க எவ்வளவு ஆசையாவுமிருக்கு. அதேவேளை அந்த எங்கட யாழ்ப்பாணம் எவ்வளவு அழிஞ்சு போயும் கிடக்குது..... கண்டிய".

"ஓம் பாபு...... நாட்டை அழிச்சுத்தான் போட்டாங்கள்....... சனங்களும் சோமாலியாவை மிஞ்சிற அளவுக்கு கடினமான நிலைதான். எப்பிடி இருந்த சனங்கள். இன்று வறுமையும், மனநோயுமாய் துவக்குக் குள்ள கூனிப் போய் இருக்குதுகள். அங்க நிம்மதியே இல்ல....." என்றான் நாதன்.

"அது சரி நீ காட்டின அல்பத்தில ஒரு விசயத்தக் கவனிச்சன்........ உன்ர மனிசியின்ர படங்கள் எல்லாத்திலும் பின்புறமாகவே நிக்கிறா...... ஒரு படத்தில தன்னும் அவவின்ர முகத்தப் பார்க்க முடியேல்ல." என்ற கேட்டு விட்டான் பாபு.

இந்தக் கேள்வியுடன் நாதனின் முகம் மாறிவிட்டது.

"இல்ல இல்ல....... எடுத்த படங்கள்......." என்று சமாளித்தவாறு கையில் தயாராக வைத்திருந்த பணத்தைக் கொடுத்ததும் பாபு வாங்கிக் கொண்டு விடை பெற்றான்.

இப்போது தான் நாதனின் மனம் மிகவும் சிக்கலாக இருந்தது. "காசு சேர்க்க வந்து குழப்பிப் போட்டுப் போறான். சீ......" என்று சொல்லிக் கொண்டான் நாதன்.

எதைக் கதைக்கவோ பார்க்கவோ கூடாதென்று இருந்தானோ அதையே இன்று விடுமுறை நாளிலும் அதுவுமாய் ஆரம்பித்து விட்டதே என்று தனக்குள் அலுத்துக் கொண்டான். 'மதி' இந்தப் பெயரை உச்சரிக்கவே எரிச்சலாக இருந்தது.தனது திருமணத்திற்காக யாழ் சென்ற போது அவளது பெயரை உச்சரித்தபோது இருந்த இன்பம் இப்போது இல்லை. தனக்குத் திருமணம் என்ற பெயரில் நடத்திய பெற்றோரின் சொல்லை மீற முடியாமல் எல்லாமே நடந்து முடிந்து விட்டது. காலம் கடத்தாமல் முடிவெடுக்க வேண்டும். அலுவல்களை உடனடியாகச் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தோடு ஒரு பேப்பருடனும் பேனாவுடனும் உட்கார்ந்தான், நாதன்.

...........................

அன்புடன்..........

...................இப்படித்தான் கடிதம் ஆரம்பித்தது.

அவர்களின் அந்தச் சிறிய குடிசை வீடு அமைதியாக இருந்தது. முன்னால் விரிந்த அந்தச் செம்பாட்டு முற்றத்தில் கறுத்தக் கொழும்பான் மாமரமொன்று எழுந்து நின்றது. முற்றத்தின் ஒரு கோடியில் கட்டப்பட்டிருந்த பசுமாடொன்று கிழித்துப் போட்ட பனையோலையைத் தின்று கொண்டிருந்தது. தண்ணிக் குடத்தடியில் ஒரு கதலி வாழை. குட்டிகளோடு நின்றது. இளங்காலை வெயிலைக் கண்டு பின் வளவுத் தென்னையில் அணிலொன்று கீச்சிட்டது. மாமரத்தில்

கிளிகளின் கீச்சல் கேட்டு சின்னையா முற்றத்திற்கு வந்தார். சின்னையாவுக்கு 65 வயது மதிக்கலாம். மதியின் ஐயா. சின்னையாவின் ஒரே ஒரு மகளான மதியின் திருமணம் சந்தோசமாக நடந்து முடிந்து விட்ட திருப்தி இன்னமும் அவரது முகத்தில் தெரிந்தது. சந்தோசமாக டென்மார்க்கில் வாழும் நாதனின் முறை மாமா. நாதனின் குடும்பம் ஓரளவு வசதி படைதத்வர்கள். ஆனால் சின்னையாவோ புகையிலைத் தோட்டமும். வீட்டுப் பராமரிப்புமாக அளவான உழைப்பும் ஆடம்பரமற்ற வாழ்க்கையுமாக வாழ்பவர். மதியும் நாதனும் சிறுவர்களாக இருந்தபோதே சின்னையாவும் அவரது அக்கா பாக்கியமும் பேசிக் கொண்டபடி அவர்களது திருமணத்தையும் செய்து முடித்து விட்ட திருப்தியில் உண்மையாகவே அவர் சந்தோசமாகவே இருந்தார்.

"இனி என்ன........ ஓரிரு மாதங்களில் நாதனும் மதியை டென்மார்க்கிற்குக் கூப்பிடுவான். கலியாணத்திற்கும் ஒரு சதச் செலவும் எங்களுக்கு அதுகள் வைக்கேல்ல...... அதுக்காகவேனும் மதிப் பொட்ட டென்மார்க்கிற்குப் போகேக்கயாவது ஒரு சோடிக் காப்பு வாங்கிக் குடுத்து விட வேணும்" என சின்னையாவின் மனம் சொல்லிக் கொண்டது. இது மாம்பழக் காலம் என்பதனால் மாமரத்தைக் குறிவைத்துப் பச்சைக் கிளிகள் மரத்தைச் சுற்றிச் சுற்றி பறந்து கொண்டிருந்தன. இந்த மாம்பழங்களை விற்றால் கையில் கிடக்கும் காசையும் வைத்து ஒருசோடிக் காப்பு மகள் மதிக்கு வாங்கிவிடலாம். இன்று மாலைதான் கொக்குவில் குமாரசாமி மாம்பழங்களை வாங்கிச் செல்ல வருவதாகக் கூறியிருந்தார். அதற்குள் மாங்காய்களைப் பிடுங்கி விட வேண்டுமென்ற அவசரம் சின்னையாவை தூண்டியிருக்க வேண்டும். வெயிலும் சற்று அதிகரிக்கத் தொடங்கியது. கலைத்து விட்ட கிளிகள் இப்போதும் வானத்தில்தான் பறந்து கொண்டிருந்தன. சின்னையா வீட்டுக் கூரையில் சாத்தப் பட்டிருந்த மாங்காய் பிடுங்க உபயோகிக்கும் பட்டைத் தடியை எடுத்துக் கொண்டார். இப்போதுதான் ........முற்றத்தில் சரிந்து கிடந்த மரவுரலின் பக்கத்தில் தேனீர்க் கோப்பையை வைத்து விட்டு குடிசையுள் சென்றாள் மதி. தேனீரை எடுத்து ஒரு உறிஞ்சு உறிஞ்சு விட்டு வீட்டினுள் செல்லும் மகள் மதியைப் பார்த்துக் கொண்டே மீண்டும் மாமரத்தை அண்ணார்ந்து பார்த்தபடி நின்றார் சின்னையா.

மாமரம் நன்றாகக் காய்த்து உலுப்பியிருந்தது. கறுத்தக் கொழும்பான் என்றால் விலையும் அப்படித்தான். ஆனால் இந்த முறைபோலத்தான் அப்போதும் அந்த வருடம் இந்த மாமரம் மிக நன்றாகவே காய்த்துப் பொலிந்திருந்தது.

ஆனால். அந்தப் பழங்களை ஒருவரும் புசிக்க முடியாமல் மீண்டும் ஊர் திரும்பியபோது அவை அழுகி வீழ்ந்து காய்ந்த கொட்டைகளே முற்றமெங்கும் பரவிக் கிடந்தன. அந்த வருடம் தானே எங்கள் வீட்டிலும் அநதப் பேரிடி வீழ்ந்ததல்லவோ.

இந்தியன் ஆமிக்காரர் ஊரில் புகுந்து நாங்கள் எல்லோரும் விரட்டப் பட்டபோது ஓடி ஒழிந்து உரும்பிராயில் ஒரு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போதே வீழ்ந்து வெடித்த செல் ஒன்றுக்கு மதியின் தாய் பலியாகிப் போனாளே. மனைவியின்

நினைவு சூழ்ந்ததனால் கலங்கிய கண்களைப் பொத்திய கரத்தினால் துடைத்துக் கொண்டே மாங்காய் பிடுங்கும் பட்டைத் தடியை உயரே நிமிர்த்தினார் சின்னையா.

லாவகமாக மாங்காய்க் குலைகளைப் பட்டைக்குள் விட்டு இதமாக இழுக்கவும் மாங்காய்கள் பட்டைக்குள் நிறைந்தன. பிடுங்கப்பட்ட மாங்காய்களை ஏற்கனவே மரநிழலில் விரிக்கப் பட்டிருந்த பச்சைக் ஊறியன் சாக்கில் பரப்பி வைத்துக் கொண்டு மீண்டும் பட்டைத் தடியை மேலே உயர்த்தினார், சின்னையா. பிடுங்கப் பட்ட மாங்காய்கள் உருண்டு திரண்டு அழகாக இருந்தன. பார்க்க வாய் ஊறும் வண்ணம் அவை இருந்தன. மாங்காயகள் கீழே நிலத்தில் வீழ்ந்து விடா வண்ணம் சின்னையாவின் கவனமெல்லாம் மாங்காய் ஆய்தலிலேயே இருந்தது. காய்கள் நிலத்தில் விழுந்து விட்டாலே கண்டிப் போயவிடும். வியாபாரிகள் வாங்க மாட்டார்கள். அதுவும் இந்த முறை வியாபாரி குமாரசாமி சொல்லிச் சென்றதும் சின்னையாவிற்கு ஞாபகத்திற்கு வந்தது.

அதுதான் இது.

இந்தமுறை கொழும்பிற்குச் செல்லும் இந்த மாம்பழங்கள் அங்கிருந்தே ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாக இருக்கின்றன என்றும், அதனால் மாங்காய்கள் கண்டிப் போகாமலும், சூத்தை கொத்தாமலும் இருக்க வேண்டுமென்றும் ஞாபகப் படுத்திச் சென்றதையும் சின்னையா நினைத்துச் சிரித்துக் கொண்டார். அதுவும் மாங்காய்ப் பால் கூட காய்களில் இருக்காதபடி நன்றாகத் துடைத்து வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மாம்பழமும் ஒரு மெல்லிய கடதாசியால் அழகாகச் சுற்றித் தானாம் கப்பல் ஏறுமாம்.

அவதானம், அவதானம் என்று அடிக்கடி வலியுறுத்திச் சென்ற கொக்குவில் குமாரசாமி ஞாபகத்தில் வந்தார். ஆம் சின்னையா நினைத்தபடியே மகள் மதி முற்றத்தில் இருந்தாள். சாக்கில் பரப்பப் பட்டிருந்த மாங்காய்களை ஒவ்வொன்றாக எடுத்து அவற்றிலிருந்து வழிந்திருந்த பாலைத் துடைத்துத் துடைத்து ஒரு புதிய கடகத்தினுள் அடுக்கிக் கொண்டிருந்தாள்.

பக்கத்து வீட்டுப் பையன் அருகில் நின்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான். வாயூறியிருக்க வேண்டும். எச்சிலை விழுங்கிக் கொண்டான் அவன். அவனது கடவாயெங்கும் மாங்காய்ப் பால் ஏற்படுத்திய காயங்கள் மாறும் நிலையிலிருந்தது. அவிண்டுபோன காற்சட்டையை மீண்டும் கட்டிக் கொண்டான்.

"மதி அக்கா நீங்களும் டென்மார்குக்குப் போறியளே? அங்கே இருந்து வெளிநாட்டு முத்திரையள் வாங்கி அனுப்புவியளே?" என்ற தனது ஆசைகளை வெளிப்படுத்திய அந்த சிறுவனுக்கு வெறுமனே 'ஆம்' என்பது போல தலையாட்டினாளே தவிர, அவளது நினைவுகளெல்லாம் நாதனைப் பற்றியதாகவே இருந்தது.

அந்த நாள் எப்போது வரும் என்பது போலவே நினைவுகள் எல்லாம் இருந்தன. வெளிநாட்டுக்கு எப்போது செல்வது. எப்போது தனது கணவன் நாதனைக் காண்பது?

அவர் விரும்பியது போலவே "காப்புச் சமையலை" அவருக்குச் செய்து கொடுப்பது? ஐரோப்பா என்றால் எல்லாம் அழகாக இருக்குமாம். வசதியான வாழ்வாம். எதற்குமே குறைவே இல்லையாம்......... நினைக்க நினைக்க அவளது நினைவு விமானம் அசுர வேகத்தில் வானத்தில் பறந்தது.

தரையிறங்க மனமின்றிச் சிறகெடுக்கும் வண்ணத்துப் பூச்சிகள் கூட்டம போல அவளது மனமெல்லாம் சந்தோசமாகவே இருந்தது. இந்த நினைவுகளுக்கே மரணமில்லை. நினைக்க நினைக்கப் புதிதாய் புதிதாய்...... மெருகாய் மெருகாய்........

"ஏன் மதியககா சிரிக்கிறியள்?" என்ற சிறுவனுக்கு ஏதோ சொல்லிச் சமாளிக்கிறாள் மதி. வெய்யில் உச்சிக்கு வந்து கொண்டிருந்தது. மாங்காய்கள் கிட்டத்தட்ட ஆய்ந்து முடிந்து, அவைகள் நன்றாகத் துடைத்துத்தெடுக்கப் பட்டு பெரிய பெரிய ஓலைக் கடகங்களில் அடுக்கி வைக்கப் பட்டுவிட்டன. மதி எழுந்து குடிசைக்குள் சென்றாள். அவளது நீண்ட கூந்தல், அவளது நடைகேற்ப அசைந்தது. இப்போதுதான் வளவுப் படலையைத் திறந்து கொண்டு வந்தாள் மதியின் மாமி பாக்கியம். வீட்டு வளவுக்குள் வரும் அவளை அந்த மெலிந்த நாய் தள்ளாடித் தள்ளாடி, அவளை வாலாட்டி வாலாட்டி வரவேற்றது. தண்ணிக் குடத்தடியில் குந்தியிருந்த ஒரு காகம் கரைந்தது. மாமர நிழலில் தண்ணீர்ச் செம்புடன் நின்று கொண்டிருந்த சின்னையாவை பாக்கியம் ஏதோ ஒரு மாதிரிப் பார்ப்பது போல அவருக்கு இருந்தது. பாக்கியம் ஆரம்பித்தாள்.

"கடிதம் வந்தது. அவன் கலியாணத்தத் தள்ளட்டுமாம்."

"உவள் வடிவில்லையாம்". இது பாக்கியம்.

இடிந்து போனார் சின்னையா. சின்னையா மாங்காய்க் கடகத்தின் பக்கத்தில் அமர்ந்தார். எதுவுமே அறியாத மதி தனது மாமியாருக்கு ஏதோ குடிக்கக் கொண்டு வருகிறாள். அவளது முகம். ஏன்? இப்படி? எப்படி ஆனது இது?

"இந்தியன் ஆமி செல்லடித்து உரும்பிராயில இவளின்ர தாயின்ர உயிர் போச்சுது. இந்த பிள்ளைக்கும் செல்லுத்துண்டு முகத்தக் கிழிச்சுக் காயப்படுத்தாட்டில் என்ர பிள்ளையும் வடிவாத்தான் இருந்தவள்" என்று சொல்லியபடியே........ நெஞ்சில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார் சின்னையா.

வெய்யில் உச்சியில் நின்றது. தண்ணீர்க் குடத்தருகே அந்தக் கறுப்புக் காகம் இப்போதும் கரைந்தது. மதி உள்ளே சென்றாள். அவளது பின் புறம் அழகாகவே இருந்தது.

*01-05-99*

# குடை

அவனும் நானும் அந்தச் சின்னக் கிராமத்திலுள்ள அந்த வனத்துள் ஒரு நாள் சுற்றுலாச் சென்றோம். அது ஒரு வசந்த கால ஆரம்பம். கறுப்பும் மண் கலருமாய் மரங்கள் உயர்ந்து இலைகள் அரும்பத் தொடங்கியிருந்தன. மரக் கிளைகளில் அரும்பியும் அரும்பாமலும் இலைகள் நிறைந்திருந்தன. காட்டை ஊடறுக்கும் அந்த மண் பாதையில் நின்று வானத்தை அண்ணார்நது பார்த்தால் வானத்தின் நீல நிறமும் காட்டின் பச்சை நிறமும் கலந்து வீசும் காற்றில் சூரிய ஒளியில் அந்தக் காடு பளபளப்பாக ஆடிக் கொள்வது போலத் தென்படும்.

இக்காலங்களில் இத்தகைய குழந்தைக் காடுகளிடையே சஞ்சரிப்பது அலாதியான இன்பம். துன்பங்களை அழித்து இன்பத்தை வாரி வழங்கும் சூழல். இதனால் இத்தகைய வனங்களில் அவ்வப்போது உலாவருவது எனக்கு விருப்பமான விடயமாகும். இன்றும் - நானும் அவனும் வழமைபோல இங்கு வந்திருக்கிறோம். என்னுடன் இன்றும் வந்திருப்பவன் எனது அயல் வீட்டில் வசிக்கும் டனிஸ்கார நண்பன்.

நானும் அவனும் இங்கு வரும்போதெல்லாம் உலக விவகாரங்கள் பற்றியும், பிரச்சனைகள் பற்றியும் பேசுவதுண்டு. இன்றும் அதுபோல எங்களுடைய பேச்சு அதிகாரம் பற்றியதாக இருந்தது.

"ஒன்றை ஒன்று மேலாதிக்கம் செலுத்த விளைவதன் அடிப்படையிலேயே இந்த உலகின் பிரச்சினைகளை விளங்க முயலல் வேண்டும்" என்று விவாதத்தை ஆரம்பித்தான் அவன்.

"அந்த அதிகாரங்கள் இல்லாதவைகள் அதிகாரமுள்ளவைகளால் அடக்கப் படுகின்றன. ஆமாம் அப்போதுதான் முரண்பாடுகள் விரிவுபெறுகின்றன. அதுவும் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு பலகருவிகள் உதவுகின்றன. இந்தக் கருவிகளுள் அரசுகளும் அதனைக் காத்துக் கொள்வதற்கான ஆயுதங்களும் உலகில் விரவிக்கிடக்கிறது இந்த உலகில். இத்தகைய அதிகாரங்களைக் காக்கும் பண்பாட்டிடை அதிகாரங்கள் இல்லாதவைகள் அனுபவிக்கும் துன்பங்களே இன்றைய உலகின் மிகப் பெரிய பிரச்சினையாகும்" என்று உரையாடல் விரிந்தது. இப்படியே எங்களது உரையாடல் தொடரவும்..... காட்டிடையே குருவிகளின் சப்தம் அதிகரித்தது.

காற்றுக் கூவல் எடுத்து வீசியது. மழை மெல்லத் தூறத் தொடங்கியது. அவன் தன்னுடன் கூடவே எடுத்து வந்திருந்த அவனது குடையை விரித்தான். என்னிடம் அப்படி ஒரு குடை இருக்கவில்லை. அதனால் அவனுடைய குடையின் கீழ் ஒதுங்கிக் கொண்டேன். நானும் அவனும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தோம்.

இப்போது நானும் அவனும் நடந்து கொண்டிருந்த பாதை மூன்றாகப் பிரிந்தது. இப்போது குடையைப் பிடித்திருந்த அவன் தனது பாட்டில் ஒரு வழியைத் தெரிவு செய்து தொடர்ந்து நடந்தான். நான் அவனது குடைக்குள் அவனுடனேயே தொடர்ந்து இழுபட்டுக் கொண்டிருந்தேன். என்னால் சுற்றுப்புற அழகை ரசிக்கவோ, நிமிர்ந்து நடக்கவோ முடியவில்லை. ஏனென்றால் அவன் என்னைவிட உயரத்தில் கட்டையானவன். என்னால் எனது உயரத்திற்கு ஏற்ப நிமிர்ந்து நடக்க முடியவில்லை. அதேவேளை மனதுக்குள் கொஞ்சக் கூச்ச சுபாவமும் மனதுள் எழுந்தது. அவன் சென்று கொண்டிருக்கின்ற பாதையை விட மற்றொரு பாதையால் சென்று அந்த அழகை அனுபவிக்கவே எனக்கு விருப்பமாக இருந்தாலும் எனது கையில் குடை இல்லை. அவனது குடைக்குக் கீழ் நான் தொடர்ந்து இழுபட வேண்டிய கட்டாய நிலை. அதேவேளை அந்தக் குடையை நான் எனது கையில் வாங்கிப் பிடித்துக் கொண்டால்..... என்ன? நிமிர்ந்து நானும நடக்கலாமல்லவா! இருப்பினும் அந்தக் குடையை நான் அவனிடம் தரும்படி கேட்கவில்லை. ஏனெனில் அது அவனுடைய குடை.

# இடம்

கன நல்லவள். ஆனால் அவளது நாற்பதுவருட இப்பூவுலக வாழ்வில் அவளது அனுபவங்கள் சந்தோசகரமானதாக இருக்கவில்லை. இவளது சிறுபராயத்திலேயே தாயும் தகப்பனும் விவாகரத்துப் பெற்றுக் கொண்டதனால் அவளது குழந்தைப் பருவம் தனித்துத் தனது தாயுடனேயே அமைந்தது. இவளது குழந்தைப் பருவம் முடிந்து இளமைக் காலம் தொடங்கிய போது தாயாரை இழந்து ஒரு பராமரிப்பு நிலையத்திலேயே வளர்ந்து வந்தாள். இப்பராயத்தில் அவள் எடுக்க வேண்டிய முக்கிய முடிவுகளிலெல்லாம் தோற்றுப்போனாள். ஒவ்வொரு கட்டங்களிலும் அவள் ஆர்வத்தோடும் ஆசையோடும் தான் முன்னேறினாளெனினும் முடிவுகள் எல்லாம் தோல்வியாகவே முடிந்துவிட்டது. அவளைச் சுற்றியுள்ள எல்லாமே வெறுப்புக்கும், நம்பிக்கைக் குரியனவாகவும் இருக்கவில்லை. வாழ்வின் இடைப் பாதையில் கிடைத்த காதலன் ஒருவன் அவளது இளமைக் காலம் முடியும் வரைதான் கூடவே இருந்தான். பின்னர் கிடைத்த ஒரு கணவன் சிறிது காலத்தில் காலை வாரிவிட்டு எங்கோ ஓடிவிட்டான். ஆள் போன இடமே தெரியாது. நல்லவேளையாக அவளுக்குப் பிள்ளைகள் எதுவுமே இருக்கவில்லை. அவ்வாறு நிகழ்ந்திருந்தால் அது அவளுக்குப் பெரிய சுமையாக இருந்திருக்கலாம். அல்லது இன்னொரு வழியில் சந்தோசகரமானதாகவும் இருந்திருக்கலாம். அந்த ஏக்கம் அவளுக்கு இருக்கவே செய்தது. அரைகுறையில் பாடசாலையை நிறுத்திவிட்டு ஒரு சிறிய வீடொன்றை வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வருபவள். வருமானத்துக்கு ஏதுவாக ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை ஒன்றில் ஒரு சாதாரண சம்பளத்துக்கு வேலை செய்து வருபவள். இந்த ஐரோப்பிய வாழ்க்கை முறைக்குள் உறவுகளோ அல்லது நட்புகளோ மிகவும் இறுக்கமானதாகப்

பெரும்பாலும் அமைந்திருப்பதில்லை. அதுவும் சமுதாயத்தில் ஒரு நல்ல அங்கீகாரம் கிடைக்கப் பெறாதவர்களுக்கு சமுதாயத்தால் புறக்கணிக்கப் படாவிட்டாலும் சமுதாயத்தில் இவர்களுக்கென்று பெரிய வரவேற்புக் கிடைப்பதில்லை.

அவளது தனிமையைப் போக்கும் முகமாக அவளிடம் ஓர் உயிர் இருந்தது. அது ஒரு சாம்பல் நிறப் பூனை. வேலைப் பளுவை நீக்கவும், தனிமையை மறக்கவுமாக ஆரம்பித்த மது பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மதுவே வாழ்க்கையாகிவிட்டது. இதனால் அடிக்கடி வேலைக்கு லீவு போட்டாள். மதுவையே துணையாகக் கொண்டாள். அயலவர்கள் அருவருப்போடு பார்த்தனர். அந்தக் கிராமததில் நடைபெறும் பொது வைபவங்களைத் தானாகவே தவிர்த்துக் கொண்டாள். ஒதுங்க ஒதுங்கத் தனிமையே மேலெழுந்தது. இந்தத் தனிமையை போக்குவதில் அந்த சாம்பல் நிறப் பூனை தான் துணையாக இருந்தது. அந்தப் பூனை அழகானது. சாப்பாடு, விளையாட்டு, இயற்கைக் கடன் கழிக்க வெளியே போய்வருவது, பழைய துணி போட்ட பிரம்புக் கூடையில் தூங்குவது போன்ற அன்றாடக் கடமைகள் தவிர.......... அந்தப் பூனை அவளது காலடியில் உராய்ந்தபடி வலம் வருதலும். அப்போது அவள் அந்தப் பூனையை அணைத்து மடியில் வைத்து மெதுவாக வருடி மகிழ்வதும் அவளுக்கும், அந்த சாம்பல் நிறப் பூனைக்கும் இன்பமானது. அநதப் பூனை தனக்குப் பசி யெடுககும் நேரங்களில் குசினி மேசையில் உட்கார்ந்து கொண்டு சப்தமிட்டு உணவை வாங்கி உண்பதும். ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து துள்ளி அவளது மடியில் தலைபுரட்டி மகிழ்வதும் பார்ப்பதற்கு ஆசையாக இருக்கும்.

அவள் அந்தப் பூனையைப் பிரிந்து வெளியே சென்று திரும்பும் போது - ஓடி வந்து அவளது காலைச் சுற்றிய படி ஏதோ சொல்லிச சொல்லி முந்திக் கொண்டு ஓடிச் சென்று சோபாவில் உட்கார்ந்து கொண்டு அவளை வரவேற்பதிலும் அவள் அந்தப் பூனையுடன் அகமகிழ்ந்து போவாள்.

***

இன்று அவள் தனது வீட்டுச் சாமான் சட்டுக்கள் எல்லாவற்றையும் கடதாசிப் பெட்டிகளிலும், கறுப்புப் பைகளிலும் போட்டுக் கட்டி வைத்திருந்தாள். இன்றும் அவளது வாழ்வில் முக்கியமான நாள். ஏனெனில் அவள் இன்னொரு வாடகை அறை ஒன்றுககு மாறவேண்டிய நிலை. அவள் வேலை செய்து வந்த தொழிற்சாலையில் அவளது வேலை ஒழுங்கீனத்திலும் அக்கறையின்மையையும் காரணம் காட்டி அவளை வேலையிலிருந்து நிறுத்தி விட்டனர். இத்தகைய நிலையில் தொழிறசங்கத்தில் அங்கத்தவராக இருந்தால் மட்டும் தொழிற் சங்கத்தின் பொருளாதார ஆதரவைப் பெறமுடியும். ஆனால் அவள் தொழிற சங்கத்திலும் அங்கத்தவராக இருக்கவில்லை.

இந்த நிலையில் அரசாங்கத்தின் சமூக உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்

படும் ஒரு சிறிய தொகைப் பணத்துக்குள்ளாகவே அவள் தனது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். சாதாரணமாக ஒரு வீட்டிலிருந்து அவள் இப்போது ஒரு அறை ஒன்றை இன்னொரு டனிஸ்காரரோடு சேர்ந்து வாழ்வதற்காக கையடக்க விலையில் வாடகைக்கு எடுத்துக் கொண்டாள். அதனால் அவள் பாவித்து வந்த பொருட்கள் எல்லாவற்றையும் தன்னோடு கொண்டு செல்ல முடியாத நிலை. பல பொருட்களைக் கழித்தெறிந்துவிட்டாள். சில பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்று விட்டாள். இவைகள் எல்லாம் போக இரண்டு கடதாசிப் பெட்டிகளிலும், மூன்று கறுப்புப் பைகளிலும் தான் எடுத்துச் செல்ல வேண்டிய சாமான்களை எடுத்தாயிற்று. நாளையே அவள் புதிய அறைக்குச் செல்ல வேண்டும். அவள் இப்போது யோசிக்க வேண்டிய நேரம். யோசித்துக் கொண்டுதான் இருக்கிறாள். கட்டிவைத்த சாமான்கள் ஒரு மூலையில் கிடந்தன. கையோடு எடுத்துச் செல்வதற்காக ஒரு 14 இஞ்சி தொலைக்காட்சிப் பெட்டி இயங்கிக் கொண்டிருந்தது. தொலைக் காட்சியில் மனம் இணைந்தும் இணையாமலும் அவள் இருந்தாள். நினைவுகள் எங்கோ இருந்தது. தொலைக்காட்சியில் புதிய நிகழ்ச்சி ஒன்று ஆரம்பமானது. இப்போது திரையில் அழகிய மாளிகை ஒன்று உயர்ந்து நின்றது. அதன் உச்சியில் டனிஸ் ராஜ குடும்பத்தின் இளவரசன் தனது திருமணத்தின் பின் குடியேறுவதற்காக மீள்புனரமைப்புச் செய்யப் பட்ட அழகிய அரச மாளிகை. இப்போது அந்த இளவரசன் திரையில் வருகிறான். அந்த மாளிகையின் விஸ்தீரணம், அதன் பழமையான வரலாறு. அதில் பிரத்தியேகமாக அமைக்கப் பட்ட நவீன வசதிகள் என்பன பற்றியெல்லாம் எடுத்துக் கூறிப் பெருமைப் படுகின்றான். தொலைக்காட்சியில் இப்போது அந்தக் கம்பீரமான ராஜ மாளிகையின் சுற்றுப் புறத் தோட்ட வெளிகளுள் காட்சி விரிகிறது. ஆம், அழகான பசும் புல் வெளிகளுடனான தோட்டம். அழகாகக் கத்தரிக்கப் பட்ட பசிய மர மறைப்புக்கள். அழகிய கருங்கற் சிலைகள். நீரைவாரி இறைத்தபடி நிற்கும் நீர்த் தடாகங்கள். இப்படி இப்படி எங்கும் விசாலமான அழகின் விரிப்புக்கள்.

இப்போது அந்த நீர்த் தடாகத்தின் அருகில் இளவரசி. அழகாகவே இருந்தாள். அவள் ஒரு வெளிநாட்டுக் காரி. இந்த டனிஸ் இளவரசனை திருமணம் செய்து கொண்டு டென்மார்க்குக்குப் புலம் பெயர்ந்திருப்பவள். எவ்வளவு அதிர்ஷ்டக் காரி. இந்தப் பெரிய ராஜமாளிகையில் அந்த இளவரசனுடன் வாழ்வை ஆரம்பிக்கப் போகின்றவள். இந்த இளவரசனும், இளவரசியும் வாழ்வதற்கு இந்தப் பெரிய மாளிகையா? என்ற கேள்வியோடு தொலைக்காட்சிப் பெட்டியை அணைத்தாள் அவள்.

இப்போதுதான் அந்தப் பூனை அவளிடம் ஓடிவநதது. மடியில் படுத்து உருண்டது. அவள் அதனைக் கைக்குள் எடுத்துக் கொள்கிறாள். கண்கள் பொலபொலக்கிறது. தயாராக வைத்திருந்த அந்தக் கூடைக்குள் அந்தப் பூனையை வைத்துக் கொண்டு வீதியில் இறங்கினாள்.

***

"நீ இப்போதுதான் தைரியமாக இருக்க வேண்டும்" என்கின்றார் டாக்டர். தலையை ஆட்டிக் கொள்கிறாள் அவள். "ஏன் இந்த முடிவுக்கு வந்தாய்?" என வினவுகிறார் டாக்டர். பூனை அவளது கையுக்குள் இருந்து கொண்டே டாக்டரை துருதுருவென்று பார்த்தது.

"நான் இன்னொரு சிறிய அறை ஒன்றுக்கு இடம் மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. நான் தற்போது மாறுகின்ற இடத்தில் பூனை வளர்ப்பதற்கு அனுமதியில்லை...... அதனால்.........." என்று........ மௌனமானாள் அவள்.

"நீ அமைதியாகப் பூனையை வைத்துக் கொள். இந்த ஊசியை அதற்கு ஏற்றுவேன். ..........சுமார் பத்து செக்கண்ட்டுகளில் பூனை அமைதியாக உறங்கிவிடும்" என்றார் டாக்டர்.

(இப்படி வளர்க்க வசதியில்லாத மிருகங்களைக் கொலை செய்வதற்கு டென்மார்க்கில் சட்ட அனுமதியுண்டு) அவர் சொன்னபடியே பூனை மரணத்தில் அமைதியானது. அதன் உடலில் இப்போதும் சூடு இருந்தது. அவள் அந்தச் சாம்பல் நிறப் பூனையின் உடலை டாக்டரிடம் கொடுத்தாள்.

"பூனை கூடச் சேர்ந்து வாழ்வதற்கு ஓர் இடம் தேவை"

●

# ஆடல்

மழை வனம். பச்சைப் பசேலெனத் தளிர்களும் மலர்களுமாய் அழகை ஜொலித்தது. பெரிய மரங்கள், அதைச் சுற்றிலும் செடிகொடிகள், அவற்றில் எங்கும் பலப்பல மலர்கள். மழை இப்போது அங்கு பெய்யவில்லை. ஆனால் மழைவருவதற்கான அறிகுறி இருட்டு அந்த வனத்தில் மெதுவாக பூசப்பட்டிருந்தது.

இந்த நிலமெங்கும் சருகுகள் நிறைந்த வனத்தை அண்டி ஒரு நீரோடை சப்தமின்றிக் கிடந்தது. அதனருகெங்கும் அமைதி. மரங்களின் உச்சியில் பெரிதும் சிறிதுமாய் பறவைகளும் குருவிகளும் இவர்களுக்கெல்லாம் நிலத்தில் இறங்க அச்சமோ? அந்தக் காட்டில் அணில்களும், குரங்கினங்களும் சந்தோசமாக இரைதேடிக் கொண்டிருந்தன. அந்த மழை வனத்தில் வளங்கள் கொட்டிக் கிடந்தன. விலங்கினங்கள் பறவைகள் தத்தம் விருப்புக் கேற்ப உணவருந்திக் கொண்டிருந்தன. காலைத் தூக்கம் கலைந்தது. அங்குமிங்கும் திரிந்து விளையாடி மகிழ்ந்து இப்போது தான் அவற்றிற்கு சாப்பாட்டு நேரம்.

அதோ! அந்த நீரோடையை நேர்நோக்கிப் பார்த்தால் ஒரு பற்றை மறைவில் சிங்கங்கள் குழுவாகப் படுத்திருந்தன. அவற்றில் பல பெரிய வயதான சிங்கங்களும், இரண்டு குட்டிச் சிங்கங்களும் கலந்து இருந்தன. குட்டிச் சிங்கங்கள் தங்கள் பெற்றோர் மீது ஏறுவதும் இறங்குவதுமாக விளையாடிக் கொண்டிருந்தன.

ஒரு பெரிய சிங்கம் தனது முன்னங் கால்களை நிலத்தில் ஊன்றியபடி பின்னங் கால்களை நிலத்தில் மடித்துக் குந்தியிருந்தபடி கழுத்தை வனம் நோக்கிக் கூர்மையாக வைத்து எதையோ அவதானித்துக் கொண்டிருக்கிறது. நிலத்தில் ஊன்றியிருக்கும் உரோமங்கள் நிறைந்த கால்கள் பழபழக்கும் வைரம் நிறைந்த

முதிரைக் குற்றிகள் போல அச்சிங்கத்தின் பலமான உடலைத் தாங்கியபடி இருந்தது. அந்த முன்னங் கால்களை அரைவாசி மூடி மறைத்தபடி கருமையான உரோமங்கள் அதன் தோள்களைச் சுற்றி மிகவும் கம்பீரமாக இருந்தது. அந்த வைரமான கருரோமங்களுக்கு மேலால் அச்சிங்கத்தின் முகம் தவிட்டு நிறம் போலவும் இடைஇடை கருமையான நிறத்தில் சில வரைகோடுகளும் ஒரு கறுப்புக் கல் போல அதன் மூக்குமாக அந்த மூக்கின் கீழ் இரத்தம் தோய்ந்து நிறம்மாறிப் போன வாய்ப் பாகமுமாக அநதச் சிங்கம் தனது ஒளிரும் பந்து போன்ற கண்களால் அந்த வனத்தின் ஓர் திசையை உற்று நோக்கியபடி இருந்தது. தனது பார்வையில் குறிதவறாத படி அசைவற்ற நிலையில் குந்தியிருந்தது. மழைவனக் காட்டில் இப்போது வீசும் அச்சிறு மழைக் காற்றில் அச்சிங்கத்தின் தாடைமயிர்களும் காதோர உரோமங்களும் அசைந்தன. ஆனால் அதன் செவிகள் மட்டும் ஏதோ ஓர் இரகசிய ஓசையை உள்வாஙகிக் கொண்டிருந்தது.

அதோ! இந்த மழை வனத்தில் குளம் குளிர் காற்றில் ஆடிக் கொண்டிருக்கிறதே அந்த இளைய மரம். இலை குழைகளோடு அழகாகவே அது இருந்தது. அதன் கீழ் ஒரு புள்ளிமான். கொம்புகள் கூர்மையாக நீட்டிக் கொண்டிருந்தன. மண்ணிற மேனியில் வெள்ளைப் புள்ளிகள். இலைபோன்ற வடிவில் செவிகள். கண்கள் இரண்டும் நீரால் உருட்டிச் செய்தது போல மினுங்கின. ஒல்லியான கால்களுக்கண்மையில் அம்மானின் குட்டிகள் முன்னே நின்றன. அம்மான் குட்டிகளும் தாயைப் போலவே கொள்ளை அழகு. பயமறியாத இயல்பான முகம். பசியாறப் பழகும் பருவம். சின்னக் குட்டிகள். இலையைக் கடித்திழுப்பதும் பின் அவற்றைத் துப்புவதும் பின் சிறிய தூரம் துள்ளி ஓடுவதும், தாயாரின் எச்சரிக்கைக்குப் பணிந்து தாயிடம் ஓடிவருவதுமாக அவை அங்கு சந்தோசமாக இருந்தன.

இப்போதுதான் அந்தப் பெரிய சிங்கம் எழுந்தது. மானையும். குட்டிகளையும் நோக்கி வருகிறது. அச்சிங்கத்தின் நடையில் அவசரமேதுமில்லை. மிகவும் நிதானமாகவே வநதது. ஆனால், மானை நோக்கியே அது வருகிறது. இப்போதுதான் அதுவும் சிங்கம் அண்மித்து விட்ட நிலையில் தான் மான் வெருண்டடித்து ஓடத் தொடங்குகிறது. குட்டிகளும் தாயாரின் பின்னால் தமது பிஞ்சுக் கால்களால் தளதளர்த்த ஓட்டம்.

சிங்கம் இப்போதும் அவசரப் படவில்லை. அதே நிதானமான நடை. ஆனால் இப்போது மட்டும் சற்று அகன்ற அடியெடுத்து நிமிர்ந்து நடந்து வந்தது. தாய்மானின் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் குட்டி மான்கள் ஒரு பற்றை மறைவில் மறைந்து கொள்கின்றன. அலறி அடித்துக் கொண்டு தாய்மான் திரும்பவும் குட்டிகளை நெருங்குகின்றது. இப்போது சிங்கமும் சற்றுத் தொலைவிலேயே நின்று நடப்பதை அவதானித்துக் கொண்டு நின்றது. தாய்மானின் கால்கள் நடுங்கின. முகம் கலவரத்தால் வெருண்டுபோய் வெழுத்துக் கிடந்தது. அதன் காதுகள் மேல் நோக்கி நிமிர்ந்திருந்தன. கண்கள் அங்குமிங்கும் ஆதரவு தேடின. தாய்மான் குட்டிகளை அழைத்துக் கெண்டு ஓடுவதற்கு முயற்சித்தது. ஆனால் மான் குட்டிகளோ

பற்றைக்குள்ளிருந்து வெளியே வரமறுத்தன. சிங்கம் இப்போது உரத்துக் கர்ச்சித்தது. முன்னோக்கி ஒரு பாய்ச்சலும் பாய்ந்து, வெருட்டியது. வெலவெலத்துப் போன தாய்மானோ விலகி ஓடியது. அந்தச் சிங்கமோ இப்போதுதான் சுவாரசியமாக மான்குட்டிகளை நெருங்குகிறது. அவற்றைத் தனது பெரிய கால்களால் தட்டித் தட்டி பற்றைக் குள்ளால் வெளியே கொண்டு வந்தது. மான் குட்டிகள் நிலத்தில் நின்று நடுங்கின. இப்போதுதான் மழை இலேசாகப் பெய்ய ஆரம்பித்தது. அந்தப் பெரிய சிங்கம் இப்போது தனது பாட்டில் வந்தவழியே செல்ல ஆரம்பித்தது.

என்ன ஆச்சர்யம். இந்தச் சிங்கம் மிகவும் கவனமாக, வெகு நேரமாகக் காத்திருந்து அதுவும் மானையும் குட்டிகளையும் பிடித்துச் சாப்பிடும் தூரத்தில் நெருங்கியிருந்தும் அவ்வாறு செய்யாமல் தனது பாட்டில் சென்று விட்டதே? என்ன நடந்திருக்கும்? பசியின்மையா? பச்சாதாபமா? கொலைக் குணத்தை மறந்து விட்டதா? அல்லது இன்று அது விரதமேதுமோ? எதுவுமே விளங்கவில்லையே? மழை இப்போது நன்றாகவே பொழிய ஆரம்பித்தது. தாய்மான் திரும்பி ஓடி வந்தது. குட்டிகளை அணைத்தபடி நின்றது.

அதோ! இப்போதுதான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது. அதோ! அந்தப் பெரிய சிங்கம் திரும்பி வந்து கொண்டிருந்தது. அதன் முன்னால் சிங்கக் குட்டிகளும் வந்து கொண்டிருந்தன. அகோரமான ஒரு பாய்ச்சலோடு பெரிய சிங்கம் தாய்மானை நெருங்கவும் தாய்மான் மீண்டும் வெலவெலத்து ஓடியது. இப்போதும் தாய்மானை அது பின்தொடர்ந்து கலைக்கவில்லை. பாய்ந்து வெருட்டிய சிங்கம் மீண்டும் அமைதியானது. நடுக்கம் மாறாத அந்த மான் குட்டிகளை அணுகியது. கால்களால் அவற்றை வெருட்டி மகிழ்ந்து விட்டு........ சற்றுத் தொலைவில் சென்று உட்கார்ந்து கொண்டது, சிங்கம். சிங்கக் குட்டிகளை ஒரு ராஜ பார்வை பார்த்தது பெரிய சிங்கம். சிங்கக் குட்டிகள் வேட்டைக்குத் தயாராகின. பெரிய சிங்கம் சற்று விலகி முன்னால் காலை நிலத்தில் வைத்தபடி கம்பீரமாகப் பார்த்துக் கொண்டிருந்தது. சிங்கக் குட்டிகள் வியூகம் அமைத்தன. பதுங்கின. பாய்ந்தன. மான் குட்டிகள் ஓடின. இன்னொரு வியூகத்தில் சுழன்றடித்துப் பாய்ந்து சுழன்று குட்டிகளின் கழுத்தைப் பிடித்துக் கவ்வித் தூக்கி அடித்தன. இரத்தம் தோய்ந்து இரைச்சலுடன் பெய்யும மழையிடையே அந்த மான் குட்டிகள் இரத்தம் தோயந்து மரணித்தன. சிங்கங்கள் தமது திசையில் சென்றன. இது அவர்களுடைய சாப்பாட்டுக் காலமல்ல! அவர்களுக்கு இது வேட்டைப் பழகும் காலம். தாய் மான் ஓடிவந்து பார்த்தழுதது. இப்போது அதோ அந்த இலையின் நுனியில் ஓர் மழைத் துளி. ஐயோ! இதையோ சிங்கத்தின் அறம் என்று ஆறறிவு மனிதன் சொல்கிறான்.

●

# வெற்றிடத்தை நோக்கும் காற்று

அந்த நீலச்சிறுகடல் அமைதியாகப் படுத்திருக்கிறது. 'ஆசுயு' என்பது அதன் பெயர். டென் மார்க்கில் மிகவும் அகலமும், நீளமுமான சிறுகடல் அது. கடலின் கரையெங்கும் வளர்ந்த ஊசியிலைக் காடுகள் வண்ணங்களின் கலவைகள் போல் அழகாய் இருந்தது. குளிர் காலம் ஆரம்பமாகும் தருணம் என்பதனால் மரங்களின் இலைகள் மஞ்சளாகியும், இடைஇடையே பச்சையாயும் நன்றாகக் காய்ந்து மண்ணிறமாகவும், மேலே நீலவானத்தோடு சேர்த்து நோக்கின் அழகோ அழகுதான். இந்தச் சூழலில் எனது மனதைப் பறிகொடுப்பதில் எனக்கு ஒரே ஆனந்தம் தான். அதற்கு வசதியாக எனது டனிஸ் நண்பர் ஒருவரின் தொடர்பும அடிக்கடி அச்சூழலுக்குச் சென்று வரும் வாய்ப்புக் கிடைக்கும்.

எனது அந்த டனிஸ் நண்பரின் பெயர் 'யோன்'. அவர் ஒரு சாதாரண கடற் தொழிலாளி. ஐம்பது வயதைக் கடந்தவர். அவரது பிள்ளைகள் பதினெட்டு வயதான பின்பும் தனியாக வாழ்வை ஆரம்பித்த நிலையில் அவனும் அவனது மனைவியுமாக ஆடம்பரமற்ற வாழ்வை வாழ்ந்து வருபவர்கள். அவ்வப்போது உல்லாசமாக 'ஆசுயு' என்ற அந்தச் சிறுகடலில் பயணிப்பதற்காக ஒரு சிறு வள்ளம் வைத்திருக்கின்றனர். தனது உல்லாசப் பயணத்தின் போது எனது தனிமையைப் போக்குவதற்காக என்னையும் அடிக்கடி அவன் அந்தப் பயணத்திற்கு அழைத்துச் செல்வதுண்டு.

இன்றும் அப்படித்தான். இன்னும் சற்று நேரத்தில் பயணிக்கப் போகின்றோம். யோன் தனது வள்ளத்தின் பாய் மரத்தை நிமிர்த்திப் பாய்களை விரித்துக் கட்டிக் கொள்கிறான். அவனது வாயில் சுங்கான் புகைந்து கொண்டிருக்கிறது. அவன்

எப்போதாவது ஏதாவது சொல்வதற்காக வாயைத் திறக்கும் போது மட்டுமே வாயிலிருந்து சுங்கானை வெளியே எடுத்துக் கொள்வான்.

மிகவும் அமைதி நிறைந்தவன். அடுத்தவருக்குத் தீங்கு நினைக்காதவன். இந்த அமைதியான சிறுகடலைப் போல அவனும் அவனது வாழ்வும் அமைதியானது. நல்ல தனித்துவமான சிந்தனைகள் கொண்டவன். நான் இவனைச் சந்தித்ததே ஒரு தனி அர்த்தம் நிறைந்தது. ஒரு நாள் ஒரு புகையிரதப் பெட்டிக்குள் இவனுக்கு அருகிலேயே அமர்ந்திருந்தேன். புகையிரதம் புறப்பட்டது. நான் எனது கையிலிருந்த உருளைக் கிழங்குப் பார்சலைத் திறந்து சாப்பிடத் தொடங்கினேன். அவனும் என்னைக் கவனிப்பது போலத் தோன்றவே அவனையும் பெற்றுக் கொள்ளும் படி நீட்டினேன். அவனும் 'நன்றி' தெரிவித்தபடியே எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். திடீரென அருகில் இருந்தவர்களில் ஒருவன் ஏதோ சொல்லிச் சிரித்தான். எனக்கு அவர்கள் என்ன சொல்லிச் சிரிக்கிறார்கள் என்று விளங்கவில்லை. ஆனாலும் அவர்கள் அவன் என்னுடன் அன்னியோன்யமாகப் பழகுவது பிடிக்காமலேயே ஏதோ நளினம் செய்து சிரிக்கிறார்கள் என்பது மட்டும் புரிந்தது.

இப்போது தான் அவன் என்னுடன் பேசத் தொடங்கினான். நளினம் செய்தவர்களின் அட்டகாசம் அதிகரிக்கவே...... "இது என்னுடைய உரிமை இதில் நீங்கள் யாரும் தலையிடக் கூடாது". என்று சொல்லி அவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுப்பட்டான். இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இப்படி டனிஸ் பிரசைகள் யாரும் அதிகம் நடந்து கொள்ள மாட்டார்கள். சற்று அமைதியானதும்..... அவனே எனக்கு விளக்கத் தொடங்கினான்.

"நீ ஒரு பிச்சைக் காரனாம் உன்னிடம் பிச்சையாக வாங்கி இவற்றை உண்கிறேனாம் என்று சொல்லிச் சிரிக்கிறார்கள்". என்றும் இதையிட்டு நாங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றும் என்னை அமைதிப் படுத்தினான்.

அந்தச் சந்திப்போடு தான் நாங்கள் நண்பர்களானோம். போர் நிலமைகளினால் இடம் பெயர்ந்து தனித்து வாழும் எனது வாழ்வில் அவ்வப்போது எனது தேவைகளையும், விருப்பங்களையும் தானே அறிந்து செயற்படுவான். எனக்கு மிகவும் பிடித்தவன். அவனது வாழ்க்கைக் காலத்துள் தனக்கெனப் பெரிய சொத்துக்கள் எதனையும் சேர்த்துக் கொள்ளாதவன். அவற்றில் விருப்பமும் கட்டுப் பாடுகளும் இல்லாதவன். "சொத்துக்களும் அளவுக்கதிகமான ஆசையும் தான் மனித வாழ்வைச் சீர் குலைத்து வைத்திருக்கின்றன" என்று அவன் எப்போதோ சொன்னதாக ஞாபகம்.

கூரிய சிந்தனை, அடக்கமான வாழ்வு. எனது தனிமையையும், இழப்புக்களையும் தன்னோடு பகிர்ந்து கொள்பவன் இவன் தான். "உனக்கு இழப்பதற்கு எவையோ இருந்ததாற் தானே அவைக்காக நீ இப்போது அவைபற்றிக் கவலை கொள்கிறாய்" என்பான், அடிக்கடி.

இப்படியான காத்திரமான உரையாடல்களினால் அவன் என்னுள் மெல்ல மெல்ல வேர் விட்ட ஓர் அப்பிள் மரம் போல ஆடாமல் அசையாமல் என்னுள் வேர்விட்டு விட்டான்.

பாய் மரங்கள் கட்டப் பட்டுப் பயணம் தொடங்கிற்று. அமைதியான காற்று. அவசரமற்ற போதல். எதிர்பார்ப்பற்ற பயணம். இதைத்தான் உல்லாசம் என்பார்களோ? இதயம் அமைதியுறுகிறது. காற்றின் திசையில் வள்ளம் சென்று கொண்டிருக்கிறது. கரைதோறும் இலையுதிர் காலத்தைக் காட்சிப் படுத்திக் கொண்டிருக்கும், எரிந்தது போன்ற காடுகளில் எனது மனம் விரிகிறது. பாவம் அவை இறந்து கொண்டிருக்கின்றன. மேலே வானத்தில் பறவைகள் அமைதியாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த அமைதியான கடலும், பயமற்ற வள்ளப் பயணமும், மேலே பறவைகளும், அருகே அவனும்..... ஊர்ந்து கொண்டிருக்கும் வள்ளத்திலிருந்த படியே...... 'யோன்! இறந்து போன அம்மா, கண் தெரியாத ஐயாவோடு பதினோராவது அகதி முகாமைத் நோக்கிச் செல்லும் எனது பெரியண்ணா குடும்பம், சிறையில் வாடும் எனது சின்னண்ணா, எலும்புக் கூடாய்ப் போன எனது பெரியக்காவின் உருவம் இப்படி இப்படி எனது மனம் சந்தோசமாக இல்லை'' என்கிறேன் நான்.

''அதுவுமல்லாமல் எனது குழந்தைப் பராயம் முதல் விளையாடிய நந்திக் கடலும் அதன் கரைகளும் எனக்கு ஞாபகம் வருகிறது. இந்த 'ஆசுயூ' கடலைப் போலத்தான் அந்த எங்கள் நந்திக் கடலும்..... அதுவும் அழகானது.''

மாரியில் பொங்கி வழிந்தும் கோடையில் வற்றியும் போகும் அந்தக் கடல் அழகானது. இப்போதும் அந்த நந்திக் கடலும் முன்னரைப் போல அமைதியாக இருக்காது. துப்பாக்கிச் சன்னதங்களால் பயந்து போய் கிடக்கும், கரைதோறும் நிமிரும் சம்புப் புற்கள் இப்போதும் எப்படியோ? கரைதோறும் தென்னங் கன்றுகள் உடைந்து கிழிந்து செத்தும் போயிருக்கும். முன்னரெல்லாம் இந்த ஆசுயூவைப் போல அந்தக் கடலும் நிம்மதியாகவே இருந்தது.

ஆனால், இன்று போரும், வறுமையும், வெயிலுமாக அந்த நந்திக் கடல் அவதிப் படுவது போல எனது மனமும் நடுங்கிக் கண் கலங்குகிறேன். யோன் அமைதியாக இருந்தான்.

''இந்த ஆசுயூவும் அதன் அயல்களும் குளிரில் எரிகிறது. ஆனால், எனது நந்திக் கடலோடு அயலும் போரல்லவோ அழிகிறது'' என்கிறேன் நான். அருகே யோன் அமைதியாக வள்ளத்தை செலுத்திக் கொண்டிருக்கிறான். எனது கண்கள் கலங்கிக் கிடந்தது. யோன் தனது கையை எனது கையோடு இணைத்துக் கொள்கிறான். ''உனது தாய் நாடு எங்கோ தூரத்தில் இருந்தாலும் உனது நந்திக் கடலும் இந்த ஆசுயூவும் எனது அலையின் கரங்களால் இணைத்துக் கொண்டுள்ளன. இயற்கைக்குப் பிரிவே இல்லை.'' என்கிறான் யோன்.

''ஆம் நானும் நீயும் கைகோர்த்துக் கொண்டுள்ளது போல கடல் அலைகளும்

தம்மை இணைத்துக் கொண்டுள்ளன" என்கிறேன் நான். சரி என்பது போல தலையாட்டுகிறான் யோன். எனது சுகத்திலும் துக்கத்திலுமாக இன்னொரு நாட்டவனான யோன் என் மீது கொண்டுள்ள உறவை நினைக்கும் போது எனது விழிகள் மீண்டும் கலங்குகின்றன. இப்போதுதான் சும்மா இருந்த காற்று வீச்சாய் போனது. உள்ளம் திருப்தி கொள்கிறது.

"யோன்! நீ எனது நண்பன். காற்று வெற்றிடத்தை நோக்கி வீசுவது போல நீ என்னை நோக்கி எப்போதும் வீசிக் கொண்டே இருக்கிறாய்." என்கிறேன் நான்.

"இப்போ யார் காற்று? யார் வெற்றிடம்?" என்றபடி சிரிக்கிறான் யோன்.

"நான் வெற்றிடம்" என்கிறேன் அமைதியாக.

யோன் சிரிக்கிறான்.

"ஒரு நாள் நான் எங்கள் நந்திக் கடலில் இப்படி ஆறுதலாக எனது குழந்தைகளுடன் இருப்பேன்." என்கிறேன் நான்.

"அப்போதெல்லாம் நான் உன்னையும் நினைத்துக் கொள்வேன்" என்று தொடர்ந்து சொன்னேன்.

"இந்த விடயம் தான் உன்னில் எனக்குப் பிடித்த மிகச் சிறந்த நல்லவிடயமாகும். அதாவது எப்போதும் உனது தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டுமென்று நினைக்கிறாயல்லவா! இத்தகையவர்களுக்கு நாங்கள் எப்போதும் உதவியாகவே இருப்போம்" என்கிறான் யோன்.

"சில வேளைகளில் நானும் உனது நாட்டுக்கு இடம் பெயர்ந்து வந்தால் நீயும் நானும் சேர்ந்திருக்க அந்த நந்திக்கடல் அனுமதிக்குமல்லவா?" என்று தொடர்ந்து வினா எழுப்பிகிறான் யோன்.

"இயற்கைக்கு பேதமில்லை".
"பேதமுள்ளவை இயற்கையுமில்லை"

●

# அம்மா

சனிக்கிழமை. ஓய்வு நாள். வேலையில்லாத பொன்னாள். வேலை நாட்கள் பொல்லாதவை. அதையே நினைத்து நினைத்து இன்றைய பொன்னான நாளையும் பொல்லாத நாளாக்கி விடக் கூடாது. எச்சரிக்கையாகிறேன்.

கதவைத் திறந்து கொண்டு வெளியே இறங்குகிறேன். குளிரில் பனிபூத்துக் கிடக்கும் கார்க் கண்ணாடிகளை ஒருவன் உரஞ்சிக் கொட்டிக் கொண்டிருக்கிறான். காலைக் கடன் கழித்து விட்டு வரும் நாயை இழுத்துக் கொண்டு ஒரு சிறுமி வீட்டுக்கு விரைகிறாள். சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நடக்கிறேன். புதுக் காற்றின் சுவாசம் பழைய தெம்பை எழுப்பிக் கொள்கிறது. அடுக்குமாடிக் கட்டடங்களைக் கடந்து நெடுவீதியின் கரையோரமாக நடக்கிறேன். எதிர்த் திசையில் வரும் மஞ்சள் நிறப் பேருந்தை முந்திக் கொண்டு கார் ஒன்று விரைகிறது. இரவு நேரப் பனித் துளிகளோடு மரங்கள் பெருமூச் செறிகின்றன. கானோரத்துக் குளிரில் விறைத்த புற்கள் தமது பூக்காலங்களை நினைத்துக் கொள்கின்றனவா? எனக்கென்ன?......... எதையுமே நினைத்து மனதை அலட்டிக் கொள்ளாமல் சென்று கொண்டிருப்பதே சந்தோசம். ஏன் கெட்டவைகளையும் - துன்பம் தரும் விடயங்களையும் - பிரச்சனைகுரிய சஞ்சலங்களையும் நினைத்து என்னை அழித்து விடுவான். நல்லவைகளையே நினைத்து, ஆனந்தம் தரும் விடயங்களையும் நினைத்து வாழ்ந்தாலே பேரின்பம்........ நடந்து கொண்டிருக்கிறேன்.

அவன் எதிரே வருகிறான்......... தூரத்தே........ இவன் ஒரு குருடன். தெரியாத கண்களுக்கே சொந்தக் காரன். இவன் பாவமல்லேன். பாக்கியசாலி என்பேன்.டென்மார்க்கில் இந்தக் குருடனுக்கு எல்லா வசதிகளும் உண்டு. எனக்குள்ளது போல............. அவனை நெருங்குகிறேன்.

"ஹலோ! மாடவா" என்றான், ஊல. ஊல என்பது அவனது பெயர்.

"கண் தெரியாத நீ எப்படி என்னை அடையாளம் கண்டு கொண்டாய்?" என்று அவனிடம் கேட்கிறேன்.

"சிரித்துக் கொண்டே....... "மாடவா! நீ வருமுன்பே உன்னில் மணக்கும் உள்ளி, மிளகாய்த் தூள் வாசனை முன்பே வருகிறதல்லவா!" என்று சொல்லிச் சிரிக்கிறான்.

எனக்குச் சற்று வெட்கமாகப் போய் விடுகிறது. அவன் பிடித்திருந்த கையை விலக்கிக் கொண்டு நடக்கிறேன். எனது தந்தை எனக்கு மாதவன் என்று வைத்த அழகிய பெயரை 'மாடவன் என்று தான் டனிஸ் மக்கள் அழைப்பர்.

சரி அதற்கென்ன இப்போ....... நல்லதையே நினைப்போம். நல்லதையே ரசிப்போம். நலமே வாழ்வோம். குண்டு, இரத்தம், இடிந்த கட்டடங்கள், மரணம், இடப் பெயர்வு. அகதிகள். இப்படி இப்படி....... ஏன் கெட்ட நினைவுகள்........ எதுவுமே எனக்கு வேண்டாம்........ இலங்கையை விடவும் டென்மார்க்கில் எத்தனை அழகுகள். அழகு அனுபவிக்க ஆயிரம் வசதிகள். அழகையே நினைப்பேன். ரசிப்பேன். வீதியில் நடந்து கொண்டிருக்கிற எனது மனம் இப்படி நினைத்துக் கொள்கிறது.

அவைகள் எல்லாம் ஒரு காலம். மனித மலத்தை நினைத்துக் கொண்டே சோறு உண்பவன் போல....... இந்தத் தமிழர்கள். வாழத் தெரியாதவர்கள். காசு, சீட்டு, வட்டி, கார், செக், தமிழ்த் தொலைக்காட்சி, தமிழ்ப் பாட்டு, தமிழ் ரேடியோ, காசு சேர்க்கிறது, தானம் செய்யிறது இதுகளோடை விட்டுதுகளோ! தமிழ்க் கோயில்கள் அருச்சினை, திருவிழா, இவங்கட தெருவழிய தேர் இழுக்கிறது....... என்று வலைப் பட்டுக் கொண்டவர்கள், பரிதாபத்துக்குரியவர்கள்.

அரைவாசி எரிந்து முடிந்த சிகரட்டை எறிகிறேன். கால் அதை மிதித்து நசுக்கி விட்டு நடக்கிறது. வலது புறம் விரிந்து கிடக்கும் வயல் வெளிகள். அதைக் கடந்து தெரியும் பாடசாலைக் கட்டடங்கள். இடது புறம் இருக்கும் வயோதிபர் மடம். எல்லாவற்றையும் கடந்து நடந்து கொண்டிருக்கிறேன்.

எதிர்ப்படுகிறது யேசுவின் தேவாலயம். ஆள் நடமாட்டம் குறைந்த தேவாலயம். ஆட்கள் அதிகமாக வருவதில்லை என்பதனால் தேவாலயத்தை மூடிவிடவோ இடித்துவிடவோ இல்லை. என்றோ ஒரு நாள் இந்த மாயையிலிருந்து விலகி மீண்டும் தேவனை நாடி வருவார்கள் எனற நம்பிக்கையில் தேவாலயம் நிமிர்ந்து நிற்கிறது.

தேவாலயம் மாயையா? அல்லது இந்தத் தேவாலயத்திற்கு வெளியே உள்ளவை மாயையா? மாயை என்று ஒன்றுமே இல்லை. எல்லாமே உண்மையானவை. சிகரட் மது, அழகிய மங்கையர், எல்லாமே உண்மையானவை. அனுபவிப்பதற்குரியவை. மனைவி, வீடு, பிள்ளைகுட்டி, குடும்பம், அன்பு, பாசம், எல்லாமே பொய். இந்த உலகை அனுபவிப்பதற்கு இவைகள் தடையானவை.

வீடு என்பது உறங்குவதற்கும், இளைப்பாறுவதற்குமான இடம். அதை

வாழ்வதற்கான இடமென்கின்றனர். இதுதான் சுத்துமாத்து. வெளியேதான் வாழ்வு இருக்கிறது. ஒரு பரந்த வெளியைப் போல. நான் எப்போதும் போலவே சந்தோசமாக இருக்கிறேன். தேவாலயத்தை அண்டிக் கிடந்தது சுடலை. அது நினைவுக் கற்களால் நிறைந்து கிடந்தது. பொய்.............. நினைவு என்பதே பொய்...... ஏன் நினைக்க வேண்டும். உறவுகள் ஏன் இவைகள்? கட்டிக் கொண்டு அழுவதற்கோ................? இன்று இருக்கும் நான் இறந்து போனால் மட்டுமே நான் அழுவேன். சுடலையை அருகிக் கிடக்கும் வீடுகளைத் தாண்டிச் செல்கிறேன். முன்னே பாண் வாசனையோடு பேக்கரி எதிர்படுகிறது. இடது பக்கம் வளைந்து, தரித்து கார்கள், இடித்துக் கொள்ளாத படி நிதானித்துப் பார்த்து, நேரே நடந்து செல்லவும் எதையோ நினைத்து முக்கிவிட்டு புகையிரதம் வநது நிற்கிறது. காலை இளம் வெயிலில் சனங்கள் இறங்கவும் ஏறவும் புகையிரதம் போகிறது. இறங்கியவர்களில் ஒருவன் கென்றிக். எனக்குப் பழக்கமானவன். நல்லவன். முதுகில் நிறைந்த சுமையோடு என்னை நோக்கி வருகிறான். கை குலுக்கிக் கொள்கிறோம். சுகம் விசாரித்துக் கொள்கிறோம். அவனது தோற்றம் எங்கோ தூரப் பயணத்தால் வருவதுபோல இருக்கவே "எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்கிறேன்.

"தான் பிறந்து வளர்ந்த கிராமமும் - இப்போதும் தனது அம்மம்மா வசித்து வருகின்ற கிராமுமான இடத்துக்குச் சென்று திரும்பி வருகிறேன்" என்று சொல்கிறான். சரி என்று தலையாட்டியபடி நடக்கிறோம். கென்றிக் பயணக் களைப்பிலும் மிகவும் சந்தோசமாக இருந்தான். தனது இளம்பராயத்தில் விளையாடிய இடங்கள், படித்த பாடசாலை, தெரிந்த நண்பர்கள், என்று தனது அனுபவங்களைச் சொல்லி மகிழ்ந்தான்.

ஆனால், தான் பிறந்து வளர்ந்த வீடு இடிக்கப் பட்டு அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலை கட்டப் பட்டிருப்பதும், அதில் வசித்து வந்த தனது அம்மம்மா தற்போது வயோதிபர் இல்லத்திற்கு மாற்றப் பட்டிருப்பதும் தனக்குக் கவலையைத் தருவதாகச் சொன்னான்.

தொடர்ந்து நடந்து சந்தயில் வரும் இறைச்சிக் கடையை தாண்டிச் செல்கையில்......

"அம்மா........ அம்மா" என்று ஒரு மாடு அகோரமாகக் கத்தியபடியே சாகும் ஒலியைக் கேட்டுச் சற்று தரித்து விட்டு தொடர்ந்து நடக்கிறோம். அதோ! பக்கத்தே கிடக்கும் கடைக்குள் நான் செல்வதற்காக கென்றிக்கிடம் விடைபெற்று கடைக்குள் செல்கிறேன்.

அவன் தான்...... என்னை எப்போது எங்கு கண்டாலும் "நரகத் தமிழா" எனக் காறி, உமிழ்பவன் தான் அங்கு நிற்கிறான். வாங்க வந்த, சாமானையும் வாங்காமல் கடையை விட்டு வெளியே வருகிறேன். "நரகத் தமிழா" என்றும் "நீ இன்னமும் வீட்டுக்குப் போகவில்லையோ?" என்றும் வெறுப்போடு பேசுவான். அப்போதெல்லாம் எனக்குக் கோபம் வரும். ஆனால், அவன் ஒரு அறிவிலி. அவனது கூற்றுப் படி

தமிழன் நரகம் தான். ஆனாலும் நான் மொழியால் தமிழனாக இருந்தாலும் எனது எண்ணங்களால், நடத்தைகளால் நான் வித்தியாசமானவன் என்பதையும் தமிழர்களுக்குரிய குணாம்சங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்பதை எப்படி அவனுக்குத் தெரியப் படுத்தலாம்?

அவன் என்னை நன்கு தெரிந்தவனல்ல. அதனால் தான் அவன் என்னைத் தமிழர்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறான். சரி அவனையும் மன்னிப்போம். அதைவிடவும் அவன் 'நரகத் தமிழா' என்று என்னைப் பேசுவதையிட்டு எனக்கொன்றும் கவலையில்லை. ஏனெனில் உள்ளத்தால் நான் தமிழனே அல்லன். நான் ஒரு மனிதன். அவ்வளவு தான். மனிதன் என்ற சொல் அழகானது. ஆனால், அந்த மனிதனது செயல்களை நினைத்தால்......... அது கொடூரமானது. இந்த அழகுக்குள் வாழ முடியாத மனிதர்களுக்குள் பேதங்கள் தலைவிரித்தாடுகின்றன. இனம், மொழி, மதம், நாடு என்று போர்கள் விரிவுபடுத்தப் படுகின்றன. இவைகளை நான் வெறுக்கிறேன். இந்த டென்மார்க் நாட்டின் ஒவ்வொரு வீதியிலும் நிறைந்துள்ள சுதந்திரத்தைப் போல இலங்கையிலும் ஏன் அது இல்லாமல் போய்விட்டது? எல்லாமே யுத்தத்தினாலே தான். நல்ல வேளையாக நான் அதிலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டேன். தலைக்கு மேல் ஒரு குருவி 'விர்' என்று கடந்து போகிறது. மழைத் தூறல்கள் விழ ஆரம்பித்து விடுகின்றன. நடையை உசாரப்படுத்துகிறேன். இரையாமல் பெய்யும் இந்த மழையில் நனைவதே ஓர் இன்பம். இலங்கையின் கொடுவெயிலில் காய்ந்த எனது மேனி இந்த இன்ப மழையில் நனையட்டுமே!

நனையட்டும்........ சந்தோஷமாக நடக்கிறேன். நினைவுகள் ஓரிடத்தில் குந்தியிருப்பதில்லைத் தானே. அதுமாறிக் கொள்கிறது. 'கடிதம்' ஏதேனும் வந்திருக்குமோ? என்ற எண்ணம் இப்போது. என்ன....... "அன்புடையீர்!...... என்று ஆரம்பித்து வங்கி இலக்கத்துடன்...... சாவு, இழப்பு, காணாமல் போனது, அழுகை, என்று எழுதுங்கள்........" என்று எனது மனம் திட்டிக் கொள்கிறது. மனைவி இப்போது எழும்பியிருப்பாள். சூடான தேனீர் நினைவுக்கு வருகிறது. எனது வீட்டு அழைப்பு மணியை அழுத்துகிறேன். கதவு திறந்து கொள்கிறது. உள்ளே நுழைகிறேன். மனைவியின் கண்களில் நீர்த் திவலைகள். கண் அருகெங்கும் ஈரம். முகம் வீங்கியிருந்தது. "என்னப்பா...... பிரச்சனையா......" என்கிறேன். "உங்கட அம்மா செத்துப் போனாவாம்......... ரெலி போன் வந்தது. சொல்லி விட்டு அப்பால் நகர்கிறாள் மனைவி....... சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் என்னைப் பார்க்கிறேன்.... வளர்ந்த தலைமுடி தோளில் கரை புரண்டது. சிகரட் குடித்து கறுத்துக் கிடந்தன உதடுகள். சிவந்து கிடந்தன எனது விழிகள். அடர்ந்து கிடக்கிறது மீசை. நெஞ்சு விம்மத் தொடங்கியது. கண் சிந்தியது. கை நீரைத் துடைத்தது. "அம்மா" என்கிறது வாய்........ தழுதழுத்தபடி...... நான் நன்றாகவே அழுகிறேன். எனக்கும் அம்மா ஒருத்தி இருந்திருக்கிறாள் என்பதை இப்போது உணர்கிறேன்.

"உலகத்தை மறந்து இலங்கையை நினைக்க முடிவதில்லை"

"இலங்கையை மறந்து உலகத்தை நினைக்க முடிவதில்லை"

மு. தளையசிங்கம்.

# காத்திருக்கும் நேரங்கள்

நான் ஓர் ஓவியன். நல்ல உருவங்களுக்காகக் காத்திருப்பேன். சூரியனின் உதயம், மறைவு என்பனவற்றைக் காத்திருந்து பிரதி செய்பவன். ஒரு மொட்டு மலரும் வரை காத்திருந்து அதை ஓவியமாக்கும் விருப்பமுள்ளவன். காதலிக்காக புற்தரையில் காத்திருந்து எத்தனையோ புற்களைச் சப்பித் துப்பியவன். பஸ்சுக்காகவும் புகையிரதத்திற்காகவும் காத்திருந்து காலத்தைச் சபித்தவன்.

ஆனாலும், இத்தனை வருட இந்தப் பூமியில் வாழ்ந்த அனுபவத்திலிருந்து எனக்கு இந்தக் காத்திருத்தல் தொடர்பாக ஒரு விடயம் எனக்கு விளங்கியிருக்கிறது. அதாவது "காத்திருக்கும் நேரங்களில் எதுவுமே உற்பத்தியாவதில்லை" என்பதே அது. ஆனால், இன்று வேறொன்று. எனது அம்மம்மா இன்று வெகு தூரத்திலிருந்து இரவுப் புகையிரதத்தில் வருகிறாள். நான் அவளை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும். அவள் வயதானவள். பன்னிரண்டு ஆண்டுகளாக நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை. இன்றுதான் சந்திக்கப் போகிறோம்.

மனதுக்குள் அவளே நிறைந்திருந்தாள். மகிழ்ச்சி ஒரு புறம், அவளின் வரவு தரும் அந்த உணர்வு மறுபுறமுமாக எனது குளிராடையைச் சரிசெய்து கொண்டு கொப்பன்கேக்கன் புகையிரத நிலையத்துள் நுழைகிறேன்.

நேரம் அதிகாலை 4.00 மணி. அங்கே அமைதி சூழ்ந்திருந்தது. அந்தப் புகையிரத நிலையம் இன்னமும் விழிக்காமல் ஒரு கண் நித்திரை. நிலத்தில் புறாக் கூட்டங்கள், இரை தேடிக் கொண்டிருந்தன. கடதாசி, பழத்தோல்கள், சிகரட், அடிக் கட்டைகள் எனக் கஞ்சல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

விசாலமான அந்த மண்டபத்தின் ஒரு மூலையிலிருந்து ஒருவன் அக் கஞ்சல்களை துப்பரவு செய்யத் தொடங்கிவிட்டிருந்தான்.

எனது சப்பாத்து ஓசைக்குப் புறாக்கள் வெருண்டெழுந்து மேல் தீராந்தி மீது அமர்ந்து கொண்டன. அதுவே அவற்றின் வாழ்விடம். இவைகள் எதற்கும் காத்திருப்பனவல்லவே. சிந்தும் உணவுகள் அவற்றின் நம்பிக்கை. அவற்றை உண்பதே அவற்றின் வேலை. உறங்குதல் ஓய்வு. விழித்தல் மீண்டும் சிந்தியவைகளுக்காக இந்தப் புறாக்கள் காத்திருப்பற்ற சந்தோசமான உயிர்கள்.

அந்தப் புகையிரத நிலையத்தின் இரவு விளக்குகள் மங்கியபடி எரிந்தன. கரைதட்டிப் போன ஒரு திமிங்கிலம் போல அந்தப் பெரிய மண்டபம் கிடந்தது. ஓரிரண்டு ஒலிபெருக்கிச் செய்திகள் வந்து போனது. யாரோ ஓரிருவர் புகையிரதத்திற்காகக் காத்திருந்தனர். அவர்கள் அடிக்கடி மணிக்கூட்டையும் பார்த்துக் கொண்டனர். ஓர் ஓரமாக அமர்ந்து கொண்டேன். வரும்போது எடுத்து வந்திருந்த சித்திரம் வரையும் தாள்களையும், பேனாவையும் எடுத்துக் கொண்டேன்.

எனது கை மணிக்கூட்டைத் தூக்கிக் கட்டிவிட்டு முழங்காலில் மடிந்திருந்து, அம்மம்மா வருவதற்கு இன்னமும் அரை மணிநேரம் உண்டு...... அதற்கள் ஏதாவது வரைய வேண்டுமென தீர்மானித்துக் கொண்டேன்.

அம்மம்மாவின் நினைவே மீண்டும் என்னுள் தொற்றிக் கொள்கிறது. இரவுப் புகையிரதமென்பதால் அவள் நன்றாகத் தூங்கியிருப்பாள். வந்த பின் அவளுக்கு ஒரு கோப்பி வாங்கிக் கொடுக்க வேண்டும்.

பின்னர்............. நினைவுகள் அவளையே சுற்றியிருந்தன. வரைவதற்காக எடுத்த பேனா தோள் மூட்டில் குந்திய நுளம்பைப் போல இருந்தது. அது ஒன்றையும் கீறக் காணோம். இன்னமும் விழித்துக் கொள்ளாத இந்தப் புகையிரத நிலையத்தில் நிலவும் அமைதியான சூழல் மெல்ல மெல்ல கலைய ஆரம்பிக்கிறது. பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்குகின்றது. மனதுக்குள் சூழலின் சந்தடியையும் தள்ளிக் கொண்டு அம்மாவின் வருகையை மனம் சரிபார்த்துக் கொள்கிறது. எல்லாம் சரி........ அம்மம்மா இன்னமும் வரவில்லை. தவிப்பு....... நேரம் நீள்வது போன்ற உண்மையில்லாத நிலை. அம்மம்மா வரப் போகின்றாள். என்ற தவிப்பில்....... மனம். எதையுமே கீறாது பேனா பேப்பரிலிருந்து இறங்கிக் கொள்கிறது. இரவுப் புகையிரதம் வரும் நேரத்தை முன்னாலுள்ள சிறிய தொலைக்காட்சி காட்டியபடியே இருக்கிறது. எத்தனை தடவை அதனைப் பார்த்து விட்டேன். அம்மம்மா வருவதற்கு இன்னமும் இருபது நிமிடங்கள் இருப்பதே உண்மை. ஆனால், அதனையும் மீறி........ எப்போது........ எப்போது....... என்ற எண்ணமே தலைவிரித்திருக்கிறதே! சரி...... மனதை இறுக்கிக் கொள்கிறேன். அம்மம்மாவை மறந்து விடுகிறேன்.

பேனா மீண்டும் சித்திரப் பேப்பரில் குந்திக் கொள்கிறது. சரி..... என்ன வரையலாம்? அதோ! எதிரே..... தொலைபேசியில் கதைத்தபடி ஒருவன் பின் பொக்கற்றுக்குள் கை வைத்திருக்கிறானே...... அவனையா........? அல்லது............

இரா முழுக்க மதுவருந்திய கசங்கல் முகத்தோடு..........சிகரட்டின் கடைசி இழுப்போ விரலைச் சுட்டுக் கொள்ளும் அந்தப் பீத்தல் காற்சட்டைக் காரனையோ? அல்லது சூட்கேசை இழுத்துக் கொண்டு அவசரிக்கும் அந்த இளமஞ்சள் மங்கையையா........? அல்லது, அந்தத் தேனீர்ச் சாலை திறக்கப்படுவதற்காக வாசலில் காத்திருக்கும் அந்த மூன்று பேரையுமா......? இல்லை....... இல்லை........ இவனை வரையலாமா.......? நீலநிறச் சீருடையில் வந்து சுறுசுறுப்பாக திரும்பிப் போகும் அந்தப் போலீஸ் காரனையா? அவனும் திரும்பிப் போய்விட்டான். இந்தத் தெரிவுக்கான அந்தரிப்பு அலைச்சலிடையே எனது பேனா ஒரு பேப்பர் முழுவதிலும் கிறுக்கி நிரப்பி விட்டது. அதையும் கிழித்து குப்பைத் தொட்டியில் வீசினேன். மீண்டும் எனது பேனா புதிய பேப்பரொன்றில் குந்திக் கொண்டு விட்டது. நேரம் ஆக ஆக மனதுள் அம்மம்மா வந்து போனாள். கொஞ்சச் சனம் வந்து நின்ற புகையிரதத்துக்காக அள்ளி அடித்துக் கொண்டோடியது.

எனக்குப் பிடித்த மாதிரி ஒருவன் அதோ நிற்கிறான்...... அவனை வரையலாம். கறுப்புக் காற்சட்டை, கறுப்புக் கோட், வெள்ளைநிற ரையின் இறுக்கத்தில் இறுகிப் போய்க் கிடக்கும் தசை உப்பிய தொண்டை. அதன் மேலே அவன் கொஞ்ச மயிருடனான தலை. வலது கையில் சூட்கேஸ். இடது கையில் கிடந்த பேப்பர்த் துண்டு மூக்கை மறைக்க...... தும்மினான்......? கிரோசிமாவில் அந்த அணுகுண்டு வெடித்தது போல.

அம்மம்மா நினைவில் வந்தாள். அதற்கு இன்னமும் நேரமிருக்கிறதே..... அதோ அவனை வரைந்தாலென்ன....? காலைத் தினசரிக்குள் கண்ணாட்டும் அவன். வாட்ட சாட்டமான ஆள். வண்டி சரிந்து கிடந்தது. எந்த நேரத்திலும் அது உடைந்து விழலாம். அவன் காலடியில் ஒரு நாய். கறுப்பும் வெள்ளையும் கலந்தாற் போல் வடிவாக இருந்தது. தினசரியைத் தலையணை போல் மடித்துக் கொண்டு....... எழுந்தான். அவனுக்கும் அவசரம். நாய்க்கு முன்னால் அவன் போய்க் கொண்டிருந்தான்.

எனது சித்திரப் பேப்பரைப் பார்த்தேன். அதே கறுப்புக் கிறுக்கல்களே தவிர வேறேதுமில்லை. அதையும் கசக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டேன். எனது இடது கை மணிக்கூட்டைத் தூக்கிக் காட்டியது. ஆம் அம்மம்மா வரும் இராப் புகையிரதம் இன்னும் ஐந்து நிமிடத்தில் வந்துவிடும். அம்மம்மா வந்துவிடுவாள்....... நிமிடங்கள் நகர மறுத்தன. எழுந்து நின்றேன். முன்னாலும் பின்னாலும் பக்கவாட்டிலும் நடந்து பார்த்தேன். "கவனியுங்கள்" என்றபடி புகையிரத ஒலிபெருக்கி சொல்லிற்று. "இரவுப் புகையிரதம் இன்னமும் பதினைந்து நிமிடங்கள் தாமதித்தே தடம் இரண்டில் வந்து சேரும்" என்று. மீண்டும் உட்கார்ந்து கொண்டேன். என்தலை குனிந்து கொண்டது. இடது கை அதனைத் தாங்கிக் கொண்டது. எதனையும் என்னால் வரையவோ அல்லது எதனையும் கூர்ந்து பார்க்கவோ முடியவில்லை. எதுவும் என்னுள் தங்கவில்லை. எல்லாமே ஏதோ போன போக்கில் மேலோட்டமாகவே தான். நான் மட்டுமல்ல. இங்கு காததிருப்பவர்கள் எதையுமே செய்து கொள்ளவில்லை. எல்லோருக்குள்ளும் ஒரே உணர்வுதான். போலிருக்கிறது.

இந்த இடம் பயணிகள் தங்குமிடம். காத்திருக்கும் இடம். இங்கே எதனையும் யாரும் செய்வதில்லை. வெறும் தங்குமிடம் தானே. இந்த எண்ண அலைகளுக்குள் நான் சிக்கிக் கொண்டிருந்த போதுதான் அவன் வருகிறான். மெல்லிய தோற்றம். தெளிவான சிரித்த முகம். கறுப்புத் தலை. மண்ணிறத் தோற்றம் என்னைக் கடந்து சென்ற அந்த இளைஞன் எதிரிலிருக்கையில் அமர்கிறான். இவன் ஸ்ரீ லங்காவிலிருந்து வந்த அகதியாக இருப்பான் என நினைத்துக் கொள்கிறேன்.

தனியே பணிவோடு கால்களுக்கிடையே கைகளை இறுக்கியபடி இருந்தான். ஏதோ ஒரு உணர்வு உந்த அவனருகில் சென்று........ "எனது பெயர் ஊல" என்று எனது பெயரைச் சொல்லி அறிமுகம் செய்து கொள்கிறேன்.

"எனது பெயர்........ நாதன்" எனத் தன்னை அறிமுகம் செய்தான், அந்த இளைஞன்.

...... இவ்வாறாக ஒரு வெளிநாட்டவருக்கும் ஒரு டனிஸ் காரருக்குமிடையே நடைபெறும் வழமையான உரையாடலின்பின்.....

"நீர் என்ன செய்கிறீர்" எனக் கேட்டேன்.

"பல தொழில்கள் செய்து விட்டு இப்போது சும்மா தான் இருக்கிறேன்" என்றான் அவன். எமது இந்த டனிஸ் சமூகத்தில் தொழில் என்பது நிரந்தரமற்ற ஒன்றுதான். ஆனால், பலரும்...... ஏதோ ஒரு துறை சார்ந்து அதில் ஆழமாகவும் கூர்மையானதாகவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால், இப்படி டென்மார்க்கில் பெரும்பாலான வெளிநாட்டவர்களால் ஆழமும், கூர்மையுமான அறிவையோ, அது சார் தொழில்களையோ பெறுவதில்லை. காரணம்....... டென் மார்க்கில் வாழும் வெளிநாட்டவர்களில் பலர் இந்த நாட்டை ஒரு நிழல் நாடகமாகவே கருதுகின்றார்கள். அதற்காகவே வாழவும் செய்கின்றார்கள். எதற்காவது காத்திருப்பவர்கள் அக்காலங்களில் எதையும் நிரந்தரமாக உற்பத்தி செய்வதில்லைத் தானே. அவர்களால் அது முடிவதில்லை. ஒலி பெருக்கி சொல்லிற்று....... "இரவுப் புகையிரதம் வருகிறதாம்". எனது அம்மம்மா வருகிறாள். இருவரும் அணைத்து முத்தமிட்டுக் கொள்கிறோம். இரவுத் தூக்கம் கலைத்த பயணிகள் நெருசி வெளியேறினர். இப்போது அந்த ஸ்ரீ லங்கா அகதியைப் பார்த்தேன். அவன் அங்கேயே இருந்தான். நான் கிறுக்கிக் கசக்கி வீசிய சித்திரப் பேப்பர்கள் குப்பைத் தொட்டியில் கிடந்தன. புகையிரத நிலையம் இப்போது புதியவர்களால் நிறைந்து கொண்டிருந்தது. இதனுள் அவனும்.

●

# சுழற்சி

"என் அம்மா பழையவள் தான். ஆனால், அவளின் முகச் சுருக்கங்கள் எனக்குப் புதியவை.

பொப்பல் வீதி - 5

சிவா தினமும் அதே புகையிரதத்தைத்தான் பிடிப்பான். அல்லது, நேரத்தைக் கடைப் பிடிக்கத் தெரியாதவன் என்ற பெயர் கேட்க வேண்டிவரும். இவன் இலங்கையிலிருந்து வந்து அகதியாக டென்மார்க்கில் வாழுகின்றானே தவிர, அவனுடைய பழக்க வழக்கங்கள் எதுவுமே பெரிதாக மாறவில்லை. மாற்றிக் கொள்வதில் அவனுக்கு ஒன்றும் ஆட்சேபனை கூடக் கிடையாது. ஆனாலும் அவனால் அப்படி மாற முடியவில்லை. சிவாவைவிட, டென்மார்க்கிற்கு பிந்தி வந்தவர்களில் அனேகமானவர்கள் பெருமளவு மாற்றத்தை அடைந்திருந்தனர். இத்தகையவர்களுடன் சிவா அவ்வளவாகப் பேச்சுக் கொடுப்பதில்லை. பேச்சுக் கொடுக்கப் பயந்தான். காரணம், அவர்களுடைய கிண்டலும், கேலியும் சிவாவுக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. சிவாவின் எதிர்காலம் பற்றி அவனே அதிகம் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனாலும், அவனுடைய சமூக ஆலோசகர் நினைவு படுத்தினாலுண்டு. எதிலுமே ஒரு பிடிப்பற்ற நிலையில் சிவா இருந்தான். ஊருக்குக் காசு அனுப்ப வேண்டும் என்ற சுமை கூடக் கிடையாது. ஆனாலும் நிறையவே அவனுக்கும் அவனது தாயாருக்குமிடையே

இருக்கிறது. இந்தக் கடிதப் பாலம் ஒன்றே அவன் கடைப் பிடிக்கும் கட்டுப் பாடுகளுக்குக் காரணமாக இருந்து வருகிறது. தாய், தகப்பனுக்கு சிவா ஒரே ஒரு பிள்ளை என்பதனால் தான் அவனாவது உயிர் தப்பி வாழட்டும் என்ற தாயாரின் விருப்பமும், சிவாவின் பயந்த சுபாவமும் தான் சிவா நாட்டிலிருந்து இடம் பெயரக் காரணமாக இருந்தன.

காலையில் வேலைக்குச் செல்பவர்கள் விரைந்து கொண்டிருந்தனர். அது ஒரு கோடைகாலமென்பதால் மனித முகங்களில் சந்தோசமும், உற்சாகமும் தெரிந்தது. சிவாவைக் கடந்து கார்கள் வேகமாகச் சென்றன.

***

## ரோவ வீதி 9

இந்த வீட்டில் ஒரு வயதான பெண்ணும் அவனுடைய கணவனும் தான் வசிக்கின்றனர். அந்த வீடு மிக விசாலமானதும், ஒரு பெரிய தோட்டத்தையும் கொண்டது. வகைவகையான மலர்கள் வளர்ப்பதே அவர்களது வேலை. பச்சைப் புற்கள் நடுவே மஞ்சள் செவ்வந்திப் பூக்கள் நல்ல வடிவாக இருக்கும். ஆனாலும், சிவாவுக்கு மிகவும் பிடித்தது அந்த வயதான அப்பிள் மரம்தான்.

ஒழுங்காகக் கத்தரிக்கப்பட்ட அந்தப் புல்வெளியில் திரண்டு, நெளிந்து ஒரு நடன மாதுவைப் போல நிற்கும் அந்த அப்பிள் மரத்தை அடியோடு பிடுங்க அவர்கள் முயற்சித்துக் கொண்டிருந்தனர். 'கிழடுகள்' என்று சபித்தபடியே சிவா சென்று கொண்டிருந்தான்.

***

## கடைச் சந்தி

சிவா உன்னிப்பாகப் பார்த்தான். அவனை இன்று காணவில்லை. செம்பட்டைத் தாடியும், மீசையுமாக கையில் ஒரு மதுப் போத்திலுடனும் அவன் தினமும் நிற்பான். இவனை இன்று காணவில்லையே? என்று யோசித்தபடி சிவா நடந்து கொண்டிருந்தான். "இனித்தான் வருவானாக்கும்" என்று சிவாவின் வாய் முணுமுணுத்தது. அந்தத் தாடிக்காரன் தான் டென்மார்க்கில் சிவாவைக் கண்டு முதன் முதலில் சிரித்தவனும், அத்துடன் அனுதாபத்துடன் சிவாவின் கதையைக் கேட்டவனுமாகும்.

அதனாலோ என்னவோ அந்தத் தாடிக்காரன் மீது சிவாவுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டிருந்தது. சிவாவின் தனிமையை, இழப்புக்களைப் புரிந்து கொண்ட அவன், ஒருநாள்........ 'சிலவற்றைப் புதிதாக முயன்று பார்' என்று சொல்லியிருக்கிறான். இது ஒரு பெரிய மாற்றத்தைக் கொடுத்ததோடு அவனைச் சிந்திக்கவும் வைத்தது.

***

## புகையிரத நிலையம்

நகரசபையில் வேலைபார்க்கும் அந்தத் தொக்கை மனுசி, உயர்தர வகுப்புப் பாடசாலையில் படிக்கிற அந்தப் பெட்டையள், காலுக்குச் சில்லுப் பூட்டிக் கொண்டு ஓடிவாற அந்தப் போலந்துக் காரன் மாட்டின், பல்லு மிதந்த டோட்டா எல்லோரும் இன்றும் நிற்கிறார்கள். இந்த முகங்கள் சிவாவுக்குத் தினமும் பழக்கப் பட்ட முகங்கள்.. தினமும் 'வணக்கம்' சொல்லும் அளவுக்கு மட்டும் பழக்கம் இருந்தது. கொஞ்சத் தூரம் தள்ளி அந்த ரைக்காரனும் நிக்கிறான். எப்பவும் முகம் 'உம்' எண்டுதான் கிடக்கும்.

"கையில கிடக்கிற சூட்கேசுக்கும் உவனுக்கும் என்ன வித்தியாசம்? சும்மா நிற்பான். உவனுக்குப் பொஞ்சாதி, குடும்பம் இல்லப் போல........? சிவா வழமையாக நினைப்பது போலவே நினைத்தபடியே வந்து நின்ற புகையிரதத்தில் ஏறிக் கொண்டான்.

***

## பயணம்

கோதுமை வயல்களையும், வீட்டுக் குவியலையும், சின்னச் சின்ன யோபயாத் தோட்டங்களையும் ஊடறுத்துக் கொண்டு செல்லும் அந்தப் புகையிரதத்தில் பயணம் செய்வது சிவாவிற்குப் பிடித்தமான ஒன்று. ஆனால், அதே மனிதர்களுடனும், அதே வீதிகளிலும் தொடர்ந்து பயணம் செய்வது என்பது அவனுக்குப் பிடித்திருக்கவில்லை. அதனாலோ என்னவோ வேறொரு நகரத்திற்கு மாறுகிற உத்தேசம் கூட வந்தது. சிவா பல குழப்பமான நினைவுகளில் இருப்பது புரிகிறது. மாற்றங்களை விரும்புகின்ற அதேவேளை, தனது பழைய உறவுகளையும், இழந்து விட்ட எத்தனையோவற்றையும் நேசிக்கிறானே! இடைக்கிடை புகையிரதம் நிற்பதும், சில புதியவர்களுடன் அதே பழைய முகங்கள் இறங்குவதும் ஏறுவதுமாக சிவாவின் புகையிரதப் பயணம் வழமையான அந்த ஆலைச் சங்கொலியுடன் முடிந்தது.

***

## வகுப்பு

அவனுடைய வகுப்பிலும் அதே மாணவர்கள். அதே ஆசிரியை. அதே புத்தகங்கள். அதே...... அதே...... எல்லாம் அதே........ அதே.... ஆனாலும் புதிய பாடங்கள் தான். ஆனாலும் அவனால் புரிந்து கொள்ள முடியாதபடியான புதிய பாடங்கள்.

சிவாவுக்கு எரிச்சலும், தலையிடியுமாக இருந்தது. சிவா வகுப்பு முடிவதற்கு முன்பே ஆசிரியையிடம் சொல்லிக் கொண்டு தனது அறைக்குச் செல்லும் நோக்கத்தோடு ஆசிரியையுடன் கதைத்தான்.

அவள் "ஏன்?" என்று கேட்டாள்.

"ஊரிலிருந்து கடிதம் வரயில்ல. தலையிடிக்குது...... அதுதான்" என்றான் சிவா.

"சரி நீ இன்றைக்குப் போகலாம். ஆனால், ஊரிலிருந்து கடிதம் வந்ததனால் தலையிடி என்று சொல்லி நாளைக்கு வகுப்புக்கு வராமல் நிற்கக் கூடாது." என்ற ஒரு புத்திமதியுடன் விடை கொடுத்தாள்.

***

## மீண்டும் பயணம்

சிவா வீடு நோக்கிப் பயணமானான். இடைக்கிடை கடைச் சந்தியில் நிற்கும் அந்தத் தாடிக்காரனின் ஞாபகம் வந்து போனது.

"ஏன் வரயில்ல உவன்...... தண்ணி அடிக்கிறத விட்டிட்டானோ? அல்லது.......... புதிய இடம், புதிய குடிகார நண்பர்கள் என்று ஊர்மாறி விட்டானோ? நிச்சயமாய்த் தண்ணி அடிக்கிறத விட்டிருக்க மாட்டான். சாகும் வரை குடிப்பான் எண்டு தான் அண்டைக்குச் சொன்னவன்" சரி..... என்ன இழவெண்டாலும் எனக்கென்ன? என்று சிவாவினால் அந்த நினைவிலிருந்து தப்ப முடியவில்லை. என்ன இது?

ஊருக்கு வந்தால் உயிர் தப்பாது. இப்ப வரவேண்டாமெண்டு அம்மா கடிதம் எழுதினா...... அப்பிடியெண்டால் பாலாண்ணர் சொல்லுறது போல........ இஞ்சினேக்க..... வயோதிபர் மடங்களிலையோ சாகிறது? இப்படி பலவிதமான நினைவுகளில் மூழ்கியபடி, தனது வாடகை அறையுள்ள அந்தச் சின்னக் கிராமத்தில் இறங்கினான்.

***

## கடைச் சந்தி

அந்தக் கடைச் சந்தியில் இப்போதும் வழமை போல சிலர் நின்று பியர் அருந்திக் கொண்டிருந்தனர். ஆனால் அந்த தாடிக்காரனைக் காணவில்லை. அவர்களில் சிலரைச் சிவாவுக்கு சிறிது பழக்கமென்பதால் அருகிற் சென்று அந்தத் தாடிக் காரனைப் பற்றி விசாரித்தான்.

"ஓ நீ அவனைப் பற்றிக் கேட்கிறியா? அவன் நேற்றிரவு செத்துப் போனானாம்......" என்றபடி அவர்கள் வேறு பக்கம் திரும்பிக் கொண்டனர். மாற்ற முடியாத அந்த மரணத்திற்கும் பிறப்புக்கும் யார் விதிவிலக்கானார்கள்?" சிவா நடந்தான்.

***

## ரோவகெத

சிவா வீடு நோக்கி நடந்தான். அவனுக்குப் பிடித்த அந்தப் பெரிய வயதான அப்பிள் மரம் அதே வளவுக்குள் பிரட்டி வேறொரு இடத்தில் நடப்பட்டிருந்தது. அதன் அடிப்பாகத்தில் வெட்டுகளும், கீறல்களும், உராய்வுகளும் இருந்தன. முந்திய அழகு அந்த மரத்தில் இப்போது இல்லை. அந்த அழகு வாடியிருந்தது.

"ஏன் இப்படி?" என்று அந்த வளவுக்குள் நின்ற கிழவியைக் கேட்டான்.

"இந்த மரம் மிகவும் நிழல் தருகிறது. அத்துடன் இதன் பழங்களும் அவ்வளவு சுவையானவையல்ல. அதனால் அதைப் பிரட்டி ஓரமாக நாட்டியுள்ளோம். அதோ அந்த இடத்தில் புதிய பூக்களை நாட்டப் போகிறோம். சிலவேளை திரும்பவும் முளைக்கலாம் அல்லது, முளைக்காமலும் போகலாம்.......... எப்படி இருந்தாலும் பரவாயில்லை. இறந்து போனாலும் எங்களது வீட்டைக் குளிர் காலத்தில் வெப்பமாக்குவதற்குப் பயன்படுத்தலாமல்லவா" என்றாள் கிழவி.

சிவாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது..... "என்ன உலகமிது.....? அவரவர் விருபபங்களுக்காக எவரெவரோ...... எதுவெல்லாமோ எங்கெல்லாமோ எப்படி எப்படியோ இடம் பெயர வேண்டி இருக்கிறது. புரட்டி எடுக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளேயே...... அது வாடி விட்டது. இது திரும்பவும் வேர் விடுமா? இளைய மரமென்றால் நிச்சயம் வேர் விடும். இது ஒரு பழையமரமாயிற்றே! கடிதம் பார்க்கும் ஆவலுடன் சிவா துரிதமானான்.

***

பொப்பல் வாய் 5

சிவா குடியிருக்கும் அந்த வாடகை வீடு வந்து விட்டது. தன்னை யாரோ பெயர் சொல்லி அழைப்பது கேட்டு நின்றான்.

"அட உவள் புருசனை விட்டிட்டு இருக்கிறவள். முன்னம் வண்டியத் தள்ளிக் கொண்டு திரிஞ்சாள்..... இப்ப ஒரு வண்டிலத் தள்ளிக் கொண்டு வாறாள். பிள்ள....... பெத்திட்டாள் போலகிடக்கு. ஆரது பக்கத்தில வாறவன்........? உவன் தான் பழைய புருசனே.......??" என்று சிவா நினைத்துக் கொண்டிருக்க........ அவர்கள் அவனை நெருங்கினார்கள். அவள் அவனை அறிமுகப் படுத்தினாள்......

"இவன் தான் எனது புதிய கணவன்".

அவன் சிவாவோடு கைகுலுக்கிக் கொண்டான். அந்தச் சிறிய அழகான வண்டிலுக்குள் அந்தச் சின்னக் குழந்தை அழுதது.

தாடிக் காரன் செத்தப் போனான். பிள்ளை பிறந்து விட்டது. அவளுக்கும் புதிய கணவன் அப்போ........ அந்த அப்பிள் மரம்?..... சிவா?

***

(பின் குறிப்பு: இக்கதையில் பயன் படுத்தப் பட்டிருக்கும் பொப்பல் வீதி, ரோவ வீதி..... என்பன டென்மார்க்கில் உபயோகத்திலிருக்கும் வீதிகளின் பெயர்களாகும். யோபயா என்பது ஒருவகைச் சிவந்த பழம்.)

# துணை

எனது பெயர் விஜி. யாழ்ப்பாணத்திலிருந்து வந்து டென்மார்க்கில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வருபவரும் டனிஸ் பிரஜா உரிமை பெற்றவருமான பாவுவை கல்யாணம் செய்து கொண்டவர்.

அவர் டென்மார்க்கிலிருந்து யாழ்ப்பாணம் வந்து என்னைக் கல்யாணம் செய்து கொண்டு நாடு திரும்பியவுடன் நான் கொழும்புக்கு வந்து ஒரு வருடம் தங்கியிருந்து. பின்னர் டென்மார்க்கில் கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கான குடும்ப இணைப்புத் திட்டத்தின் கீழ் ஒரு வருட விசாவில் நான் கணவருடன் இணைந்து கொண்டேன். நான் டென்மார்க்கில் தொடர்ந்து வாழவேண்டுமெனில் கணவருடன் தொடர்ந்து ஐந்து வருடங்கள் அவருடன் ஒரே முகவரியில் நானும் சேர்ந்து வாழ்ந்திருக்க வேண்டுமென்று இந்த நாட்டுச் சட்டங்கள் கூறுகின்றன. கல்யாணம் ஏதோ நல்ல சிறப்பாகவே நடந்தது. நானும் எனது பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை என்பதால் அவர்களும் தமது உழைப்பு முழுவதையுமே சீதனமாகத் தந்து விட்டார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை என்பதால் அதுவும் டனிஸ் சிற்றிசன் என்பதால் காசாகவே பத்து லட்சம் அவருக்குக் கொடுத்தார்கள். அத்துடன் கல்வீடு, தென்னந் தோட்டம் ஒன்று, தோட்டக் காணி ஒன்று, நாற்பது பவுணில் நகை, என்று அத்தனையும் சீதனமாகவே கொடுத்தோம். கல்யாணச் செலவு கூட, நாங்கள் தான். இவ்வளவு சீதனம் கொடுத்துக் கல்யாணம் செய்து கொள்வதற்கு அவர் பெறுமதி உள்ளவரா? என்று ஆரம்பத்திலேயே எனது பெற்றோருடன் பேசியிருந்தேன். அதைவிட, எனது நிலையில் தரகர்

ஒருவரையே நம்பி ஒரு போட்டோவைப் பார்த்தே முடிவெடுக்கலாமா? என்றும் நான் கேட்டபோது.......

"எல்லாத்தையும் விசாரித்துத்தான் செய்ய வேணமெண்டால் டென்மார்க் என்ன பக்கத்தயா இருக்கு........" உங்க பார்...... வெளி நாட்டில இருக்கிற ஆக்களின்ர வீடுகள....... காசெல்லாம் அங்கயிருந்து அனுப்பி...... என்ன மாதிரி இருக்குதுகள். அதவிட, உனக்குப் பல்கலைக் கழகத்துக்கு இடம் கிடைச்சிருக்குதுதான். அங்க பார்..... அங்கையும் பிரச்சினைதான். அப்படித்தான் படிப்ப முடிச்சாலும் எங்க போய் வேலை செய்யிறது. இஞ்சயும் பார்த்து ஒரு மாப்பிளைய எடுக்கலாம் என்று கொம்மா சொன்னவதான். ஆனால், எடுக்கலாம் தான். எங்கட நாட்டில எங்க நிம்மதி இருக்கு எண்டு காட்டெட்டன். கொம்மாவால பதில் சொல்ல முடியேல்ல. நானொண்டும் கண்ண மூடிக் கொண்டு முடிவெடுக்கேல்ல. யோசிக்காமல் சரியெண்டு சொல்லெண்டார்."

அப்பாவின் கருத்துகளும் சரியெண்டு படவே நானும் சரியெண்டுதான் கலியாணத்திற்குச் சம்மதிச்சன்.

அவரும் டென்மார்க்கிலிருந்து வரவும் கலியாண நாளும், நேரமும் மட்டுமட்டாகவே இருக்கக் கலியாணமும் சட்டுபுட்டென்று முடிந்தது. எனக்கும் பாபுவை பிடித்தே இருந்தது. படிப்பும், கௌரவமான தொழிலும் ஒரு ஆணைத் தீர்மானிப்பதில்லை என்பதை எனது கணவர் பாபுவைச் சந்தித்த போதுதான் புரிந்து கொண்டேன். மிகவும் தெளிவாகப் பேசினார். உண்மைகளை நேராகவே சொன்னார். அவருடன், எங்களுடைய கல்யாணத்திற்கென்று டென்மார்க்கிலிருந்து, கணவனை இழந்து தனது மூன்று குழந்தைகளுடன் தனித்து வாழும் ராணி அக்கா பாபுவைப் பற்றி அவருடைய நல்ல குணங்களைப் பற்றிச் சொன்ன விடயங்களும் என்னை மிகவும் உற்சாகப் படுத்தியிருந்தன. வாழ்க்கையை உற்சாகத்துடன் ஆரம்பித்தேன். கல்யாணம் முடிந்து இரண்டொரு நாளில் நானும் அவரும் தனிமையில் பேசிக் கொண்டிருந்த போது ஒரு விடயத்தைச் சொன்னார்.

"விஜி! நான் இப்ப சொல்லப் போறத வடிவாய்க் கேளும்....... நான் டென் மார்க்குக்குப் போகும் போது எனக்கு வயது....... பத்தொன்பது தான். புதிய சூழல், எனது இளமை, கட்டுப் பாடில்லாத சுதந்திரம், என்று வாழ்ந்த போதுதான்...... அவள் எனது வாழ்வில் சந்தித்தாள்..... அவள் ஒரு டனிஸ் பெட்டை. என்ர வயது தான். அவளும் என்னை விரும்பினாள். நானும் அவளை விரும்பினேன். பெரிதாக ஒன்றும் நிகழவில்லை........ சும்மா....... நான் இந்த விடயத்த உனக்கும் சொல்லிப் போடவேணுமெண்டு இந்தக் கலியாணப் பேச்சு ஆரம்பிக்கும் போதே நினைச்சிருந்தனான்" என்று அந்த விடயத்தை விளக்கமாகவே சொல்லியிருந்தார். நானும் அவருடைய அந்தப் பெருந்தன்மையை விரும்பினேன். இந்த நாளில எந்த

ஆம்பிளையள் இப்படி நடந்து கொள்ளுவினம். சும்மா காதல்தான்..... இப்ப இது சகசமான விடயம் தானே. சாதாரணமாய்க் கடிதம் பரிமாறியிருப்பினம்...... இது ஒரு தவறோ, இப்படித்தான் இஞ்சையும் எல்லாரும் செய்யினம் எண்டு அன்று நான் இந்த விடயத்தை மிகச் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டிருந்தேன். வாழ்க்கை என்பது விட்டுக் கொடுப்பதில் தானே உள்ளது. என்னதான் இப்போது எனது வாழ்க்கை சிதைந்து போய்விட்டாலும் ஆரம்பம் நல்லதாகவே இருந்தது.

எனது வாழ்வை நானே சிதைப்பேனா? அப்போ எனது வாழ்வை இந்த இரண்டு ஆண்டுக்குள் சிதைத்தவர்கள் யார்? ஏன் சிதைத்தார்கள்?

***

நான் விஜியின் கணவர் பாபுவின் நண்பன். இந்தப் பிரச்சனையில பாபுவில் ஒரு பிழையுமில்ல. இது விஜி தான் தன்ர தலையில அள்ளிப் போட்டுக் கொண்ட மண்.

பாபு ஒரு ஆம்பிள. அவன் தான் நினைச்சதை தன்ர குடும்பத்துக்கும் மற்றவைக்கும் செய்ய விரும்பிறவன். இப்பவும் செய்து வாறான். விஜி நேற்று வந்த பொம்பிள. அவவின்ர அதிகாரம் கூடிப் போச்சு. அங்கே போகாத, இஞ்ச போகாத அவனோட கூடாத இவனோட கூடாத எண்டு கட்டுப் பாடுகள். பாபு சுதந்திரமாய்த் திரிஞ்சவன். திடீரெண்டு மாத்தலாமோ? எல்லாத்தையும். கொஞ்சம் கொஞ்சமாய் அவனே மாற்றிக் கொண்டு வழத்திற்கு போயிருப்பான்.

விஜி அவசரப் பட்டிட்டா. இப்ப அதை அனுபவிக்கிறா. அப்பவே நான் பாபுவுக்குச் சொன்னனான். எங்கட பொட்டையளைக் கலியாணம் செய்யாத...... வாய்க்காறியள்........ எண்டும்..... பேசாமல் இந்தியாவுக்குப் போய் ஒரு அனாதை ஆச்சிரமத்தில ஒரு வடிவான பொட்டையாய்ப் பார்த்துக் கலியாணத்தைச் செய்து கொண்டு வா! அந்த மாதிரி எங்களை வைச்சுப் பாப்பாளவையெண்டு. கேட்டவனோ.

இதே போலத்தான நானும் ஒரு அனாதையைப் பார்த்துக் கலியாணம் செய்து கொண் வந்தனான். அந்தமாதிரி எனக்கு அடங்கின மனைவியாய் இருக்கிறாள். உயர்ந்த படிப்பையோ, பெரிய உத்தியோகத்தையோ அவள் என்னிடம் எதிர்பார்க்கவில்லையே. ஒரு அன்பு எண்டு எக்கச் சக்கமாய் ஆசைப்பட்டு மாண்டு போய் இருக்கிறான் பாபு.

இவன் பாபு விட்டச் சொன்னனான் அந்த டனிஸ் பெட்டையோ, உனக்கிருந்த தொடர்பு பற்றிப் புதிசாய் வாற பொஞ்சாதியிட்ட சொல்லித் தொலைக்காதயெண்டு கேட்டானோ? ஏதோ பெரிய மனிசன் எண்ட

நினைப்பில எல்லாத்தையும் சொல்லிப் போட்டு. அதிலையும் அவனுக்கும் அந்த டனிஸ் காரப் பெட்டைக்கும் பிறந்த குழந்தையைப் பற்றியுமெல்லோ சொல்லியிருக்க வேண்டும். இந்த விசயத்தில விஜி ஏமாந்து தான் போனாள். அந்தப் பிள்ள டென்மார்க்குக்கு வந்த கொஞ்ச நாளிலேயே யாரோ எங்கட சனம் காதில போட்டிட்டினம். விஜிக்கும் விசயம் தெரியாமல் ஏதோ இவன் ஒருத்தன் தான் இப்படித் தொடர்பு வைச்சிருந்திருக்கிறான் எண்டு நினைச்சுப் பலமாய் பாபுவோட சண்டை போட்டிட்டாள். எல்லாரும் இப்படி நடக்கிறதில்லைத்தான். ஆனால், சில இளைஞர்கள் இப்பிடி நடந்திட்டால் அவங்களும் மறந்து வாழத் தயாராகிற போது கண்டும் காணாததும் மாதிரி விட வேண்டியது தான். அதவிட்டிட்டு. "நான் யாழ்ப்பாணத்தில ஆருடனும் தொடர்பு வைத்துக் கொண்டு விட்டு இங்க வந்திருந்தால் நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளுவியளோ?" எண்டு விஜி கேட்டிருக்கிறாள். இந்தக் கேள்விய யாரால தாங்க முடியும். அண்டைக்குத் தான் பாபு கம்பியால அடிச்சவனாம். விஜிக்கு இப்பவும் அந்தத் தழும்பு இருக்குத்தான. விசயத்தப் பெரிசாக்காமல் வாழத் தெரியாத பெண்ணோட என்னெண்டு வாழுறது. ஆம்பிளையள் கண்ட இடத்தில சேத்த மிதிச்சுத் தண்ணி கண்ட இடத்தில கழுவிப் போவினமெண்டு நான் ஒருக்கால் விஜியிட்ட சொன்னபோது என்னமாய் காளிபோல நிண்டாள்.

"உந்தப் பழமொழிக்கு இந்தக் காலத்துப் பெண்களை ஒத்துவரச் சொல்லாதையுங்கோ!" என்றபடி கதவை அடித்துச் சாத்தி என்னை எழுந்து போகச் சொன்னாளே. இப்ப அனுபவிக்கிறா.

அது போகட்டும்........ அவவுக்கு விசாப் பிரச்சனை இருக்கெண்டு தெரியுமெல்லோ. பாபுவோட ஒத்துப் போய் ஐந்து வரிசமாவது இருந்தால் தான் விஜிக்கும் தனியான வதிவிட உரிமை கிடைக்குமென்டு தெரிஞ்சு கொண்டும் பாபுவை எதிர்த்திருக்கிறாள் எண்டால் கொழுப்புத்தான. அது மட்டுமல்ல தனிச்சு வாழுகிறதுக்கு இவவிட்ட உழைப்பிருக்கோ? ஒருவேலை இருக்கோ? அது சரி டனிஸ் பாசையாவது தெரியுமோ? இப்பதான் டானிஸ் பள்ளிக்கூடத்தக்குப் போகத் தொடங்கினவ? எல்லாத்தையும் விஜி யோசிச்சிருக்க வேணும்.

இந்த விசயத்தக் கேளுங்கோ...... பாபுவுக்கும் ராணியாவுக்குமிடையில கள்ளத் தொடர்பாம்........ இவற்ற உழைப்பெல்லாம் அங்க தானாம் போனதாம். பாபு இவ்வளவு காலமும் உழைச்ச காசு எங்க? ஆன தளபாடங்களோ மற்றும் வீட்டுச் சாமான்கள் வைச்சிருந்தவரோ? ராணியக்கா பாபுவ வளைச்சுப் போட்டாவாம். இது பற்றி எனக் கொண்டும் தெரியாது.

ராணியக்காவோட தொடர்போ, தொடர்பில்லையோ விஜிக்கேன் இந்த ஆராச்சி? உன்ன வடிவாய் வைச்சிருக்கிறானோ? இல்லையோ? எண்டுதான் விஜி யோசிச்சிருக்க வேணும்.

ராணியக்கா பற்றிச் சச்சரவுதான் இவையளுக்கிடையில பெரிசாய் வெடிக்கப் போச்சுது. அண்டைக்குப் பெரிய சண்டையாம. பாபுவும் நல்லாய்க் குடிச்சுப் போட்டு வந்து பயங்கர அடியாம். பின்னலப் பிடிச்சுக் குளியலறைக் கம்பியில கட்டிப் போட்டுக் கத்தக் கத்த வாயால ரத்தம் வடிய வடிய அடிச்சதுக்குப் பிறகும் விஜியின்ர வாய் அடங்கிச்சுதோ? இல்லதத்தான். அதே மாதிரிச் சண்டை தான். ராணி அக்காவின்ர பிரச்சனைதான் பெரிசாய்ப் போச்சுது. அவன் குடிகாரனாம். வீணாய் ஒரு பாழும் கிணத்தில தள்ளிப் போட்டினமெண்டு கத்துவாவாம் விஜி.

இப்படி சண்டை தேவையோ? ஒரு ஆம்பிள குடிக்கிறது பெரிய பிரச்சனையோ? அதுகும் நாடுவிட்டு நாடு வந்து அகதியாய் வாழுறதெண்டதும் சும்மாய் விசயமில்ல. அதோட ஒருவனே நாலு ஐந்து வேலை செய்ய வேண்டிக் கிடக்கு. உடம்பலுப்புக்குக் கொஞ்சம் பாவிக்கிறது பிழையில்லத்தான. ஆனால் சிலர் சந்தோசத்துக்கும், துக்கத்துக்கும், உடம்பலுப்புக்கெண்டும் தினமும் பாவிச்சுக் கொண்டிருக்கினம் தான். ஆனால் இவன் பாபு கொஞ்சம் கூடத்தான் பாவிக்கிறான். அதுவும் விஜி வந்தேக்குப் பிறகுதான் சரியாய்த் தண்ணி அடிக்கிறான். ராணி அக்காவின்ர புருசன் செத்தேக்குப் பிறகு அவவுக்கும் அவவின்ர பிள்ளையளுக்கும் நல்ல உதவியாய் இருந்திருக்கிறான். இருந்து வாறான். இந்த விஜி நிப்பாட்டச் சொல்லுறா ராணி அக்காவீட்ட போகவே கூடாது எண்டிறா....... இது பாபுவுக்குப் பிடிக்கேல்ல. இது சம்பந்தமா ராணி அக்காவோட விஜி சண்டையும் போட்டிருக்கிறா. சண்டையும் நடுறோட்டில நடந்திருக்கு. ராணி அக்கா பாபு வேலையால வந்தவுடன சொல்லிப் போட்டா. பாபுவும் கோவிச்சுக் கொண்டு விஜியை இழுத்துக் கொண்டுபோய் ராணி அக்காவின்ர காலில போட்டிட்டு அவவிட்ட மன்னிப்புக் கேட்கச் சொல்லியிருக்கிறான். ஐரோப்பாவிலே அல்லது வேறு எங்கோ உறவுக் காரர் ஒருவர் கூட இல்லாத இவ எப்பிடி இப்பிடித் தடிப்பாய் நடக்கிறா. கொஞ்சமாவது இவ பொறுத்திருந்து அமைதியாய் நடந்திருக்க வேணும். விட்டிட்டா........... இப்ப அனுபவிக்கட்டும்.

***

நான் விஜியின் பக்கத்து வீட்டுக் காரி. விஜி பாவம் சின்னப் பிள்ளை. வந்த நாளிலிருந்து அவளோட பழகியிருக்கிறன். அவளும் தன்னுடைய பிரச்சனைகளை மனம் விட்டுப் பேசியிருக்கிறாள். நானும் சில உதவியள் அவளுக்குச் செய்திருக்கிறன். நானும் ஒரு பெண்தான். விஜியின் பிரச்சினைகளை என்னாலன் புரிந்து கொள்ள முடியும். அதுவும் அவளுக்கு நடந்த கொடுமைகளை நினைத்தால் இன்னொரு பெண்ணுக்கு இப்படி ஒரு நிலை ஏற்படக் கூடாது என்று விரும்புகின்றேன். எப்பிடித்தான் பாபுவினுடைய பலாத்காரத்தைத் தாங்குவது. பாபுவுக்கும் ராணி

அக்காவுக்கும் கள்ளத் தொடர்பிருப்பதை அவளே ஒருநாள் நேரடியாகக் கண்டு கொண்டதாகக் கூட என்னிடம் கூறியிருக்கிறாள். தன்னுடைய கணவனைப் பற்றி தவறான செய்திகளை ஒரு மனைவி மற்றவர்களிடம் கூறி அழுவதற்குப் பெரிய துணிவு வேண்டும். தற்பொழுது என்னவென்றால் ராணி அக்காவிடம் விஜி மன்னிப்புக் கேட்கச் சொல்லுறதும் அவளைப் போட்டு அடிக்கிறதும் மகா கொடுமை.

தான் தனது பருவ வயதிலிருந்தே தனது கணவன் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் தனது வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அவள் சில வரையறைகள் கற்பனைகள் செய்து வைத்திருக்கின்றாள்.

ஆனால், நடந்தது எல்லாமே தலை கீழாக அமைந்த போது, மனமுடைந்து போனாள் தான். அதனால வந்த கோபமும் இந்தப் பிரச்சனையை எப்படிப் பக்குவமாகத் தீர்த்துக் கொண்டு தனது வாழ்க்கையைத் திரும்பவும் சீர்செய்து கொண்டு பாபுவோடு சேர்ந்து வாழ்வதற்கான பல முயற்சிகளை எடுத்துப் பார்த்தும் அனைத்திலும் அவள் தோற்றுப் போனாள். பாபு தனது வன்முறையால் வெற்றி பெற்றான்.

"இப்படியான பிரச்சினைகள் இருக்க ஏன் குழந்தை பெற்றுக் கொள்ளும் அளவுக்குப் போனாய்" என்று ஒரு நாள் நான் கேட்டுப் பார்த்தேன்.

"அக்கா ஒரு பிள்ளையைப் பெத்துக் கொடுத்தாலாவது என்மீது அவருக்கு அனுதாபமும் விருப்பமும் ஏற்படும் என்று தான் அந்த விடயத்தை மேற்கொண்டேன்" என்றாள்.

பாவம் விஜி. ஒரு நாள் பாபு நல்லாகவே அடித்துப் போட்டான். அழுது கொண்டு என்னிடம் வந்தாள். நானும் அவளின் அலங்கோலத்தைக் கண்டு பொறுக்க முடியாமல்..........

பொலிசுக்கு ரெலிபோன் பண்ணி....... பொலிசும் வந்து விஜியைக் கொண்டு சென்று பாதிக்கப் படும் பெண்கள் பராமரிக்கப்படும் ஒரு நிலையத்தில் சேர்த்து விட்டார்கள். அப்ப விஜி பிள்ளைத்தாச்சி. அந்த நிலையத்தில் சில மாதங்கள் அவள் தங்கினாள். தனது கணவன் மீது சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கவிடாமல் தான் மீண்டும் பாபுவோடயே சேர்ந்து வாழவிரும்புவதாகச் சொல்லி வீட்டுக்குத் திரும்பினாள். கிணற்றுள் விழுந்த கல் அப்படியே இருக்கத் தண்ணி அள்ளுவது போல........ பிரச்சனைகள் அப்படியே இருக்க சேர்ந்து வாழ மீண்டும் முயன்றாள் விஜி. மீண்டும் அவள் தோற்றுப் போனாள்.

இப்போதும் பாதிக்கப் பட்ட பெண்கள் வதியும் நிலையத்தார்கள் அவளோடு அடிக்கடித் தொடர்புகளை வைத்திருந்தனர், விஜி கர்ப்பமுற்றிருப்பதனாலும் அவளுடையதும், அவள் வயிற்றில் வளரும் குழந்தையின் நலத்தையும் கருத்தில் கொண்டு அவளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு ஆலோசனைகள் வழங்கி வந்தனர். இதையும் பாபு விரும்பவில்லை. அத்துடன் பாபு இப்போதும் ராணி அக்கா வீட்டுக்குச் சென்றே வந்தான். விஜி இந்த விடயத்தில் பாபுவுடன் தர்க்கம்

புரிவதை இந்தக் கட்டத்தில் முற்றா நிறுத்தி விட்டாள்.

விடயம் தலைக்குமேல் சென்று விட்டதாகவும், தன்னுடன் வாழ விரும்ப வில்லையெனில் தன்னை விட்டுப் பிரிந்து போகச் சொல்லியும் தான் எங்காவது ஒரு அனாதைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் உறுதியாகச் சொன்னதே தான் காரணம்.

ராணி அக்காவே தூண்டிவிட்டு பாபுவைக் கொண்டு அடிக்க வைக்கிறா என்றும் வயிற்றில் அடிபடாமல் அடிக்கச் சொல்லிச் சொன்னவவாம் என்றும் நான் கேள்விப் பட்டுக் கவலை கொண்டேன்.

ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணுக்கு எதிராக இருப்பதா? என்ன கொடுமை இது. அடித்தால் தான் விஜி வீட்டை விட்டு வெளியேறுவாள் என்றும் அதன் பிறகே தனக்குச் சுதந்திரம் என்றும் பாபு நம்புகின்றான். இதற்கிடையில், ஒரு நாள் இவளுக்கு ஆலோசனைகள் வழங்கி வந்த அந்தச் சக ஆலோசகர் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள். "இத்தகைய சூழ்நிலையில் விஜி இந்த வீட்டில் பாபுவோடு சேர்ந்து வாழ்வது அபாயமானது. அதனால் விஜியைத் தனிமைப் படுத்தித் தனி வீட்டில் வாழ்வதற்கு வசதிகள் செய்து கொடுப்பதாகவும், இதற்காக விஜியும் பாபுவும் விவாகரத்துச் செய்து கொள்ள வேண்டும். இந்த ஒழுங்குகள் அவளுக்குப் பிள்ளை பிறக்கும் வரை தொடரும். அதற்கான தனி அதிகாரங்கள் தனக்கு உண்டு. இந்த முடிவுக்கு விஜி ஒத்துவராவிட்டால் பிள்ளையின் நலன் கருதி பொலிசார் தலையிடுவார்கள். பிள்ளையையும் அரசு பொறுப்பேற்கும். இந்த இடைக் காலத்தில் நாங்களும் விஜியின் கணவன் பாபுவுடனும் பேசிப் பார்ப்போம். தற்போது முடிவெடுக்க வேண்டியது விஜிதான்" என்று சொல்லி விட்டாள்.

பொலிசார் தலையிட்டால் விசாப் பிரச்சனைகள் வரும். இந்தக் கட்டத்தில் விஜி மீண்டும் நிலைமையை பாபுவிடம் விளக்கிச் சொல்லி காலில் விழுந்து அழுது தயவு செய்து தன்னுடன் அமைதியாக வாழும்படியும், இனிமேல் தான் எதுவிதமாகவும் அவனுடைய சுதந்திரத்தில் தலையிட வில்லையெனவும் உறுதி கூறியும் பாபு மேலும் மேலும் ஆத்திரமடைந்தான். அரசாங்க ஆட்களை வீட்டுக்கு வர அனுமதித்தது தவறு என்றும், புருசனை நம்பாத பெண்ணையும், கணவனுக்கு அவமானத்தைத் தேடித் தரும் பெண்ணையும், வீட்டைவிட்டு வெளியே ஆதரவு தேடிய பெண்ணையும், தான் வெறுப்பதாகவும் அதனால் தான் விவாகரத்துக்குத் தயாரென்றும், அதற்கான அலுவல்களைப் பார்க்கச் சொல்லியும் அடிச்சுச் சொல்லிப் போட்டான். கொஞ்ச நாட்களில் விவாகரத்தும் ஆகியது. விஜியும் தனி வீடொன்றுக்கு மாற்றப் பட்டாள். சகல வசதிகளும் அவளுக்குச் செய்து கொடுக்கப் பட்டன. பாபுவுக்கும் விஜிக்குமான தொடர்புகள் எல்லாம் துண்டிக்கப் பட்டன. நானும் அவளிடம் சென்று வந்து அவளுக்கு உதவியாக இருந்தேன். இந்த விடயம் ராணி அக்காவுக்குப் பிடிக்கேல்ல...... எங்க கண்டாலும் முகத்தத் திருப்பிப் பிடிச்சுக் கொள்ளுவா...... காலம் சென்றது....... விஜிக்கு ஒரு அழகான பெண்

குழந்தையும் பிறந்தது. விஜியைப் போலவே அழகான குழந்தை. இப்போது விஜிக்கு அளவற்ற சந்தோசம். "இந்தக் குழந்தைக்காகவே இனி வாழப் போறன். இவளுக்காவது நல்ல வாழ்க்கை அமைய வேணும். அதற்கேற்றாற் போல அவள வளர்க்க வேணும்.

இவள நல்லாப் படிப்பிக்க வேணும். அடிமைப் பெண்களைத் தேடித்திரியிற ஆண் ஒருவனுக்கல்லாமல் சரியான ஆம்பிளைக்குக் கலியாணம் செய்து கொடுக்க வேணும். அதுவும் வெளிநாட்டு மாப்பிள்ளையாய் இருக்கக் கூடாது. அந்த மாப்பிள ஈழத்தவனாய் இருக்க வேணும். என்று விஜி எனக்கு ஒரு நாள் சொல்லிய போது, அவள் மிகவும் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கக் கண்டேன். எனக்கும் நல்ல சந்தோசம். அவளுடைய வாழ்க்கை இனித் தங்கு தடங்கலின்றி நிம்மதியாக இருக்கும் என்றும், அவளுக்கு இனிமேல் பிரச்சனை இல்லை எனவும் அதற்காக இந்நாட்டு அரசாங்கம் சகல வசதிகளையும் செய்து கொடுக்குமெனவும் எண்ணியிருந்தேன். ஆனால், நடந்ததோ எதிர்மாறானதாக இருந்தது. ஒரு நாள் டென்மார்க் பொலிசாரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. விஜிக்கு எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில், விஜி இந்நாட்டில் தொடர்ந்து வாழ்வதற்கான விசா அனுமதி இல்லையெனவும், அதனால் இந்நாட்டை விட்டு வெளியேறுவதற்கான அலுவல்களை மேற்கொள்வது சம்பந்தமாகத் தங்களை வந்து சந்திக்குமாறும் எழுதப் பட்டிருந்தது. நாங்கள் அதிர்ந்து போனோம். விஜிக்கு உதவியாக இருந்த நகரசபை உத்தியோகத்தர்கள் எல்லோருடனும் தொடர்பு கொண்டு பேசினோம். இந்த விடயத்தில் தாங்கள் எதுவும் உதவ முடியாதெனவும், தாங்கள் தங்களுக்கு உரிய அதிகாரங்களின் படியே செயற்பட்டதாகவும்....... இனிமேல் பொலிசார் எடுக்கின்ற நடவடிக்கைக்குள் தாங்கள் தலையிட முடியாது என்றும் சொல்லிக் கைவிரித்து விட்டனர்.

***

நான் ஓர் எழுத்தாளர். இந்த உலகத்திலும் இதற்குள் தமிழின் மேன்மையிலும் அக்கறையுள்ளவன். நானும் இந்தக் குடும்பத்துக்குள்ள நடந்த பிரச்சினைகள் எல்லாவற்றையும் பார்த்தும், கேட்டும், விசாரித்தும் அறிந்து வைத்திருக்கின்றேன். இது ஒரு பிரச்சனைதான். அக்கறைப்பட வேண்டிய பிரச்சனைதான். அந்தப் பெண் விஜிக்கு நடந்தது கொடுமை. இந்தப் பிரச்சனையை தீர்த்திருக்கலாம், ஊரில எண்டால். எனக்குத் தெரிந்தவரை இந்தப் பிரச்சனை பற்றிக் கொஞ்சம் தெளிவாக நோக்குவோம்.

மனித வரலாற்றில்....... ஆணுக்கும் பெண்ணுக்குமான போராட்டம் இன்னமும் தீர்ந்த பாடில்லை. இது ஓர் உறவுச் சிக்கல். அதுவும் எதிர்எதிர் வாழ்வுணர்ச்சிகள் சந்தித்துக் கொள்ளும் போது ஏற்படுகின்ற முறிவு உடைவு. அதுவும் தமிழ்ச் சமுதாயத்துக்கென்றே ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற வாழ்வுசார் அறிவுறுத்தல்கள்

மிகவும் கடினமானவை. மானுட வரலாற்றில் இரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதற்கான முயற்சிகள் நடை பெற்றன. நடைபெறுகின்றன. ஆனால். எத்தகைய கருத்துக்களும், அறிவும் இதுவரை இநதப பிரசசனைககு முடிவுகாண முடியாமலிருக்கிறது. அதற்கான இந்தப் பிரச்சனையை இப்படியே விட்டு விட வேண்டுமென்றில்லை. இதைத் தீர்க்கத் தான் வேண்டும். ஆதிகாலங்களில்...... ஆணாகப் பட்டவன் தனது பயணப் பாதைகளில் சந்திக்கின்ற ஒரு பெண்ணுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற தொடர்பு அவள் ஒரு குழந்தையைக் கருப்பையில் தாங்கிக் கொள்ளும் வரைதான். அதன் பிறகு அந்த ஆண் அவளைக் கைவிட்டுவிட்டுத் தனது பயணத்தைத் தொடர்ந்து விடுவானாம். தனது பிள்ளையை தானே பெற்றெடுத்து தானே வளர்த்து வருவதே ஆதியில் பெண்களுக்குரிய கட்டாயமாக இருந்தது. இந்தக் கொடுமையைத் தீர்க்கும் முகமாகவே ஒருத்தனுக்கு ஒருத்தி என்றும், குடும்ப அமைப்பு என்பது ஒன்று உருவாவதற்கும் முக்கிய காரணியாக இருந்திருக்க வேண்டும். இருந்தாலும் அந்தக் கருத்துருவத்திலுள்ள சிக்கல், அடக்குமுறைகள், நிர்ப்பந்தங்கள் தொடர்பான வற்றிற்கு இன்னமும் விடைகாணப் படவில்லை. இந்த நிலையொன்றில் வைத்துத்தான் இந்தச் சமுதாயத்திலுள்ள சமூகப் பொருளாதார அரசியல் தளங்களிலிருந்து நோக்கினால் தான் இந்த ஆண், பெண் சார்பான பிரச்சினைகளுக்கு நாம் ஒரு தீர்வைக் காணலாம். அல்லது இந்தச் சிக்கல்கள் வெவ்வேறு பேராட்டமாகவே அமையும். இத்தகைய பேராட்டங்கள் மேலும் மேலும் சிக்கல் நிறைந்ததாகவும், இடைவெளிகளை அதிகரிப்பதாகவே அமையும். அதைத்தான் இன்று பெண்ணுலகும், ஆணாதிக்க உலகமும் செய்து கொண்டிருக்கின்றன. அதுவும் தமிழ் சமூகத்தில் இது தொடர்பான சிக்கல்கள் மிகவும் சிககலானவை. இரகசியமானவை.

விஜியினுடைய கணவன் பாபு ஏற்கெனவே தொடர்பு வைத்திருந்த அந்த டனிஸ் காரப் பெண்ணுடனும் ஒரு முறை பேசும் வாய்ப்புக் கிடைத்த போது....... "நீயும் பாபுவும் என்ன காரணத்தால் சேர்ந்து வாழ முடியாமற் போனது?" என்று கேட்டேன்.

"பாபுவிடமுள்ள அந்தத் தமிழ் ஆண்மைத்துவம் தான் சிக்கலானது. இதுவே எனக்கும் அவனுக்குமுள்ள மிகப் பெரிய பிரச்சனையாகும்." என்று சொன்னாள்.

இப்போது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமுதாயக் குடும்ப வாழ்வியலில் இந்தப் பிரச்சினை மிகவும் வித்தியாசமானதாகவும் கடினமானதாகவும் இருக்கின்றது என நினைக்கிறேன். எல்லோர்க்குமுள்ள மிகைச் சுதந்திரம், ஆலோசனை ஆதரவின்மை, தனிமை, செல்வம் சார்ந்து மட்டுமே வாழ்வைப் பார்ப்பது, புதிய சூழல், உணவுப பழக்க வழக்கங்கள், தொடர்பு சாதனங்களின் பாதிப்பு எனப் பல்வகையான காரணங்களை நாங்கள் கண்டு கொள்ளலாம். இந்த விஜி என்ற பெண்ணிருக்கிறாளே! அவள் பாபுவோடு சேர்ந்து வாழ்வதற்குப் பலமுறை பல வழிகளிலும் முயன்றிருக்கிறாள். அதனால் அவள் மீது முற்று முழுதாகக் குற்றம் சாட்டமுடியாதுதான். அவள் சில தவறுகளை விட்டிருந்தாலும் கூட, அவள் இருந்த சூழல் மிகவும் வித்தியாசமானது. விவாகரத்துச் செய்ய வேண்டிய

கட்டாய நிலை ஏற்பட்டபோது...... அவள் என்னிடம் ஆலோசனை கேட்டாள். விவாகரத்துச் செய்வதற்கு விஜி அனுமதிக்கா விட்டால் குழந்தையை அரசாங்கமே பொறுப்பெடுக்கும் என்ற அழுத்தம் காரணமாகவே அந்த முடிவை எடுத்தாள். அவளுக்கு இந்த நாட்டுச் சட்டங்களும், பாபுவும் மற்றவர்களும் ஏற்படுத்திய பாரங்கள் மிகவும் அதிகமானவை. அவள் சுமந்த சிலுவைகளை நினைத்து நானும் அழுவதை விடவும், அவள் இந்த இக்கட்டான நிலையில் எடுத்த முடிவுகள் எனக்குச் சந்தோசம் தருபவை. அவைகள் நீண்ட காலத்தில் அவளுக்கே வெற்றி தரப் போகின்றவை.

முதலாவது முடிவு....... இந்தச் சிக்கலான சூழலைப் பிரிந்து தனித்து வாழ்வை எதிர்கொள்வது என்பது. அதனால் அவள் ஈழத்திற்குத் திரும்பிச் செல்வதென முடிவெடுத்தது.

இரண்டாவது முடிவு....... பாபுவுக்கும் தனக்கும் ஏற்படுத்தப் பட்ட திருமண பந்த உறவு இன்னமும் முடிவடைய வில்லை. அவனுக்காகவே காத்திருக்கப் போவது என்பது. அவள் இந்த முடிவை எடுத்தபோது....

"நீ ஏன் இன்னொரு கணவனைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. அதுவும் புரட்சிகரமானதே" என நான் கேட்டபோது.........

சிரித்துவிட்டுச் சொன்னாள். "வாழ்வு ஒருவனுடனேயே, என்பதில் நான் நம்பிக்கையுள்ளவளாகவே இருக்கிறேன். அது பாபுதான். அவனை எனது பக்கம் திருப்புவது என்பதே எனது போராட்டம். அதனால் நான் ஈழத்திற்குச் சென்று எனது பெற்றோருடன் இணைந்து கொள்ளப் போவதில்லை. மாறாக பாபுவினுடைய பெற்றோருடனேயே சேர்ந்து வாழப் போகிறேன். அவர்களும் இதற்குச் சம்மதித்துள்ளார்கள். அங்கிருந்துதான் நான் இனி அலுவல்கள் பார்க்க வேண்டும்" என்று சொன்னதும் அவளுக்கு இருந்த துணிவும், ஆம்! அடிப்படைகளை வைத்துக் கொண்டே புரட்சி முன்னெடுக்கப் படவேண்டும். அதுவும் நல்ல சமுதாய அடிப்படைகளிலேயே புரட்சி முன்னெடுக்கப் படவேண்டும்.

விஜி இப்போது தனது குழந்தையுடன் விமானத்துள் இருப்பாள். அது அவளுக்கு தற்போது தோல்வியாக இருக்கலாம். ஆனாலும்........ நான் சொல்கிறேன்..... அவள் வெற்றி பெறுவாள். ஏனெனில் அவள் உறுதியாக இருக்கிறாள்.

●

# ஒரு மரமும் பலவகைக் கனிகளும்

போதல்

எனது பெயர் ரமணன். டென்மார்க்கில் 10-ம் வகுப்புப் படிக்கின்ற ஒரு மாணவன் நான். டென்மார்க்கிற்கு வரும் போது எனக்கு 3-வயதுதான். அம்மா அப்பாவோடு வசித்து வருகிறேன்.

எனக்கு ஒரு தம்பியும் இருக்கிறான். அவன் சின்னப் பையன். அவனுக்கு 4-வயதாகிறது. அவன் இப்போது பாலர் பாடசாலைக்குச் சென்று வருகிறான்.

அப்பா ஒரு பிளாஸ்ரிக் தொழிற் சாலையில் வேலை செய்கிறார். அம்மா ஒரு பாடசாலையில் துப்பரவு செய்யும் தொழில் செய்கிறா. எதிர் காலத்தில் தங்களைப் போல தரமற்ற வேலை செய்யக் கூடாதென்றும். நன்றாகப் படித்து டாக்டராகவோ, எஞ்சினியராகவோ தான் நானும் தம்பியும் வரவேணுமென்று அடிக்கடி எங்களுக்குச் சொல்லுவினம். நானும் நல்லாகத்தான் படிக்கிறன். பாடங்களில் நல்ல மார்க்குகளும் வாங்குகிறேன். ஆனால், அம்மா அப்பா நினைக்கிறதுபோல இந்த நாடுகளில் பெரிய பெரிய உத்தியோகங்களில எங்களப் போல வெளிநாட்டுக்காரர் வாறதுக்குத் தடையேதுமில்லைத்தான். ஆனால், அதற்காக நாங்கள் மிகக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். வெளிநாட்டுக் காரரெண்டால் டெனிஸ்காரர் எல்லோருக்கும் பிடிக்காது. ஆனால் மற்ற நாடுகளோடை ஒப்பிட்டுப் பார்த்தால் டெனிஸ்காரர் பரவாயில்ல எண்டுதான் சொல்ல வேணும்.

நான் முன்னர் எல்லாம் எவ்வளவு சந்தேசமாகப் பாடசாலைக்கச் சென்று வருவேன். ஆனால், இப்போதெல்லாம் எனக்குப் பாடசாலைக்குப் போவதற்கே

விருப்பமில்லை. ஏதோ அப்பா அம்மாவுக்காகப் போய்வாறது மாதிரியிருக்கு. ஆனால், இதுகள அம்மா அப்பாவுக்கோ நான் சொல்லுறதில்லை. பாவம் அவையளுக்கு அதுகள் தெரிஞ்சால் எவ்வளவு கவலைப் படுவினம். அப்பா அம்மா இஞ்ச இந்த நாட்டில சந்தோசமாய் இருக்கினம் எண்டு நான் நம்பேல்ல. எங்களுக்கு ஒழிச்சு எத்தனை நாள் சண்டைபிடிச்சிருக்கினம். என்னையும் தம்பியையும் கண்டவுடன எதுவும் நடக்காதது மாதிரிச் சிரிப்பினம். அவையளுக்கும் பிரச்சனையள் இருக்கும் தான். என்ர பிரச்சினையள நான் ஒழிச்சு வைச்சிருக்கிறது மாதிரி அவையளும் ஆழுக்காள் ஒழிச்சு வைச்சிருப்பினம். அதுகள விளங்கிக் கொள்ளுறதுக்கு என்னால் முடியும். ஆனால், தம்பி அப்படியில்லை. சின்னப் பொடியன் தான்...... எல்லாத்தையும் சொல்லியும் போடுவான். கேட்டும் போடுவான். என்ர பிரச்சனையள யாரோடையேனும் பரிமாறிக் கொள்ளத்தான் வேணும். அல்லது அது எனது எதிர்காலத்திற்குக் கூடாது என்றும் எனக்குத் தெரியும். ஆனால், நான் யாருடன் இவைபற்றிப் பேசுவது. முன்னர் எனக்குப் பிடித்த அந்த டனிஸ் வாத்தியார் என்னைப் புரிஞ்சு கொண்டு என்னோட நல்ல விதமாய் கதைச்சுப் பல உதவிகளையும் செய்தவர்தான். ஆனால். அவரும் செத்துப் போனார். மற்றவையப் போல எனக்கு நல்ல நண்பர்களுமில்ல. என்னோட படிக்கிற கிம், றனே, யோனாஸ் இவங்களெல்லாம் என்ன எவ்வளவு கிண்டலடிக்கிறாங்கள். இந்த மூன்றுபேரும் வகுப்புக்கு வராட்டில் எனக்குப் பிரச்சனயில்ல. வேற வகுப்புக்கு மாறினாலும் அங்கையும் ஆரும் இருப்பாங்கள் தான். என்ர பிரச்சனையளுக்கு ஒரேயொரு வழி....... என்ர தோலை உரிச்சுப் போட்டு வெள்ளைத் தோலை வளர்க்க வேணும். எனக்கு இதையெல்லாம் நினைக் நினைக்க கோவம் வருகிறது. வியர்த்திருக்கும் முகத்தைத் துடைத்தபடி பிரயாணப் பையை அடுக்குவதில் மும்முரமாகிறேன். ஆனால், எனக்கு இந்தச் சுற்றுலாவுக்கு போவதற்கு மனமேயில்லை. சாடையாய் தடிமனாய்க் கிடக்கு எண்டு நேற்று அம்மாட்டையும் சொல்லிப் பார்த்தன். ஆனால், அம்மா நெத்தியத் தொட்டுப் பாத்திட்டு...... "அது ஒண்டுமில்ல...... இந்தக் குளிருக்கு உப்பிடித்தான்........ அது ஒண்டும் செய்யாது போட்டுவா என்றும் அதோட பள்ளிக்கூடத்தாக்கள் எல்லாரும் படிப்பு விசயமாய்த் தான சுற்றுலாவுக்குக் கூட்டிக் கொண்டு போகினம்........... அதுக்குப் போகாமல் நிக்கக் கூடாது." என்று சொல்லி விட்டா.

என்னோட படிக்கிற எல்லாப் பொடியளுக்கும் காதலிகள் வைச்சிருக்கிறாங்கள். ஆனால் எனக்கு மட்டும் தான் அப்பிடி ஒரு தொடர்பும் இல்ல. அதனால, எனக்கும் அந்த விருப்பங்கள் இல்லாமல் இல்லை எண்டு அர்த்தமில்ல. இந்த விசையத்தில அம்மா என்னில வலுகவனம். நெடுகத்தான சொல்லிவாறா........ "நாங்கள் இந்த நாட்டுக்காரர் போல இல்ல. அவையப் போல நாங்கள் நடக்கேலாது" எண்டு....... நான் ஒருபோதும் அம்மா அப்பாவின்ர விருப்பங்களுக்கு மாறாய் நடக்கக் கூடாது. நடக்கவும் மாட்டன். அவையள் பாவம். இலங்கையில பிரச்சினையெண்டு தானே இங்க வந்து அலக்கழியினம். அவையளுக்கு நானும் மேலதிகமாய் பிரச்சினையளக் குடுக்கக் கூடாது தான்...... ஆனால் சில தமிழ்ப் பொடியள் இப்படியில்ல. அவங்கள் சுகந்திரமாய்த்தான திரியுறாங்கள்.

மணியண்ணயின்ர மகன் டிஸ்க்கோரெக்குக்குப் போய்வாறவன்தான. ஏன் மோகன் பியர் குடிக்கிறவன்தான. இதெல்லாம் பிழையெண்டில்ல...... ஆனால் இவைகள் போன்றவை கெட்டபழக்கங்கள் எண்டு அப்பா சொல்லுறவர்தான். ஆரெண்டாலும் எப்படியும் இருக்கட்டும். ஆனால் நான் அப்பா அம்மாவுக்காக எனது சுதந்திரங்களைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. பயணப் பையை அடுக்குவதற்கு அம்மாவும் உதவி செய்கிறாள். பையைத் தூக்கிக் கொண்ட என்னிடம் கைச் செலவுக்கான பணத்தைக் கையுள் வைக்கிறார் அப்பா. நான் வீதியில் இறங்குகிறேன். அம்மா அப்பாவின் கண்களிலிருந்து அந்தச் சந்தி வளைவுவரை உசாராகவே நடந்து வந்த நான் நடையைத் தளர்த்திக் கொள்கிறேன். மீண்டும் அவங்கட நினைவு. கிம். றனே. யோனஸ் அவங்களும் இந்தச் சுற்றுலாவுக்கு வாறாங்கள். இந்த முறை என்னை என்ன சொல்லிப் பழிப்பாங்களோ. நாங்கள் பயணிக்க வேண்டிய பஸ்சினுள் ஒரு ஜன்னலோரமாக உட்கார்ந்து கொள்கிறேன். எனதருகில் யாருமே இருக்கவில்லை. பஸ் எங்களைச் சுமந்து கொண்டு விரைகிறது.

***

## திரும்புதல்.

நானும் எனது சக வகுப்பு மாணவர்களும் சுற்றுலா முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கிறோம். சுற்றுலாவுக்குச் செல்லும்போதே நான் நினைத்தது போல நடந்து விட்டது. நான் இந்தச் சுற்றுலாவுக்கு வந்திருக்கக் கூடவே கூடாது. இனி மேலும் எந்தச் சுற்றுலாவுக்கும் போவதில்லை என்று முடிவெடுத்துக் கொள்கிறேன். ஏன் பாடசாலைக்கே நான் தொடர்ந்து செல்லவேண்டும் தானா? என்ற கேள்வியும் என்னுள் எழுகிறது. அவ்வளவு தூரத்திற்கு இந்தச் சுற்றுலா அனுபவம் என்னுள் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இவர்கள் ஏன் என்னுடன் இப்படி நடந்து கொள்கிறார்கள். இவர்களுக்கு இப்படி என்னை மனம் புண்படச் செய்வதில் என்ன ஆனந்தம். நானும் அவர்களைப் போல ஒரு இளைஞன் தானே. எனது மனம் எப்படிப் புண்பட்டுப் போகிறது என்று இவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லையா?

எனது தோற்றம் மட்டுமே இவர்களைவிட வித்தியாசமாக இருக்கிறது. மற்றும்படி எனது உணர்வுகள், விருப்பங்கள். ஆசைகள், என் புலனுணர்வுகள் . சிந்தனை எல்லாமே ஒன்றாகத் தானே உள்ளன.

இந்தச் சுற்றுலாவின் போது எமது மனதைப் புண்படுத்திய அந்தச் சம்பவம் இதுதான்.

நாங்கள் சுற்றலாவின் பகற் பொழுதை முடித்துக் கொண்டு ஒரு மண்டபமொன்றில் இரவுப் படுக்கைக்காகத் தயாரானோம். நாங்கள் கூடவே கொண்டு சென்ற நிலவிரிப்புக்களையும் காற்றடித்த தலையணையையும் தயார் செய்து

கொண்டு எல்லோரும் படுத்துக் கொண்டோம். நாங்கள் படுத்திருந்த மண்டபத்தில் கொஞ்சம் கொஞ்சமாக கலகலப்புக் குறைந்து கொண்டே வந்தது. எனக்கருகில் படுத்திருந்த கிம், றனோ, யோனாஸ் மட்டும் இடைக்கிடையே ஏதோ குசுகுசுத்தபடியும் சிரித்தும் கொண்டனர். அவர்களுடைய பேச்சுச் சக வகுப்பு மாணவி ஒருத்தி பற்றியதாக இருந்தது. அவள் வயதுக்குமீறிய உடற் பருமன் கொண்டவள். அவளை மல்யுத்த வீரன் ஒருவனுக்கு ஒப்பிட்டு சிரித்துக் கொண்டனர். அவளுடைய விகாரமுகம், அவளது தொங்கி வழியும் தசைகள், பற்றிப் பேசி கலகலவென்று சிரித்துக் கெண்டனர். அவளுக்கு ஒருவனும் காதலனாக வர விரும்ப மாட்டார்கள் என்றும், எங்காவது கழித்து விடப்பட்ட ஒருவன் தான் அவளைக் காதலிக்க முடியும் என்றும் பேசிக் கொண்டிருந்த அவர்களின் பேச்சு எனது பக்கம் திரும்பியது. என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கேட்பதற்காக காதுகளைக் கூர்மைப் படுத்திக் கொள்கிறேன்.........

"உவன் கறுப்பன் ரமணன் யாரையாவது காதலிக்கிறானா?" இது கிம்மின் கேள்வி.

"உவன் நாய்க் கறுப்பனுக்கு யாரேனும் கிடைப்பார்களா! உவன் உப்பிடியே தான் தனிய இருப்பான்." இது றனேயின் பதில்.

"டேய்..... டேய்...... உவங்கள் கறுப்பங்கள் உடலெல்லாம் கறுப்பாய் இருப்பாங்கள்....... ஆனால் அவங்களின்ர உள்ளங்கையைக் கவனிச்சனீங்களோ அவங்களின்ர உள்ளங்கைகள் மட்டும் வெள்ளையாய் இருக்கும்...... இது ஏன்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான் யோனாஸ். கொஞ்ச நேர மௌனம்.

"அட எது தெரியாதோ....... நாங்கள் வெள்ளைக்காரர் உவங்கட நாடுகள கைப்பற்றி ஆட்சி செய்தபோது உவங்கள் கறுப்பங்கள் எல்லாம் அடிமைகளாக இருந்தவங்கள். அப்பவெல்லாம் அங்க ஆட்சி செய்த எங்கட வெள்ளைக் காறற்ற குழந்தைகளை உவங்கள் தூக்கிவைச்சுப் பராமரிப்பாங்களாம். அப்பவெல்லாம் எங்கட வெள்ளைப் பிள்ளைகளின்ர வெள்ளை நிறம் இவங்கட உள்ளங்கையில ஒட்டிப் பரவிவிட்டதாம்......... இதுதான் கறுப்பங்களின்ர உள்ளங்கை மட்டும் வெள்ளையாக இருக்கின்ற சமாச்சாரம்" என்று கொல கொலவெனச் சிரித்தான் கிம்.

"சரிதான்........ சரிதான்........" என்று மூவருமாகச் சிரித்துக் கொண்டனர். அந்தச் சிரிப்பில் ஒரு கொடூரம் இருந்தது. நான் போர்வையை இழுத்து மூடிக் கொண்டு அவர்களுடைய உரையாடலைத் தொடர்ந்து கேட்பதைத் தவிர்த்துக் கொண்டேன். நித்திரை வரவில்லை......... அழுதேன். தொடர்ந்து அழுதேன்.............. அந்த மண்டபத்துள் எல்லாருமே நித்திரை......... நான் மட்டும் தனியாக இல்லை. நானும் எனது என்னைப் பற்றிய நினைவும் அழுகையும்....... பல கேள்விகள்...... விடையில்லாது முறிவுகள்...... சிந்தனை அவர்களுடைய அந்த படுமோசமான அந்த உரையாடல் பற்றியதாகவே இருந்தது. தலை இடித்தது. எனது கண்கள் நீரைக் கொட்டிக் கொண்டே இருந்தன. என்ன கேவலமான வாழ்வு....... கேவலமான

பரிகசிப்பு......... மலத்தை முகத்தில் தெளித்து வரவேற்பது போல....... புழுக்களால் மாலைசெய்து அணிவித்து முத்தமிடுவதுபோல....... என்ன.... அதிகாரமான துணிவு........ இவர்களுக்கு...... எப்படி...... குனிந்து போய்க் கிடக்கும் அடிமை வாழ்வு...... எனது விம்மல் ஓசை யாருக்கும் கேட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன்.

இருட்டுள் விழித்திருந்து யாருக்கும் தெரியாமல் எனக்காக அழுவது........... எனது பிறப்புப் பற்றிய நோவு........ எதிர்காலம் பற்றிய ஏக்கம்......... இரவு முடிகிறது. எல்லோரும் எழுந்து பயணத்திற்குத் தயாராகின்றார்கள். படுக்கை விரிப்புக்களை மடிப்பதும் பயணப் பைகளை அடுக்குவதுமாக .......எல்லாச் சக மாணவர்களும் தயாராகிறார்கள். நானும் எனது படுக்கை விரிப்பைக் கையில் எடுத்தேன். அது ஈரமாக இருந்தது. இரவு அழுததனால் அது ஈரமாகி விட்டிருந்தது. அதைக் கண்டு கொண்ட கிம் கேட்டான்........"என்ன ரமணன்..... இரவு படுக்கையிலேயே சிறுநீர் கழித்து விட்டாயா?" எல்லா மாணவர்களும் என்னையே பார்த்தனர். எனக்கு வெட்கமாக இருந்தது. அதுவும் மாணவிகள் கைகொட்டிச் சிரித்ததை என்னால் தாங்கவே முடியவில்லை. இது சிறுநீரல்ல........... எனது கண்ணீர் என்று எப்படி விளக்குவது. மௌனமானேன்..........

இது தான் நடந்தது. இதைத்தான் எப்படி தாங்கிக் கொள்வது? அல்லது எப்படி மறப்பது? நான் இதற்கு முன்னர் அனுபவித்த அல்லது சந்தித்த நிறவாதம் தோய்ந்த அனுபவங்களோடு ஒப்பிடும் போது இந்த அனுபவம் எனக்கு வித்தியாசமானது. முன்னரெல்லாம் இது ஒரு வெறும் நிறவாதமாகவோ அல்லது என்னைத் தனிப்பட்ட விதத்தில் பிடிக்காதவர்களுடைய எதிர்ப்புணர்வாகவோ தான் நான் அவற்றை விளங்கிக் கொண்டதுண்டு.

ஆனால், நேற்று நடந்த இந்த வெள்ளைக் காரர்களுடைய கசப்புணர்வின் வெளிப்பாடு என்பது ஒரு சாதாரண விடயமாக எனக்குப் படவில்லை. அது ஒரு ஆபத்தான சிந்தனை. கறுப்பு வெள்ளை, பணக்காரன் ஏழை, நாட்டுப் பிரிவினை, இனப் பிரிவினை, எல்லாவற்றையும் விட, ஆபத்தான சிந்தனை. அதுதான் ஆண்டான் அடிமைச் சிந்தனை. உலகை உலுக்கி விடக்கூடிய பழைய சிந்தனை. இதை எந்தச் சமாதானமும் சொல்லி மறந்து நிற்கவியலாது. ஓடிக் கொண்டிருக்கும் பஸ்சின் வெளியே பார்க்கிறேன். மரங்கள் குளிரில் எரிந்து மொட்டையாக நின்றன. எதிரே கறுப்பு வீதிகளிலும் கரையோரங்களிலும் வெண்பனிகளின் பரவல்கள். நினைவுகளில் விடுபடமுடியாத கனத்தோடு அமைதியாகின்றன.

***

பஸ்சிலிருந்து இறங்கிச் சம்பிரதாயமாக விடைபெறும் வார்த்தைகள் சொல்லி எல்லோரும் தத்தம் வீடுகளுக்குச் செல்கிறார்கள். நானும் விடைபெற்றேன் எனது ஆசிரியையிடமிருந்து. இப்போது நான் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன். வீதி வழுக்கியது. கவனமாக நடக்கிறேன். தம்பியின் ஞாபகம் வருகிறது.

அவனுக்காக வாங்கிய இனிப்புகள் தோள் பையிலிருந்தன. அம்மாவும் அப்பாவும் வீட்டில்தானே இருப்பார்கள். போகும் வழியில் பாலர் நிலையத்திலிருந்து தம்பியையும் வீட்டுக்குக் கூட்டிச் செல்வோம். நேரமும் சரியாகத் தானே இருக்கிறது......... தம்பியின் பாலர் நிலையத்திற்குப் போகும் வீதியில் நடந்து கொண்டிருக்கிறேன். அவள்தான்........ அனாசின் அம்மா அவளும் என்னுடன் வந்து இணைந்து கொள்கிறாள்.

அவளுடைய மகனும் அங்குதான் படித்து வந்தான். நானும் அவளும் பேசியபடியே நடந்து கொண்டிருந்தோம்.

"நீ நல்ல விலையுயர்ந்த ஆடைகளையே அணிகிறாய்" என என்னை அவள் வியந்தாள்.

கூச்சத்தோடு எனது ஆடைகளை தொட்டுச் சரி செய்தபடி சேர்ந்து நடக்கிறேன்.

"நீயோ வறுமை நிறைந்த ஒரு நாட்டிலிருந்தல்லவா வந்தவன். ஆனாலும் நீ இங்கு டென்மார்க்கில் மிகவும் வசதியாக வாழுகிறாய்." என்றவள் தொடர்ந்து......... "நீ ஸ்ரீ லங்காவில் இருக்கும் போது இப்போது சென்று வருவதுபோல ஒரு பாடசாலை சுற்றுலாவோ அல்லது இதுபோன்ற வசதிகளையோ அனுபவித்திருக்க மாட்டாய் அல்லவா?" என்றாள் அமைதியாக.

"உங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பொருளாதாரத்தில் எமது நாடு வறுமையானதாகத் தோன்றலாம். ஆனால் தனித்துவமாக எமது நாட்டையும் எமது மக்களுடைய வாழ்க்கையையும் எடுத்து நோக்கினால்...... பல விடயங்களில் நாங்கள் நல்லதோர் வாழ்க்கையுடையவர்களாகக் காணலாம்" என்றேன் நான்.

அவளது வெள்ளை முகம் சிவந்து பின் கறுத்தது. காரும், ஒரு சொந்த வீடுமில்லாத அந்த நடுத்தரவர்க்க டனிஸ் குடும்பத்தாயின் தேவைகளும், ஏக்கங்களும் அதன் வழிவரும் என்மீதான அவளது அபிப்பிராயங்களும் எனக்குப் புரிந்தது தான். இத்துடன் பேச்சை நிறுத்திக் கொள்கிறோம். பொழிந்து கொண்டிருக்கும் வெண்பனியைத் தட்டியபடி அப்பாலர் நிலையத்தினுள் நுளைகிறேன். அங்கே குழந்தைகள் கூட்டமாக இருந்து விளையாடிக் கொண்டிருந்தனர். வெடித்துப் பறக்கும் எருக்கலம் பஞ்சுபோலத் தலைமுடியோடு உருண்டு, திரண்ட டனிஸ் வெள்ளைக் குழந்தைகளின் நடுவே ஒரு வெள்ளை மாதுவின் நெற்றியில் காணும் கறுப்புத் திலகம் போல மரியா இருந்தாள்.

மரியா இந்தியாவிலிருந்து தத்தெடுக்கப் பட்டு வளர்க்கப் பட்டுவரும் ஒரு குழந்தை. அழகான சுருள் சுருளான கருப்புக் கேசம். துருதுருக்கும் கண்கள். மெல்லிய விரல்கள். அவர்களது விளையாட்டைப் பார்த்தபடி நின்றோம்.

"எங்களிடம் இரண்டு மரியாக்கள் இருக்கிறார்கள். ஒருத்தி கறுப்பானவள். மற்றவள் வெள்ளை. இது ஏன்?" என்று வினா எழுப்புகிறது ஒரு குழந்தை. எல்லோரும் யோசிக்கிறார்கள். ஆனால், எல்லோரும் இது பற்றியே யோசிக்கிறார்கள். கறுப்பு மரியா...... வெள்ளை மரியா..... ஏன்?..... எப்படி? இதை அவதானித்த

அந்நிலையப் பொறுப்பாளர் ஒருவர்......

"அது ஏனென்றால்....." என்றபடி விளக்கமளிக்க வருகிறார். திடீரென ஒரு பெண் குழந்தை சொல்லிற்று.

"எனக்குத் தெரியும். எங்களிடம் இரண்டு மரியாக்கள். ஒருத்தி கறுப்பு...... கொக்கோ ஐஸ் மாதிரி. மற்ற மரியா வெள்ளை..... அவள் வனிலா ஐஸ்கிரீம் போல..... என்று வாய்விட்டுச் சிரித்தாள். பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் எல்லோரும் சிரிக்கிறோம். என்னோடு கூட வந்தவளும் சிரிக்கிறாள்.

இந்தக் குழந்தைகளின் உலகம் பற்றி நினைத்து மலர்ந்தேன். இன்னொரு மூலையில் தனித்து விளையாடிக் கொண்டிருந்த எனது தம்பியை அழைத்துக் கொண்டு வீடு நோக்கினேன். பனி இப்பொழுதும் கறுப்பு வீதிகளை மூடியபடி வீழ்ந்து கொண்டிருந்தது. தம்பி எனது கையைக் கோர்த்தபடியே வருகிறான். வீட்டினுள் இருவரும் நுழைகிறோம். அம்மா தமிழ் வானொலியில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார். பாடலை விரும்பிக் கேட்ட நேயரின் பாடலுக்கான விளக்கம் ஒலிபரப்பாகியது.

"நாங்கள் கறுப்பர்கள் என்றும் கறுப்பு ஒரு தாழ்த்தப்பட்ட நிறமாகக் கருதப் படுகின்ற தன்மையிலிருந்து நாம் மாற்றம் பெற்று நமது நிறத்தை நேசிக்கவும் அந்த நிறத்தால் நாம் பெருமை பெறவும் வாய்ப்பாக இந்தப் பாடல் ஒரு உந்துதலைத் தருகிறது என்றும்...... இதன் காரணமாக "கறுப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு" என்ற பாடலைக் கேட்க விரும்புவதாக அந்த நேயரின் கருத்தைக் கூறி அந்தப் பாடல் ஒலிபரப்பாகியது.

"அப்பா....... உந்த ரேடியோவை நிப்பாட்டுங்கோ" என்றேன் நான். பாட்டு நின்றது. நாங்களும் நிறவாதிகள். எங்களுக்குள்ள இருக்கிற நிறவாதத்தைத் தூண்டும் படியாகவே இந்தப் பாட்டும் இருக்கு. நிலமை இப்படி இருக்க டனிஸ்காரங்கள் தான் நிறவாதிகள் என்று சொல்லிக் கவலைப்படுறம்.

முதலில நாங்கள் திருந்துவம். உலகம் தானாகவே திருந்தட்டும். குழந்தைகள் போல வாழுற மனம் வேணும். அதுக்குள்ள திணிக்கப் படுற இந்தச் சூழல் வாதங்கள் தான் இன்றைக்கு உலகத்தின்ர பிரதான பிரச்சனை. நிறங்கள் அவை அழகானவை. அவற்றை தனித்தனி பிரித்துப் பார்க்காத வரை.

"ஒரு மரம் இருவிதக் கனிகளை ஒருபோதும் தருவதில்லை" என்றபடி படுக்கையில் சரிகிறேன்.

●

# புதிதாய்...

எனக்கு ஒரு மகன் இருக்கிறான். வயது 18. அவன் டென்மார்க்கிற்கு வரும் போது மூன்று வயதுதான். அவன் வரும்போது ஓரளவு தனது வயதுக்கேற்ப தமிழ் பேசுவான். ஆனால், இப்போது அவனால் தமிழ் பேசமுடியாது. நானும் மனைவியும் வேலைக்குச் சென்று வருவதனால் அவனுடன் பேசுவதற்கோ அவனுக்குத் தமிழ் கற்றுத் தரவோ எமக்கும் நேரமில்லை.

அவனோ ஒரு டனிஸ் இளைஞனைப் போலவே வளர்க்கப் பட்டு விட்டான். அவனது சிந்தனையும் எங்களைப் போன்றதன்றி வேறுவிதமாக இருக்கிறது. ஆரம்பத்தில் அவனுக்கு எங்களது வீட்டிலேயே ஒரு தனியறை ஒதுக்கிக் கொடுத்து அவனுக்கான கொம்பியூட்டர், இத்தியாதி வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தபோது நாங்கள் சந்தோசமும், பெருமையும் பட்டுக் கொண்டோம் தான். ஆனால், இப்பொழுதோ அவனது அறைக்குள் செல்லுவதற்குக் கூட, அவனது அனுமதியைப் பெறவேண்டியே இருக்கிறது.

எமது நகரத்தில் வாழும் சக தமிழ்க் குடும்பங்கள் வாழும் முறைக்கும் எங்களது வாழ்க்கை முறைக்குமிடையே நிறையவே வித்தியாசமுண்டு. அவர்கள் எங்களைப் பற்றித் தவறாக நினைப்பார்கள். முன்னரெல்லாம் அதுபற்றிக் கவலைப் படுவதில்லை.

ஆனால், காலம் செல்ல எங்களுடைய அனுபவங்களினாலும் மகனுடைய எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் போதும் நாங்கள் அவனது விடயத்தில்

தவறுசெய்து விட்டோம் என்றே இப்போது உணரத் தொடங்கியிருக்கிறோம்.

அதனால் அவனுக்கு எமது தாய் நாட்டைப் பற்றியும், எமது மொழியைப் பற்றியும் கொஞ்சமாக எடுத்துச் சொல்லத் தொடங்கியிருக்கிறோம். ஆனால், பிரச்சனை என்னவென்றால் எமது விளக்கத்தை அவன் இப்போதுகேட்கத் தயாராக இல்லை என்பது தான். அவன் அவற்றைத் தகுந்த காரணங்கள் கூறி மொத்தமாகவே நிராகரிக்கிறான். ஆனாலும் அவன் ஒரு நல்ல பையன். கெட்டிக்காரனும் கூட. இவனது எதிர்காலம் பற்றியதே எங்களது தற்போதைய பெரிய கவலை. எனது மனைவி அடுக்களைக்குள் சமயல் வேலைக்குள் மூள்கியிருந்தாள். நானும் மகனுமாய் சோபாவிலிருந்து கொண்டே டனிஸ் தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தோம்.

அந்த விபரணப் பட நிகழ்ச்சி ஆரம்பமானது.

அந்தப் படம் பற்றி......... ஒரு போஸ்னிய அகதிக் குடும்பம் 1991-ம் ஆண்டில் அகதிகளாக இடம் பெயர்ந்து டென்மார்க்குக் வந்து வாழ்ந்தார்கள். பின்னர் 1995-ல் முன்னாள் யூகோஸ்லாவியா யுத்தம் முடிவடைந்ததும் அகதிகள் தத்தம் நாடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வரிசையில் 1997-ல் தற்போது டனிஸ் அரசாங்கத்தின் மீள் வாழ்வை ஆரம்பிப்பதற்கான ஒரு சிறு பொருளதார உதவியுடன் பல போஸ்னிய அகதிகள் சந்தோசத்துடனும் ஆர்வத்துடனும் நாடு திரும்புதல் பற்றிய ஒரு விபரணப் படமே அது.

கமராவின் கண்கள் ஒரு சந்தியில் தரித்தது. முதலில் ஒரு பெரிய பேருந்தைக் காட்டியபடியே சுற்றவுள்ள வீடுகளைக் காட்டி..... பின் மேலெழுந்து நீலவானத்தைக் காட்டியபடி அந்த வானத்திலாடும் டென்மார்க்கின் தேசியக் கொடியைக் காட்டியபடி மீண்டும் நிலம் நோக்கி வந்து அவனைத் தூரத்தே காட்டியபடியே மெதுமெதுவாக பருத்துப் பருத்து வந்து அவனது கூரிய முகத்தை முழுமையாகத் திரையில் காட்டினார்கள்.

அவன் ஒரு நாற்பது வயது மதிக்கத்தக்கவன். மேவி வாரப்பட்ட தலைமுடி. மேலெழுந்து விரிந்த நெற்றி. மண்ணிறத்தோல் நெற்றியில் கறுப்பு முடியொன்று காற்றில் ஆடியது. அதன் கீழே நீண்ட சிறிய கண்கள். அவற்றில் நீர்த் திவலைகள். அவன் அழுகிறான்.

கமரா இன்னமும் கிட்ட நெருங்குகிறது. அவனது அழுகுரலும் விசும்பலும் கேட்கிறது. அவனது தோள்களைப் பற்றிப் பிடித்தபடியே இரு வெள்ளைக் கரங்கள் ஆதரவோடு அணைத்துக் கொள்கின்றன. அந்தக் கரங்களுக்குரியவன் ஒரு டனிஸ்காரன். பக்கத்து வீட்டுக் காரனாம். அந்தப் போஸ்னிய அகதியையும் அவனது குடும்பத்தையும் வழியனுப்ப வந்திருக்கிறான். அவனது கண்களும் கலங்கியிருந்தன. கமரா வேறு பக்கம் திரும்புகிறது. அவள் அவனது மனைவியாக இருக்க வேண்டும். கையில் ஒரு சிறுமியைப் பிடித்தபடி நின்றிருந்தாள். துருதுருவென்ற

கண்களுடன் அச்சிறுமி அழகாக இருந்தாள். அவளைச் சூழவும் பல டனிஸ் குழந்தைகளும் சூழ்ந்திருந்தனர். இப்போது தான் இன்னொரு சிறுமி கையில் ஒரு குருவியுடன் ஒரு கூட்டை அந்த அகதிச் சிறுமிக்கு அன்பளிப்புச் செய்தாள். இப்போது மெல்ல மெல்ல கமரா அந்தக் குருவியை நெருங்குகிறது. அழகான குருவி. வெள்ளையும் கறுப்புப் புள்ளிகளும் இளஞ் சிவப்புச் சொண்டுகளுமாக அது..... "கீச்..... கீச்....." என்றபடியே இருக்க...... பின்னணியில் ஒரு மெல்லிய சோக இசை பரவ...... பேருந்து பலத்த இரைச்சலைக் கக்கிக் கொண்டு அந்தக் கறுப்பு வீதியில் பறக்கிறது.

ஜன்னல் வழியே அவன் கையசைக்கிறான். பதிலுக்கு அவர்களும் கையசைக்கின்றனர். இப்போது....... கமரா பேருந்தினுள் அமர்ந்திரக்கும் அவனது முகத்தில் தரிக்கிறது.

அவன் சொல்லத் தொடங்குகிறான்........

"நான் ஒரு போஸ்னிய இனத்தவன். நான் ஒரு முஸ்லீம் மதத்தவன். முன்னர் யூகோஸ்லாவியாக நாடுகள் ஒன்றுபட்டிருந்த போது நான் எனது குடும்பத்தோடு தொழிலின் நிமித்தம் சேர்பியப் பிரதேசத்துள் சொந்தவீட்டில் வாழ்ந்து வந்தேன். யுத்தம் வெடித்த போது எமது மூத்த மகனைப் பலி கொடுத்தோம். பின்னர் உயிர்த்தப்பி ஓடி வந்து டென்மார்க்கில் வாழ்ந்தோம். அந்த நல்ல நாட்டை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம். அந்த நாட்டு மக்கள் செய்த உதவிகளையும் நாம் நன்றியுணர்வோடு நினைவு கூர்வோம்..........

இப்போதும் நாம் எமது சொந்த நாட்டினுள் சுதந்திரமாகக் குடியேற அனுமதித்திருக்கிறார்கள்....... நான் நினைக்கிறேன் வாழ்க்கை ஆரம்பத்தில் கடினமாகவே இருக்கப் போகின்றது. எல்லாவற்றையும் நாம் இனி ஆரம்பத்திலிருந்தே தொடங்க வேண்டியிருக்கும்......"

அவனுடைய ஒரு பெருமூச்சு விரிகிறது. தொடர்ந்து யூகோஸ்லாவியா யுத்தம் நடந்த நாட்களை நினைவு படுத்தும் சில கட்டங்கள் திரையில் விரிகின்றன.

"யுத்தம் என்பது கொடுமையானது. யுத்தத்தினால் ஏற்படுகின்ற இழப்புக்களிலே தான் நாம் கடுமையாகத் தாக்கப் படுகின்றோம். அதைவிடவும் அன்றைய எமது வாழ்வு பற்றிய உத்தரவாதமின்மையையும், எமது அடுத்த சந்ததி பற்றிய ஏக்கமும் தான் நாம் அனுபவித்ததில் கொடுமையானது என்பேன். அந்த நாட்களில் சோபியரென்றோ, போஸ்னியரென்றோ பாகுபாடு காட்டாமல் எல்லா அகதிகளையும் இந்த உலகம் அணைத்துப் பாதுகாத்ததே அதை நாம் எப்படி மறக்க முடியும்.

ஆமாம். உங்களுடைய கேள்வி எனக்குப் புரிகிறது. யுத்தம் இப்போது முடிந்து விட்டது. நாங்கள் எங்கள் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதற்காக எல்லா அகதிகளும் நாடுதிரும்பிக் கொண்டிருக்கிறோம். இப்போது அவனது உரையாடல் தடுக்கப் பட்டு வெளியே வானத்தில் பறவைகள் சுதந்திரமாகப் பறப்பதையும்..... ஓடிக் கொண்டிருக்கும் பேருந்தின் வெளியே வீதியோரமெங்கும் கலந்திருக்கும் மலர்கள் திரையில் விரிகின்றது.

"ஆம்....... அது ஒரு பெரிய பிரச்சனையாகவே இருக்கும்........ எமது மக்களுக்கு அவள் சேர்பியாவில் இருந்தபோது அவள் பெற்றிருந்த நண்பிகளை இழந்தாள். பின்னர் அவள் டென்மார்க்கில் பெற்ற தோழிகளையும் பாடசாலை நண்பர்களையும் இப்போது இழந்திருக்கிறாள்.......... இனிமேல் புதிதாகத் தனக்காக........புதிய நண்பர்களைத் தேடிக் கொள்ள வேண்டியிருக்கும். அதைவிடவும் எல்லாமே புதிதாகவே இருக்கப் போகின்றது.......... ஆமாம். அவளுக்கு மொழியும் பாடசாலைக் கல்வியும் கடினமாகவே இருக்கப் போகின்றது. இருந்தாலும் அவளுக்கு வயதிருக்கிறது தானே...... சமாளித்துக் கொள்வாள் என நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன்......"

இப்போது கமரா அந்தச் சிறுமியைப் படம் பிடிக்கிறது. அவள் கையில் வைத்திருக்கும் அந்தக் கூட்டில் இருக்கும் குருவியோடு ஏதோ டனிஸ் மொழியில் செல்லம் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்..... குருவியும் பதிலுக்கு "கீச்..... கீச்......" என்று சப்தமிட்டபடி கூட்டினுள்ளேயே பறக்கிறது. பேருந்து..... பெரும் வீதிகளைக் கடந்து ஓடிக் கொண்டிருக்கிறது. பின் புலத்தில்....... ஒரு டனிஸ் பாடல் ஒன்று பரவி விரிகிறது. திடீரென்று திரை கறுப்பாகின்றது. இப்போது அவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து போஸ்னியாவிற்குள் நுளைகிறது.

அவன் ஜன்னல் வழியாகத் தனது நாட்டைப் பார்க்கின்றான். கோடை காலமாதலால் நிலம் காய்ந்து புழுதி கிழப்புகிறது. சூழவும் காடுகள் எரிந்த நிலையில் கிடக்கிறது...... நதி ஒன்று வற்றிப் போய் வானம் பார்த்தபடி கிடக்கிறது. வயல் நிலங்கள் ஏது மற்றுக் காய்ந்தபடி......... இடிந்த கடைகள். அறுந்து தொங்கும் பெயர்ப்பலகைகள். கிழிந்த கறுப்புத் துணி ஒன்றினால் போர்த்தபடி கிழவன் கைத்தடியோடு நடந்து போய்க் கொண்டிருந்தான். நாய் ஒன்று வீதியைக் குறுக்கறுத்து ஓடுகின்றது. தந்திக் கம்பிகள் அறுந்தும் சில தந்தி மரங்கள் பாறியும் போயிருந்தன. அதோ! ஒரு பெரிய மரம். வெடித்துப் பிழந்துபோய்க் கிடந்தது...... ஆங்காங்கே......... வெடித்துக் கிழிந்து போய்க் கிடக்கும் வீதிகள்...... ஒரு சந்தியைக் கடந்து ஒரு வளைவில் இறங்கிய பேருந்து தரித்தது. அங்கு மக்கள் பலர் குழுமியிருந்தனர். பேருந்திலிருந்து இறங்கிய இவர்களை உறவினர்கள் கட்டித் தழுவி வரவேற்கின்றனர். பலரும் அழுதனர். யுத்தத்தினால் சிதறிப் பிரிந்து ஆங்காங்கே வாழ்ந்த அவர்கள் மீண்டும் சந்தித்துக் கொண்டதன் பேரானந்தம் அவர்கள் முகங்களில் தெரிந்தது. எல்லோரும் மூட்டை முடிச்சுக்களுடன் நடந்தனர். அவனும் தனது மனைவியுடனும் மகளுடனும்

நடந்து சென்றனர். தூர எங்கோ அவர்கள் மறையும் வரை காத்திருந்து கமரா மூடிக் கொள்கிறது. காலைக் கதிரவனை வரவேற்கும் ஒரு மெல்லிய இசையோடு மீண்டும் படம் தொடர்கிறது......... நான் படத்தைப் பார்த்தபடியே பக்கத்தே அமர்ந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த எனது மகனைப் பார்க்கிறேன். அவனும் தொலைக்காட்சிலேயே மூழ்கியிருந்தான்.

படம் தொடர்ந்தது....... அந்த நாட்டு அதிகாரிகள் கூறியபடி........ "அந்தக் கிராமத்தில் ஆட்கள் இன்னமும் குடியேறாத வீடுகளில் ஒன்றைத் தெரிவு செய்து அந்த வீதியின் பெயரையும், இலக்கத்தையும் உங்களுடைய வீடாகப் பெற்றுக் கொண்டு வாழத் தொடங்குங்கள்" என்று சொன்னதன் பேரில் அவனும் அவனது மனைவியும் தேடத் தொடங்குகிறார்கள்.

அவர்களுடைய மகள் பச்சை நிறச் சட்டையோடு பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். கையசைத்து அனுப்பிவிட்டு........ தாம் வாழப் போகின்ற வீட்டைத் தெரிவுசெய்வதிலே.......... அக்கறையாகின்றார்கள். அந்த வீடு உறுதியாக இருந்தது. மூன்று அறைகள் ஒரு சமையலறை, ஒரு வரவேற்புக் கூடம், ஒரு மாட்டுக் கொட்டில் மாதிரி ஒன்று, ஒரு சிறிய வளவும் ஒன்றுமே இல்லாத தோட்டமும்...... கூரைபாதி குண்டு விழுந்து சிதைந்து போயிருந்தது. வீட்டின் படிகளில் இரத்தக் கறை படிந்திருந்தது. சுத்தம் செய்யத் தொடங்கினார்கள். ஓர் அறைக்குள் ஒரு ஒற்றைச் செருப்பொன்று மட்டும் கிடந்தது. கூட்டக் கூட்டக் குப்பை கூழமாகவே வந்தது. அவனும் அவளுமாகவே வேலை செய்து கொண்டிருக்க பக்கத்து வீட்டுக் காரர்களும் வந்து உதவினார்கள். படம் மீண்டும் தடைப்பட்டது. இப்போது ஒரு காலைப் பொழுதில் அவன் ஒரு பசுமாடும் கன்றுமாக வாங்கிக் கொண்டு வந்தான். அவள் சந்தோசப் பட்டுப் போனாள். தான் ஏற்கெனவே வாங்கிக் கொண்டு வந்து வைத்திருந்த இரண்டு கோழிகளையும் கூட்டிச் சென்று காட்டினாள். அவனும் சந்தோசத்தால் சிரித்தான். சேவல் கோழி கூவிக் காட்டியது. கைகளைத் தட்டி ஆரவாரித்தான் அவன். தளபாடங்கள், தட்டுமுட்டுச் சாமான்களும் ஒரு குதிரை வண்டியிலிருந்து வந்திறங்கின. அவர்கள் வாழப் போகும் வீடு கிட்டத்தட்ட சரியாகியது. மாலையாகும் நேரம். தோட்டத்துள் நின்றனர் அவர்கள் மூவரும். கோழிகளைத் துரத்திப் பிடித்து விளையாடினாள் சிறுமி. குவிந்த மண்ணில் உருளைக் கிழங்குகளை ஊன்றினாள் அவள். தக்காளிக் கண்டு ஒன்றும் நட்டு நீர்வார்க்கப்பட்டது. அந்த நேரத்தில் தான் நிகழ்ச்சியை தயாரித்துக் கொண்டிருந்தவன் அந்தக் கேள்வியக் கேட்டுவிட்டான்.

"நீ முன்னர் வாழ்ந்திருந்த கிராமமும், உனது பழைய வீடும் எந்தத் திசையில் இருக்கிறது?"

பழுது பட்டுக் கிடந்த வேலியைக் கடந்து கைகளை உயர்த்தி நீட்டி வலது திசையில் காட்டினான். கமரா தூர விரிந்தது. அங்கே ஒரு மலை

உயர்ந்து நிமிர்ந்து நீண்டும் தொடர் மலையாகச் சென்றது. அந்த மலை தான் இன்றைய சேர்பியாவையும் போஸ்னியாவையும் பிரிக்கும் எல்லையாகும்.

"அந்த மலைக்கும் அப்பால் தான் நான் வாழ்ந்த கிராமமும் , எனது வீடும் இருக்கிறது." என்றான் அவன்.

கமரா அவனது முகத்தைப் பெரிதாக்குகிறது. அவன் கண்களைக் கசக்குகிறான். கண்கலங்குகின்றது. நீர்வழிகிறது. நன்றாக அழட்டுமென்றோ கமரா அமைதியாக நிற்கிறது.

"இனித்தான் யுத்தம் முடிந்துவிட்டதே...... இனி நீங்கள் அமைதியாக வாழலாம் தானே?" என்றவுடன்..........

"யுத்தம் முடிந்து விட்டது...... என்று நம்புகின்றீர்களா.......? யுத்தம் இன்னமும் முடியவில்லை. யுத்தம் ஆறுதல் எடுக்கிறது...... அவ்வளவுதான்...... எப்போதும் அது தினவெடுத்தபடி திரும்பிவரலாம்." என்கிறான் அவன்.

படம் மீண்டும் ஒரு நறுக்குடன் தொடர்ந்தது....... அவன் மாடத்தின் ஒரு ஜன்னல் வழியாக மறைந்து கொண்டிருக்கும் சூரியனைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். பக்கத்தே மனைவி. அவளருகில் சிறுமி. இவர்களின் பின்னால் கூட்டுக்குள் அந்த வெள்ளையும் கறுப்புப் புள்ளியும் கலந்த குருவி. திடீரென அந்தக் குருவியைக் கூட்டிலிருந்து வெளியே எடுக்கிறான் அவன். மூவரும் வெளியில் வருகிறார்கள். அந்தக் குருவியை வானத்தில் பறக்க விடுகின்றார்கள். அது சிறகெடுத்துப் பறக்கிறது....... அவன் சொல்கிறான்........" இனிமேலும் கூடுகளில் யாரும் வாழல் வேண்டாம்." அவர்கள் படுக்கைக்குச் செல்கிறார்கள். கமரா நூர்கிறது. படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மகனைக் கேட்டடேன்........ நாங்களும் இப்படி ஒரு நாள் எங்கள் நாட்டுக்குப் போகலாம் தானே? மகன் எதுவுமே பதில் சொல்லவில்லை. அவன் புலம் பெயர்ந்தால் எனது தாயகம் அவனுக்கு அதுவாக இருக்காதோ?

●

# நிலாக்கிளி

அவர் இலங்கையில் ஒரு பிராமணப் பகுதியைச் சேர்ந்தவர். ஊரில் ஆங்கில ஆசிரியராகக் கடமைபுரிந்தவர். வசதியான குடும்பமும் நான்கு பிள்ளைகளும் கல்வீடும் வளவுமாக ஊரிலேயே மூன்று போகமும் பயிர் செய்யக் கூடிய தனிக் குளத்துடனான பல ஏக்கர் வயலும், தென்னந் தோட்டமுமாக அசையாத வருமானமும், பார்க்க மேய்க்கவெனப் பணியாட்களுமென ஒரு துரைபோலவே வாழ்ந்து வந்தவர்.

இவரது தகப்பன், பேரன் காலத்திலெல்லாம் அவர்களும் ஒரு குறு நிலராசாக்கள் போலவே வாழ்ந்தவர்கள். அவர்களுக்கென்று ஊரில் தனிச் செல்வாக்கும் வசதியும் அந்தஸ்தும் மரியாதையும் கொண்டிருந்தவர்கள். கூடாரம் போட்ட வண்டிலை வைத்திருந்த முதலாவது மாமனிதர் என்றால் வன்னிப் பகுதியிலேயே இவருடைய பேரன் தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இந்தப் பரம்பரையில் உதித்த ஒரே ஒரு வாரிசுதான் இவர். பரம்பரையின் அத்தனைச் சொத்துக்கும் உரிமையாளரான இவர் ஏன் அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து உழைக்க வேண்டி வந்ததென நீங்கள் நினைக்கலாம். அது இவருடைய தகப்பனாருடைய விருப்பம். அந்தக் காலத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு இருந்த அந்தஸ்து, மரியாதை, செல்வாக்கு இத்தியாதி கௌரவங்களினால் கவரப் பட்ட இவரது தகப்பனார் இவரை படிப்பித்து ஆங்கில ஆசிரியராக்கிவிட்டார். இந்த ஆங்கில மோகமும் அதைவிட, இவரது தகப்பனார் சைவத்திலிருந்து கத்தோலிக்கத்துக்கு மதம் மாறி வெள்ளைக்காரர் காலத்தில் அவர்களோடு நிர்வாகப் பணி புரிந்தவர்.

இத்தனைப் பெருமதிப்புக்குரிய குடும்பத்திலிருந்து வந்தவர்தான் இவர். இப்போது இவருக்கு வயது ஐம்பது. தலைமுடி சற்றுக் குறைவாகவும் மீதமுள்ள கன்னத்து

முடிகள் சற்று இடையிடையே நரைதென்பட்டாலும் அவற்றை லாவகமாக மை தடவி மறைதது அழகாககி விடுவாள் இவரது மனைவி.

அதுவும் இன்று விசேடமாக டென்மார்க்கிலிருந்து பதினைந்து வருடத்திற்குப் பிறகு ஊருக்குச் சென்று திரும்பும் நோக்குடன் பயணத்தைத் தொடங்கியிருப்பதால் அவரும் அவரது மனைவியும் தமது தோற்றத்தில் அதிவிசேட கவனத்தைச் செலுத்தியிருந்தது தெரிந்தது.

நல்ல விலை உயர்ந்த காற்சட்டையும் நீலநிறச் சேட்டும் அதற்குப் பொருத்தமான ரையும் அதற்குமேல் ஒரு அழகான கோகட்டும் அவர் போட்டிருந்தார். அவரது மனைவியும் அழகான மஞ்சள் நிறச் சேலையும் அதற்குப் பொருத்தமான கைப்பை ஒன்றுடனும் கழுத்துத் தோல் தெரியாதபடி நகைகளுடன் குதியுயர்ந்த காலணியுமாக விமானத்துள் நின்றாள். அவர்தான் இப்போது தாங்கள் இருவரும் அமரவேண்டிய இருக்கைகளைத் தேடிக் கொண்டிருந்தார். பயணிகளை ஒழுங்கு செய்து உதவிக் கொண்டிருந்த அந்த விமானத்தின் பணிப் பெண் அவரது அருகேவரவும் "இந்த இருக்கை இலக்கங்களைத் தேடுவதாகவும் தான் ஒரு இந்தியன் என்றும். டென்மார்க்கிற்கு வியாபாரத்தின் நிமித்தம் வந்துபோவதாகவும்" அழகான மெல்லிய ஆங்கிலத்தில் கூறிக் கொண்டே தனது ரையை ஒருமுறை இறுக்கிச் சரிசெய்து கொண்டார் அவர்.

விமானப் பணிப்பெண்ணும் அவர் சொன்னதை அப்படியே நம்பி அவர்களுக்கென்று முதலாம் வகுப்பு இருக்கைகளில் இரண்டைத் தெரிவு செய்து இருக்க உதவினார்.

"நன்றி.... நன்றி......" எனக் கூறி இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர் அவர்கள்.

"ஏனப்பா இந்தியன் எண்டு சொன்ன நீங்கள்....... இதால பிரச்சனை ஒண்டும் வராதோ?" எனக் கேட்ட அவரின் மனைவிக்கு........

"நான் இலங்கையில இருந்து வந்த அகதி எண்டோ டென்மார்க்கிலதான் வீடு வாங்கிப் பென்சனும் எடுத்து டனிஸ் தேசிய உரிமையும் பெற்று அந்த மாதிரி வாழ்கின்றேன் எண்டு சொல்லுறதைவிட....... இஞ்ச இந்நாடுகளில இந்தியன் எண்டு சொல்லுறதுதான் எடுபடும். அதோட மரியாதையுமப்பா. தெரிஞ்சோ தெரியாமலோ தமிழன் எண்டு மட்டும் சொல்லிப் போடக்கூடாது. ஆங்கிலத்தில கதைச்சுக் கொள்ள வேணும் பிரச்சனை ஒண்டும் வராது...... நீர்....... ஒண்டும் யோசியாதையும்" எனக் கூறியவாறு சிகரட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார் அவர்.

கொழும்பிலிருந்து ஊருக்குப் போறது தான் பெரிய பிரச்சனையாக இருக்கு மாப்பா...... பாசுகள். ரிக்கற்றுகள் எல்லாத்துக்கும் கனநாள் காவலிருக்க வேணுமாப்பா எனக்கேதோ...... உடனேயே ஊருக்குப் போய்ச் சேந்திட வேணும் போல இருக்கு. என்ற அவரின் அவவின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்ட அவர்

கூறத் தொடங்கினார். நீரப்பா சரியாய் யோசிக்காதீர்...... அமைதியாய் இரும். அங்க போய்ச் சேர்ந்தாப் போல அதெல்லாம் அந்தமாதிரி அது இது எண்டு குறுக்குவழியால செய்துபோடலாம். அதுதான் எங்கட நாடுகளில பொதுவான விசயமாயிருக்கெல்லோ. பெல்ட்டை போட்டுக் கொள்ளும்......... விமானம் கிளம்பப் போகுது.

"ஏனப்பா கொழும்பில உங்கட முந்தின சிங்களச் சினேகிதர்கள் உதவியள் செய்யமாட்டினமோ சிலமந்திரிமாரைக் கூட நல்லபழக்கமெல்லோப்பா. அந்த வழியால செய்யேலாதோ?" என்ற அவரின் அவவுக்கு........

"உந்த ஆக்களின்ர தொடர்புகளாலதான் நாங்கள் ஊரைவிட்டே ஓட வேண்டி ஏற்பட்டத மறந்திட்டீரா........ அது அந்தக் காலம். அதெல்லாம் இப்ப சரிவராது. அந்தப் பக்கமே தலைவைச்சும் படுக்கக் கூடாது. அந்தக் கட்சியில இருந்து விலகிவிட்டனென்டு பேப்பரில அறிக்கை விட்டிட்டுத்தான விமானம் ஏறினனான். அதையும் மறந்து போனீரோ?" என்று சற்று காட்டமாகவே பதில் சொல்லிக் கொண்டே பற்றிய சிகரட்டை அமத்தி நூத்துக் கொண்டார். இருக்கைகளில் சரியாக இருந்து கொண்டனர். விமானம்...... வானத்தில் எழுந்தது.

***

ஆலடிச் சந்தியில் அவரும் அவவும் வந்து கால் வைத்தனர். எத்தனை வருடங்களுக்குப் பிறகு தமது சொந்த மண்ணில் அவர்கள் கால் வைத்துள்ளார்கள். திருப்திதான். அவர்களின் முகத்தில் சந்தோசம்.

கொழும்பிலிருந்து வந்து சேரப்பட்ட அல்லல் எல்லாம் மறந்துபோன சந்தோசம் அவர்களின் முகத்தில் தெரிந்தது. அந்தச் சந்தியில் நின்ற சனத்தைப் பார்த்துச் சிரித்தார் அவர். பலரும் அவருக்குத் தெரிந்தவர்கள் தான். சிலர் புதியவர்களாக இருந்தார்கள். சிலவேளை வேறு ஊர்களிலிருந்து புலம் பெயந்தவர்களாக இருக்கலாம்.

ஆலடிச் சந்தியில் நின்றவர்களுடன் பேச்சுக் கொடுத்தபடியே அந்த வயதான ஆலமரத்தைப் பார்த்தார். அவர் முன்னர் பார்த்த செழிப்பில்லை. ஆனாலும் அதன் வயதான கம்பீரம் அழகாகவே இருந்தது. ஒரு கிளை பட்டுப் போயிருந்தது. முன்னரெல்லாம் ஒரு ஆளுக்குச் சாப்பாடு பரிமாறக் கூடிய அளவு பெரிய இலைகளாக இருக்கும். ஆனால், இப்பவோ சின்னச் சின்ன அன்னமுன்னா இலைகளைப் போல இருந்தன. இப்போதுதான் அந்த ஆலமரத்தடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த பழையகால மொறிஸ்மைனர் காரில் கவனம் சென்றது. அது அவருடைய கார்தான். டென்மார்க்குக்குப் பயணிக்கும் போது ஒரு கராச்காரனுக்கு விற்றிட்டுப் போனவர். உருக்குலைந்த நிலையிலும் அவர் அதை அடையாளம் கண்டு கொண்டார். காரின் மேலெல்லாம் கறள் கட்டிச் சில இடங்களில் ஓட்டையும் விழுந்து, பக்கக் கண்ணாடி எல்லாம் கயிற்றால் கட்டப்

பட்டு முன் கண்ணாடியும் ஒரு பக்கத்தில் வெடிப்புவிழுந்து, பினாட்டுத் தட்டுப்போல சில்லுகளுக்குக் கூட, காத்துக் கூடக் காணாமல் சாகக் கிடக்கிற ஒரு நாயைப் போல அந்த ஆலமரத்தடியில் நின்றது.

முன்னரெல்லாம் அவர் அந்தக் காரை அவர் வைத்திருந்த போது கழுவித் துடைத்து விட்டுப் பார்த்தால் முகம் பார்க்கலாம். அவ்வளவு பளிச் சென்று இருக்கும். அதைவிட அவரும் அவரின்ர அவவும் அந்தக் காரிலதான் கடற் கரைக்கு வந்து காற்று வாங்கிப் போவார்கள். அப்ப பாத்தால் ராசாராணி குதிரவண்டிலில சவாரிச்சது போல இருக்கும். பார்வையை விலக்காமலேயே அவர் அங்கு கூடியிருந்தவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

"அதில......... வாறது ஆர் தம்பிமார்........ உவர் கனகரோ?"

"கனகர்தான். இப்ப கிழவன் அறுக்கப் போகுது"............... என்றபடி சிரித்துக் கொண்டனர் அவரைச் சுற்றி நின்றவர்கள்.

கனகர்..... ஒரு வித்தியாசமான பேர்வழி. ஊரில் முன்னரெல்லாம் கோவலன் கூத்தில் தட்டானுக்கு ஆடிறவர். நல்லவாட்டசாட்டமான உடம்பு. தட்டான் வேசம் போட்டால் போட்டதுதான். கம்பீரமான குரல். கூத்தையே விடியவிடியக் கலக்குபவர். பார்ப்பவர்களைக் கோபம் வரச் செய்யும்படியாக கோவலனைக் கட்டத்துக்குக் கட்டம் நளினம் செய்து கூத்தைக் களைகட்டச் செய்பவர்.

சில வேளைகளில் கூத்துக்கொப்பியில் இல்லாத வசனங்களையும், பாடல்களையும் சுயமாகவே சேர்த்துக் கொண்டு பிற்பாட்டுப் பாடுபவர்களையும் அண்ணாவியையும் திக்குமுக்காடச் செய்து சபையோரிடம் கைதட்டு வாங்குபவர்.

இதைவிடவும் அவருக்கு ஊரால் வைக்கப் பட்ட பட்டப் பெயரும் உண்டு. குத்துக் கனகர் என்றால் ஊரில் எல்லோருக்கும் தெரியும். குத்துக் கனகர் என்றால்...... எல்லாவற்றுக்கும் பொடி வைத்துப் பேசுவதிலும் பேசிக்கொண்டிருப்பவர்களுக்கு குத்துக்கதைச் சொல்லுவதிலும் வல்லவர்.

அந்தக் குத்துக் கனகர் தான் இப்போது ஆலடிச்சந்தியில் நின்று பேசிக் கொண்டிருந்த அவரிடம் நெருங்கினார். கண்களைக் கூசிக் கொண்டே நிமிர்ந்து அவரைப் பார்த்தார் கனகர். கண்களுக்குமேல் கையை சேர்த்து வைத்து உற்றுப் பார்த்தபடி.....

"யாருது?........ உவர்...... அவரே........? மேலத் தேசத்துக்கு......ஓடிப்போன........ அவரே? எப்பிடி இருக்கிறியள். நீங்கள் போனதோட இஞ்சை மழையும் பொச்சுப் போச்சுது. ம........ நல்லார் உளரேல்......." என்றபடி.

"உன்னப் பாத்தால் தம்பி........ நிலவில இருந்து வந்தாள்போல கிடக்கு. நல்ல குழுகுழுவெண்டு இருக்கிறீர். உங்கட ஊரில நல்ல விளைச்சல் போல கிடக்கு. இஞ்ச சனம் வடலியைத் தான இப்ப கிழிச்சுத் தின்னுதுகள்." என்று விடாமல் அடுக்கிக் கொண்டே போன குத்துக் கனகரின் பேச்சை இடைமறித்து......

"என்ன கனகண்ண நல்லாய் கேட்டுப் போனியள்....... கூனலும் விழுந்து போச்சுது?" என்றபடி செருமினார் அவர்.

"ஓமோம் இந்த மண்ணை நோக்கி நான் குனியிறன். உள்ள போறதுக்குத்தான். ஆகாசத்த நோக்கிக் கூனேல்லத்தான........ என்றபடி தனது பொக்கை வாயினால் சிரித்துக் கொண்டார் குத்துக்கனகர்.

கனகரின் குத்துக்கதைகளை விளங்கிக் கொண்ட அவருக்கு ஒருமாதிரியாகவே அவர்களுடனான பேச்சை வலிந்து முறித்துக் கொண்டு வீடுநோக்கி நடந்தார் அவர். வீதி எங்கும் கிடங்கும் வெடிப்புமாக இருந்தது. வலது பக்கத்தில் இருந்த இரண்டு பலசரக்குக்கடையும் சாமான்கள் அதிகமெதுவுமில்லாமல் தூங்கிக் கொண்டிருந்த, கடைகளுக்கு முன்னால் சனங்களுமில்லை. அடுத்துக் கிடந்த பாண்பேக்கறியும் அதனருகில் இருந்த சலூனும், அதைக் கடந்து சங்கக் கடையும், அதற்குக் கொஞ்சந் தள்ளி காஞ்சூரை மரத்தடியில் உடைந்து கிடந்த பஸ்தரிப்பிடத்தையும் கடந்து வலது பக்கமாகத் திரும்பிப் பின் இடது பக்கமாக வளைந்து திரும்பி அந்த ஒழுங்கையில் பல குடிசைகளைக் கடந்து நிமிர்ந்து நின்ற அவரின் அந்தப் பெரிய கல்வீட்டுவளவுள் நுளைந்தார் அவர். வீடு நிறையச் சனம். அவரின்ர அவ எல்லோருடனும் பேசிக் கொண்டிருந்தா. மாமரநிழலில் கிடந்த சாய்மனைக் கதிரையில் அவர் உட்கார்ந்த போது வீட்டு மூலையில் நின்ற நாயொன்று குலைத்துக் கொண்டே ஓடிவந்தது. "கடிச்சுப் போடும்....... கடிச்சுப் போடும்..... பிடியுங்கோ பிடியுங்கோ...... என்றார் ஒருவர். அவர் சுதாரித்துக் கொண்டே சாய்மனைக் கதிரையில் சாய்ந்தார். அந்த மரநிழல் ரம்மியமாகவே இருந்தது.

***

டென்மார்க்கிலிருந்து அவவும் அவரும் ஊருக்கு வந்திருக்கிறார்கள் எனக் கேள்விப் பட்டு கேள்விப் பட்டு எல்லோரும் வந்து குசலம் விசாரித்துச் சென்றனர். அவர்களுள்.......

### சந்திப்பு - 1

அவர் ஒரு இளைப்பாறிய தமிழாசிரியர். நல்ல சிந்தனையாளரும் கூட. கண்டிப்பும் நேர்மையான குணமும் கொண்டவர். தனது வாழ்வைத் தனது தனித்துவமான சிந்தனையுடனும் தனித்துவமான வழியிலும் வாழ்ந்து வருபவர். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்களும் அவரைப் போலவே வாழவிரும்புபவார்கள். அவரிடமுள்ள இத்தகைய பண்புகளினால் இவரை ஊரார் பணிவுடன் கலந்த மரியாதை செய்வார்கள்.

இவரது ஆசிரியப் பணிக் காலத்தில் கையில் செங்கோலாக ஒரு மஞ்சட்

பிரம்பு எப்போதும் இருக்கும். இப்படிப் பட்ட அந்த ஆசிரியர்தான் இப்போது டென்மார்க்கிலிருந்து வந்திருக்கும் அவரைச் சந்திக்க வந்திருக்கிறார். வழமையான சுகநல விசாரிப்புக்களோடு கையில் இருந்த தேனீரை அருந்தியபடியே இருவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். நாட்டு நிலைமைகள் உலக விவகாரம் என விரிந்த உரையாடல் மக்களின் இடப் பெயர்வு பற்றியும் வந்தது. நாட்டை விட்டு ஓடிப் போகிறவர்கள் பற்றி வந்தபோது ஆசிரியர் கூறிய கருத்துக்களால் அவர் மனம் வாடிப்போனார். ஆசிரியர் கூறிய கருத்துக்கள் மிகவும் கடுமையாகவே இருந்தது. ஒருவகையில் பார்த்தால் ஓடிப் போனவர்களைப் பற்றி கேலியாகவே நெற்றிக்கு நேராகவே சொல்லிக் கொண்டிருந்தார் ஆசிரியர். அவருக்கு எரிச்சலாகவே இருந்தது. கதையைத் திசைதிருப்ப விரும்பினார்.

"பென்சன் எடுத்துக் கொண்டு சும்மாய் இருக்க ஒரு மாதிரியாய் இல்லையோ?" எனக் கேட்டார் அவர்.

"இல்லை........... இல்லை..... வாசிக்கிறதுக்கு நிறைய நேரம் இருக்கிறது. உத்தியோகம் இல்லாமற் போனாலும் எனது பேரப் பிள்ளைகளுக்கு எனக்குத் தெரிந்தவைகளைச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆனால்........ என்ர கையில பிரம்பு இல்லாமற் போனதுதான் தாங்க முடியாத இழப்பு. அதிகாரத்தை என்ர கையில இருந்து காலம் பறிச்சுப் போட்டுது", என்றவாறு தனது நரைத்த தலையை மேவிக் கொண்டார் ஆசிரியர். டென்மார்க்கிலிருந்து கொண்டு சென்ற புகைப் படங்களில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த ஆசிரியர்" எங்கட நாட்டில மந்திரி மார்வாழுற வாழ்க்கைக்கு நிகராய் உங்கட டென்மார்க் வாழ்க்கை ஓகோவென்று இருக்கிறதே........" என்ற ஆசிரியரின் வார்த்தையினால் அவர் மனம் மகிழ்ந்து போனார்.

"சரி....... திரும்பியும் போகப் போறியளோ.......? அல்லது இங்கேயே தங்கிறதோ"?

"*சீச்சீ*......... இஞ்ச வாழ ஏலாது. நாங்கள் டென்மார்க் நாட்டு வாழ்க்கைக்குப் பழக்கப் பட்டிட்டம். அத்துடன் எங்கட சொத்துகள் எல்லாம் அங்கதான் இப்ப இருக்கிறது. அதோட பிள்ளையளும் அந்த நாட்டு மொழியிலேயே படிச்சுக் கொண்டிருக்கினம். இஞ்ச எங்கட சொத்துக்கள் ஒன்றும் இல்லை. எங்கட வாழ்க்கை இனி அங்கதான். நாடுவேணும். அதற்காக போர் வேணும் எண்டு இந்த மண்ண எரிக்கிற வாழ்க்கை எனக்கு வேண்டாம். நாங்கள் திரும்பி விடுவம்" என்று அவர் சற்றுக் காட்டமாகவே பதில் சொன்னார்.

சிரித்தபடியே நிமிர்ந்த ஆசிரியர்......... "இஞ்ச தானே உங்களுக்கு ஒண்டுமில்ல எண்டால் இப்ப எதுக்கு இஞ்ச வந்தனீங்கள்" என்ற அடுத்த கேள்விக் கல் வந்து விழுந்தது. பதிலுக்காகக் காத்திருக்காமல் ஆசிரியரே தொடர்ந்தார். ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்பன கிடைத்து விட்டால் அதன் அடுத்த கட்டமாக அவற்றின் பாதுகாப்பும் உறுதித் தன்மையும் பற்றியதாக அந்த மனிதன் சிந்திப்பான். அந்த விடயத்திலும் அவன் வெற்றி பெற்றுவிட்டால் மிகுந்த திருப்தி அடைந்து கொள்வான். இதுபோலவே

உங்களுக்கும் இந்த அடிப்படைத் தேவைகள் டென்மார்க்கில் தேடிக் கொண்டு விட்டீர்கள். அந்த அடிப்படைத் தேவைகள் பாதுகாப்பானதாகவும் உறுதித் தன்மை வாய்ந்ததாகவும் இருக்கின்றது. நீங்களும் திருப்தியா அங்கு வாழ்கின்றீர்கள். நல்லது. நல்லது........... உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளில் இத்தகைய நிறைவுபெற்ற உங்களைப் போன்ற மனிதர்கள் அத்துடன் ஓய்ந்து போவதில்லை. என்ன செய்கின்றான்? அந்தத் தேடலின் தொடர்ச்சியாக அதிகாரம், அந்தஸ்து, மதிப்பு, மரியாதை ஆகியவற்றைத் தேடிப் புறப்படுகிறான். அதைப் போலவே நீங்களும் அவற்றைத் தேடித்தான் இங்கே வந்திருக்கிறியளோ?" என்று சிரித்தபடியே கூறினார் அந்த இளைப்பாறிய ஆசிரியர்.

"உண்மைதான்..... என்னதான் நாங்கள் டென்மார்க்கில வசதியாய் எல்லாம் பெற்று வாழ்ந்தாலும் அதிலையும் ஒரு குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. அந்தக் குறைபாடு இவர் சொல்லுறது போல அதுதானோ?" என்ற கேள்வி அவரின் உள் மனதில் எழுந்தது.

"நான் சொல்லுறதால நீங்கள் கோபிக்கக் கூடாது. உங்களுக்குத்தான் என்ர குணம் தெரியும். எங்கட வீட்டுக்கும் "நேர்" எண்டுதான பேரும் வைச்சிருக்கிறன். அது போக உங்களுக்கு ஞாபகமிருக்குதோ........? நாங்கள் இரண்டு பேரும் மகா வித்தியாலயத்தில் படிப்பிக்கும் போது வித்தியாலய மலரில் நீங்களும் ஒரு சிறுகதை எழுதினனீங்கள். ஆகாயத்தை நோக்கிய ஆடம்பர வாழ்வுக்கு ஏங்காத ஒரு குருவி நிலத்தில் தனது சிறிய பொந்திலேயே வாழ்ந்து வருவதைப் பற்றி அந்தச் சிறுகதையில் எழுதியிருந்தீர்கள். இப்ப நீங்களோ நிலவிலிருந்து வந்த கிளியைப் போலவல்லவோ வந்திருக்கிறியள். இந்த மண்ணில தான் எங்களுக்கு வாழ்விருக்கு என்பதை மட்டும் மறக்காதயுங்கோ" என்றபடியே..... அந்த இளைப்பாறிய ஆசிரியர் எழுந்து நடந்தார். அவர் போன முற்றத்தில் அந்த மாமரம் எழுந்து நிமிர்ந்து நின்றது. நிலாக்கிளி என்று சொன்ன அந்த ஆசிரியரின் வார்த்தைகள் நெஞ்சைப் பிழிந்தது. முகவாட்டத்தோடு முற்றத்தில் வந்து நின்றார் அவர். வந்திறங்கிய கையோடு வீதியில் வைத்து குத்துக்கனகர் "யாரது நிலவில இருந்து வந்த ஆக்களோ"? என்று கேலி செய்ததையும் ஆசிரியர் 'நிலாக்கிளி' என்ற சொன்னதையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார் அவர். கோபமாகவே இருந்தது.

ஏதோ முடிவெடுத்தவர் போல மாமர நிழலில் சாய்மனை நாற்காலியில் உட்கார்ந்தார்.

## சந்திப்பு - 2

"வாருங்கோ தம்பிமார். உட்காருங்கோ. களைச்சப் போய் வந்திருக்கிறியள். மோர்குடிக்கிறயளோ?" என்று வினவியபடியே நாற்காலிகளை காட்டினார் அவர்.

வந்த இரண்டு இளைஞர்களும் கையில் கிடந்த பாரமான துப்பாக்கியை வைத்தபடியே உட்கார்ந்தனர். அவர் அவர்களுக்கு சாதாரணத்துக்கும் அதிகமாகவே

மரியாதைகொடுத்துப் பேசினார். அந்த இளைஞர்களும் அவரது ஊரைச் சேர்ந்தவர்கள்தான். அவரது சிறுவகுப்பு மாணவர்களாகவும் இருந்தவர்கள் தான். அந்த இளைஞர்கள் அவரை 'சேர்' போட்டு மரியாதையாகவே தான் அழைத்தனர்.

நீங்கள் இப்பவும் முந்தின கொள்கைகளோடுதான் இருக்கிறியளோ? அல்லது மாற்றம் ஏதோனும் செய்திருக்கிறீர்களோ"? என்று ஒரு இளைஞன் ஆரம்பித்தான்.

"முன்னமெல்லாம் நீங்கள் அந்த நீலக்கட்சி அமைப்பாளராக இருந்த போது நீங்கள் நடாத்திய கூட்டங்களுக்கு கல்லெறிந்து விட்டு ஓடியது இப்பவும் எனக்கு ஞாபகமிருக்கு சேர்" என்றார் அடுத்தவன்.

தனது தடித்த உதடுகளை விரித்து கெக்கட்டம் விட்டுச் சிரித்தபடி தனது காதோரக் கறுப்பும் வெண்மையும் கலந்த முடிகளை வருடியபடியே மௌனமானார். அவரின் மனைவி அவ வெள்ளைக் கிளாசில் மோர் கொண்டு வந்து கொடுத்தாள் அவர்களுக்கு. கைகள் சற்று நடுங்கியது. வழமையான அவளது வெள்ளை முகம் சற்றுக் கறுத்திருந்தது.

"நான் தம்பிமார் நாட்டைவிட்டுப் போகும் போது எனது பழைய தொடர்புகளுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை என்று பத்திரிகையில அறிக்கை கொடுத்து விட்டுத்தான் வெளியேறினனான்." என்றார் அவர்.

"அது சரி சேர். அது எங்களுக்கு ஞாபகமிருக்கு. ஆனால், நீங்கள் அன்றைய காலங்களில் பேசி வந்த ஆதாரமற்ற குழப்பமான கருத்துக்களை மாற்றிக் கொண்டு விட்டீர்களோ? எண்டு தான் கேட்கிறம்" என்று விளக்கினான் இன்னொருவன்.

இனிமேலும் மௌனம் சாதிக்கக் கூடாது என்ற முடிவில் "அது எல்லாம் அந்தக் காலத்துக்குரிய நியாயங்களும் கருத்துக்களும்..... இப்பவெல்லாம் நீங்கள் தான் முக்கியமான ஆக்கள். என்ர காலம் முடிஞ்சு போச்சு. இனி உங்கட காலம்தான்", என்று சாதுரியமாகவும் பிடி கொடாமலும் பேசினார் அவர்.

தலையை ஆட்டியபடியே "அதில்ல சேர்........ உங்களால தவறாக வழி நடாத்தப்பட்ட இளைஞர்களுக்கும், உங்களால ஏமாற்றப் பட்டவர்களுக்கும் இப்ப என்ன சொல்லப் போறியள்"? எனக் கேட்டான் ஒருவன்.

அவனது முகம் கடுமையாகவே இருந்தது. இவர் இறுகிப் போனார். வீட்டு ஜன்னல் வழியாக அவரது மனைவி ஏதோ ஒரு கலவரத்தோடு நடப்பதை பார்த்துக் கெண்டு நின்றாள். நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்ட மற்றவன் கூறத் தொடங்கினான். அவனது பேச்சிலும் கூர்மையான கோபம் இருந்தது.

"உங்களுக்குத் தெரியும்தானே சேர்...... எங்களுக்கு வயல் காணியள் இல்லை. உங்கட காணிகளில தான் ஐயாவும் அம்மாவும் வேலைசெய்து என்னையும் படிப்பிச்சவையள். நான் ஏ. எல் பாஸ்பண்ணினதோட ஐயா வந்து உங்களோட

கதைச்சு எனக்கொரு ஆசிரியர் வேலை எடுக்கிறதுக்கு 5000 ரூபா காசு கேட்டு வாங்கிக் கொண்டு ஏமாத்திப் போட்டியள். அப்ப எல்லாம் நான் நேர வந்து உங்களோட கதைக்கிறதுக்கு எனக்குத் துணிவில்லை. இப்ப அது எனக்கு நிறையவே நினைவு இருக்குது சேர். நான் இப்ப அந்தக் காச திருப்பித் தரச் சொல்லி கேட்கவரவில்லை. ஆனால், ஏன் இப்படியெல்லாம் எங்களுக்குச் செய்தியள் எண்டுதான் கேட்கிறன்'' எனக் கேட்டு விட்டு மாமரத்தில் சாத்திக் கிடந்த துப்பாக்கியை திரும்பிப் பார்த்தான் அவன். அவர் கலங்கித் தான் போனார். நெற்றியில் வியர்வை இருந்தது. அடுத்தவன் தொடங்கினான். "சேர் உப்பிடித்தான் எனக்கும் கொண்டக்டர் வேலை வாங்கித் தாறனெண்டு காசும் வேண்டிக் கொண்டு...... ஒவ்வொரு நாள் காலையிலும் நானும் உங்களிட்ட வந்து ஞாபகப் படுத்த வரும்போதெல்லாம் என்ன சொல்லி அனுப்புறனீங்களெண்டாவது ஞாபகமிருக்கோ சேர்.........."

"எங்கட அரசாங்கத்திலயிருந்து ஒரு மந்திரி எண்ணைக்கார நாடுகளுக்கு காசு வாங்கிக் கொண்டு வரப் போட்டார். அவர் வந்ததும் அல்பேனியா நாட்டிலிருந்து புதுப்புது அல்மினியன் பஸ்சுகள் வாங்கவேணும். பிறகு அதுகளுக்கு றைவர் மாரும் கொண்டக்டர்மாரும் போடவேணும் அதில நீயும் ஒருத்தனாய் இருப்பாய் எண்டு சொல்லுவியள். நானும் திரும்பி நடந்து வீட்டுக்குப் போகையிக்க பஸ்சில நிண்டு ரிக்கற் போடுறதையும் காசை வாங்கி காக்கிக் கோட்பொக்கற்றுக்குள்ள போடுறது போல கற்பனை செய்து கொண்டுபோவன். இப்ப நினைச்சாலும் எவ்வளவு வெட்கமாய் கிடக்கு'' என்றபடி சிரித்துக் கொண்டே தனது தாடியை தடவிக் கொண்டான். தென்னை ஒன்றில் மரங் கொத்திக் குருவி ஒன்று டொக்..... டொக்..... என்ற கொத்திக் கொண்டிருந்தது.

"நாங்கள் ஒண்டும் வில்லங்கத்துக்கு சண்டைபோட வரையில்ல. நியாயம் கேட்கவும் வரயில்ல. நீங்கள் செய்ததுகளெல்லாம் அநியாயம் எண்டதுகள நாங்கள் இப்பவும் தெரிஞ்சு புரிஞ்சு வைச்சிருக்கிறம். எண்டதை நீங்களும் தெரிஞ்சு வைச்சிருக்க வேணுமெண்டுதான் விரும்புறம். அதோட....... நீங்களும் இப்ப டனிஸ் சிற்றிசன் தான். உங்கட பிள்ளைகளையும் அதேபோல பிரசா உரிமையை மாற்றிப் போட்டியளாம். நீங்கள் மாறினது உங்கட விருப்பம். ஆனால் பிள்ளையள அவையின்ர விருப்பம் தெரிவதற்கு முன்னமே, தேசிய இன உரிமைகள் பற்றி அவர்களுக்கு அறிவதற்கு உரிய அறிவு இல்லாதபோதே அவர்களை மாற்றிவிடுவது பிழைதானே சேர்'' என்ற ஒருவன் தனது நெற்றியைச் சொறிந்து கொண்டான். அவருக்குக் கொஞ்சம் நிம்மதி. இனி இவங்களோட ஒண்டும் கதைக்கக் கூடாது. என்றவர் போலப் பேசாதிருந்தார். இளைஞர்கள் மோருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டே படலையைத் திறந்து கொண்ட வீதியில் இறங்கினர். மகா தூரத்தில் போர் விமானம் ஒன்று பறக்கும் இரைச்சல் கேட்டது. அவர்கள் எல்லாம் இப்போது இந்த ஊரில் மண்ணுக்கு அருகாக பறப்பதில்லை. அவருடைய மனைவி அவசர அவசரமாக அருகே ஓடிவந்தாள்.

சந்திப்பு - 3

வீட்டின் பின்னால் இருந்த கொட்டில் ஒன்றில் உரல் நிமிர்ந்து நின்றது. இரு பெண்கள் உலக்கையுடன் மாறிமாறி குத்திக் கொண்டிருந்தனர். அவர்களின் அருகில் ஒருத்தி நிலத்தில் உட்கார்ந்தபடி சுளகில் குற்றிய நெல்லைப் போட்டு புடைத்துக் கொண்டிருந்தாள். நாலைந்து கோழிகள் அரிசியைக் கொத்திக் கொண்டு போக உரலைச் சுற்றி வந்தன. நாய் ஒன்று நாக்கை நீட்டியபடி வீணி வழியவழிய கிண்டிய கிடங்கொன்றினுள் இளைப்பாறிக் கொண்டிருந்தது. நெல்லுக்குத்தும் வேலையை நிறுத்தி விட்டு வெற்றிலை போட உட்கார்ந்தனர் பெண்கள்.

"பாத்தியளே உடைச்சியாரை. பளபளவெண்டெல்லோ இருக்கிறா. வயசே அம்மாவிலை தெரியேல்ல. மேலைத்தேயச் சாப்பாடெல்லோ. சும்மாவா. இப்ப இஞ்ச வந்தப் பிறகு இந்த வெய்யிலும் ஒத்துக் கொள்ள வில்லையாம். உடம்பு கொஞ்சம் வத்திப் போச்சுதாம். கெதியாக தங்கட ஊருக்கு திரும்பி விட வேணுமாம். பக்கத்தில சொல்லிக் கவலைப் பட்டாவாம்" என ஆரம்பித்தாள் ஒருத்தி.

"கிணத்தில தண்ணிகூட அள்ளமாட்டாவாம். உவள் முத்தன் பொஞ்சாதி தான் தண்ணி அள்ளிக் குடுக்கிறாளாம்." என்றபடி மடித்த வெற்றிலையை வாய்க்குள் சொருகிக் கொண்டாள் இன்னொருத்தி.

"ஏன் இதைக் கேள்விப்பட்டியா.... சாப்பாட்டக் கூட கையால தின்ன மாட்டாவாம். தன்ர ஊரிலயிருந்து ஏதோ கொண்டு வந்தது பாவிச்சுத்தான் சாப்பிடுவாவாம். இது கண்டறியாத எடுபாடு......." என்று முகத்தைச் சுழித்தாள் மற்றவள்.

"பிலத்துக்கதையாதையுங்கோ உடைச்சியாருக்கு எக்கணம் கேட்டால் வம்புதான். ஒண்டு தெரியுமோ..... உவையின்ர கடைக்குட்டிக்கு மூத்தவன் வெள்ளைக்காரப் பெட்டையத் தானாம் கலியாணம் முடிச்சிருக்கிறானாம். பிள்ளையள் ஒண்டும் தமிழ் கதைக்க மாட்டுதுகளாம்." சுளகை மடியில் வைத்தபடியே முகத்தை நெழித்தாள் மற்றவள்.

"எக்கச் சக்கமாய் காசுகொண்டு வந்தவையாம். ஆனால், ஒருத்தருக்கும் இன்னும் ஒரு சல்லியும் குடுக்கேல்லயாம். பொத்தி வைச்சிருக்கினமாம்....... வாறா..... வாறா எழும்புங்கோ வாரவைச்ச அரிசியுமெல்லோ இடிக்கவேணும்."

காகம் ஒன்று எங்கிருந்தோ பறந்து வந்து உரலில் உட்கார்ந்து கொண்டது. அவதான் சொல்லிக் கொண்டே வந்தா. "என்ன அலுவல் இன்னும் முடியேல்லப் போல கிடக்கு."

உண்மையில் அவ கொஞ்சம் உடலால் இளைத்தும் சருமங்கள் கொஞ்சம் கறுத்துத்தான் இருந்தா. ஆனாலும் அங்கு நெல்குற்றிக் கொண்டிருக்கும் அவவின் வயதையொத்த அந்தப் பெண்களுக்கும் அவவுக்குமிடையே நிறை வித்தியாச மிருந்தது. அந்தப் பெண்கள் மெலிந்த நிலையில் வெயிலில் காய்ந்து போன பூக்கள் போலவும் அவவோ நீர் நிலைக்குள் மலர்ந்த தாமரைப் பூ போலவும் இருந்தனர். எல்லாமே சூழல் தானே. கருமேகங்களைத் தரிக்க விடாது காற்று அவற்றைத் தள்ளிக் கொண்டு போனது.

சந்திப்பு - 4

மீண்டும் அந்த இளைப்பாறிய தமிழாசிரியர் தான் அவர்களைச் சந்திக்க வந்திருந்தார். அவரும் தமிழாசிரியரும் அந்த மாமர நிழலில் தான் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். தமிழாசிரியரே நிதானமாக ஆரம்பித்தார்.

"நான் அண்டைக்குக் கொஞ்சம் காட்டமாய்தான் உங்களோட கதைச்சுப் போட்டன். நாளைக்கு டென்மார்க்குக்கு திரும்பிறியளாம். அதுதான் அவசரமாய் உங்களச் சந்திச்சுக் கதைச்சுப் போட்டு போவமெண்டு வந்தனான்....... உங்களப் போல ஆக்கள் தங்கட மண்ண விட்டு ஓடிப் போனாலும்...... உங்களுக்கு இஞ்ச ஒரு சொத்துப்பத்து இல்லாட்டிலும், நீங்கள் உங்கட தேசிய இனத்தின் பெயரையும் மாற்றிக் கொண்டு விட்டாலும் பரவாயில்லை. ஆனாலும் நீங்கள் பழகிய இந்த ஊரும் இதில் இன்னும் நம்பிக்கையுடன் வாழ்ந்துவாற உங்கள் உறவுகளும், நீங்கள் இதுவரையும் மறக்காமல் பேசிக் கொள்ளுகின்ற தமிழ் மொழியும் இதுகளில இன்னமும் உங்களுக்கு உரிமை இருக்கு. அதுகளைத் தேடிக் கொண்டுதான நீங்களும் இங்க ஓடிவந்திருக்கிறியள். எல்லாவற்றையும் நானும் திரும்பத் திரும்ப யோசிச்சுப் பார்த்தன். நீங்கள் இந்த ஊரை விட்டு ஓடிப் போகும்போது அந்த ஊரில் அக்கறையில்லாமலும், அபிமானமும் இல்லாமல் தான் ஓடிப் போறியள் என்றுதான் நினைத்தோம். அதுவும் சரிதான். ஆனால் இப்போது திரும்பவும் இங்கு வந்திருப்பதைப் பார்க்கும் போது உங்கள் ஊரில் உங்களுக்கு அக்கறையும் அபிமானமும் இருக்கென்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. அந்த அக்கறையும் அபிமானமும் உங்கள் உறவுகளைத் தேடி ஓடி வரத் தூண்டிய இந்த பாச உறவும்தான் உங்களை இங்கே இழுத்துக் கொண்டு வந்திருக்கிறது. இவற்றையும் நாங்கள் மதிக்க வேண்டும்." மாமரம் ஒருமுறை காற்றில் சிலிர்த்துக் கொண்டது. தமிழாசிரியரின் இந்த நிதானமான வார்த்தைகளைத் தொடர்ந்து...... அவர் சொல்லத் தொடங்கினார்.

"நீங்கள் இப்போது கூறிய விடயங்கள் நானே உங்களுக்கு அன்றே கூறியிருக்க வேண்டும். ஆனால் நான் அன்று உங்களோடு அப்படி வாதம் செய்யாதிருக்கவும் கூடாது. காரணம் என்னவெண்டால்..... நீங்கள் இன்று வாழும் சூழல், நீங்கள் என்னில் கோபப் படுவதற்கு நியாயம் இருக்கு. அதைவிடவும்....... நீங்கள் இந்த மண்ணில் வாழுகின்ற, வாழவிருப்பப் படுகின்ற திண்மையான மன உறுதிதான் உங்களை அப்படிப் பேசவைக்கிறது. ஆனால், என்னைப் போன்றவர்கள் ஒரு குற்ற உணர்வோடு தான் வாழ்கிறோம். அதனால் அதைப் பேசும் துணிவும் எமக்கில்லை. நான் டென்மார்க்கிலிருந்து இங்கு வந்ததிலிருந்து பெற்ற அனுபவங்கள், சந்தித்த மனிதர்கள்.... இப்படிப் பல..... என்னுள் பலத்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து என்ன செய்வது, என்றே யோசித்துக் கொண்டிருக்கிறேன்..... சொல்லி முடித்து விட்டு நெற்றியைச் சொறிந்து கொண்டார் அவர்.

"சொந்த பூமியில் வாழ்பவன் துணிச்சலுடன் வாழ்கிறான். இரவல் பூமியில்

வாழ்பவன் அடிமைத் தனத்துடன் வாழ்கின்றான்." என்றார் தமிழாசிரியர் இரத்தினச் சுருக்கமாக. அவர்கள் அமர்ந்திருந்த அந்த மாமர நிழல் ஆடியது. அந்த மாமரம் மீண்டும் ஒரு முறை அது தன்னை சிலிர்த்திருக்க வேண்டும். விமானம் ஆகாயத்தில் எழுந்தது. அவர் யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"நீங்களும் சும்மாய் தான இருக்கிறியள்..... ஊரில பாருங்கோ.... சும்மாய் இருந்த ஆக்கள் எல்லாருக்கும் எவ்வளவு மதிப்பும் மரியாதையும். நீங்களும் இங்கேயே இருந்திருந்தால் எவ்வளவு மதிப்பும் மரியாதையுமாய் இருந்திருப்பியள். உப்பிடி எல்லாத்துக்கும் கூனிக் குறுகி நிண்டிருக்கத் தேவையில்லை..... நீங்களும் ஏதாவது செய்ய வேணுமாப்பா." என்றாள் அவரது மனைவி.

"இதுகளை நாங்களும் டென்மார்க்கில அனுபவிச்சனாங்கள் தான்...... நாங்கள் இருக்கிற இடத்தில ஒருத்தன் காணுற இடமெல்லாம் காறி உமிழ்ந்து அட கறுப்பா நீ இன்னும் உன்ர நாட்டுக்குப் போகேல்லயோ?" எண்டு அவமானப் படுத்திறவன் தான். எந்த அவமானமெண்டாலும் எங்கட சனத்திட்ட அனுபவிக்கலாம். ஆனால் பிறதேசங்களில......

"எவ்வளவு நேரமெண்டு இந்தப் பூமியை விட்டு ஆகாயத்திலேயே இருக்கிறது...... எப்படா விமானம் தரையிறங்குமெண்டிருக்கு....." என்றார் அவர். ஏதோ ஞானம் பெற்றவர் போல.

# ஆ! - அல்லது மாடு

நான் இலங்கையிலிருந்து வந்து டென்மார்க்கில் 15 வருடங்களாக வாழ்ந்து வருகின்ற ஒருவன். டென்மார்க்கின் ஒரு சிறிய கிராமமொன்றில் ஒரு டனிஸ் குடும்பத்தாருடைய வீடொன்றில் வாடகைக்கு அறையொன்றை எடுத்து வாழ்கிறேன். அதே கிராமத்தில் அமைந்துள்ள பிளாஸ்ரிக் தொழிற்சாலை ஒன்றிலேதான் வேலை.

பிரச்சனைகள் எதுவுமில்லை. ஆனால் எனது சொந்தங்களைப் பிரிந்து வாழ்வதும் அதன் ஏக்கங்களும் தான் எனது பெரிய பிரச்சனையாக எதிலும் பிடிப்பற்றது போன்ற உணர்வு. ஏதோ டென்மார்க்கிற்கு வந்து சேர்ந்த புதிதில் எல்லாமே உற்சாகமாகவும், நிம்மதியாகவும், கலகலப்பாகவும். பயமற்ற வாழ்வுமாக சந்தோசமாகவே இருந்தது.

ஏதோ வந்தவுடனேயே வேலையும் கிடைத்து அக்காமார் இரண்டு பேருடைய திருமணத்தையும் முடித்து பொறுப்பிலிருந்து கொஞ்சம் காலாறி அடுத்த இரண்டு அக்காமாரையும் கவனத்தில் வைத்து உழைப்பதிலும் சந்தோசம் தான். இதற்குள் எனக்கும் 28 வயதாகின்றாம். எனது கலியாணத்தையும் கவனிக்க வேண்டும் என்று அம்மா கடிதம் எழுதும் போது தான் எனக்கு எனது நினைவும் எனது வயதும் நினைவுக்கு வரும்.

இன்று வேலைக்குப் போகவே விருப்பமின்றி இருந்தது. சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தேன். சரி....... போர்வையை விலக்கியபடி எழுந்து கொள்கிறேன். வழமையான காலைக் கடன்களை முடித்து வீதியில்

இறங்குகிறேன். காலைச் சூரிய ஒளி இந்தத் துப்பரவான கறுப்பு வீதியில் விழுநது உற்சாகம் தரும் அழகு. பரந்து கிடக்கும் வானத்தை ஒருமுறை பார்த்து விட்டு நடக்கத் தொடங்குகிறேன்.

ஆடிமாதத்தில் கானில் பூத்துக் கிடக்கும் நிற நிறப் பூக்கள். தனது குழந்தையை தள்ளுவண்டிலில் வைத்துத் தள்ளியபடியே என்னைக் கடந்து விரையும் அந்தத் தாயாரின் அவசரம்.

அடுத்து வந்த வளைவில் திரும்பியபோது பள்ளிக்குச் செல்லும் அந்த வெள்ளைச் சிறுமி. முதுகில் புத்தகப் பை ஏற்றப் பட்டிருந்தது. கையில் ஒரு அழகான பொம்மை. "காலை வணக்கம்" தெரிவித்து விட்டு நிற்கும் அவளைக் கடந்து நடக்கிறேன்.

இந்த வீதியை அண்டியிருக்கும் அழகான வீடுகளில். ஒருவன் தனது வீட்டைச் சுற்றியிருக்கும் அழகான வேலியைக் கத்தரிப்பதில் ஈடுபட்டிருந்தான். அடுத்த வீட்டுக்காரி வேலி இடுக்கிலுள்ள களைகளைப் பிடுங்கிக் கொண்டிருந்தாள்.

தபால் கொண்டுவரும் அந்த மஞ்சள் நிறவான் அழகாக வளைந்து திரும்பிச் சென்றது. ஏதோ பாரமான பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்லும் அந்தப் பெரிய நீட்டு லொறி வீதியை அழுத்திக் கொண்டு விரைந்தது.

இப்போது அடுத்த நாற் சந்தி வளைவில் சுங்கான் குடித்தபடியே காரில் செல்லும் அவன் கம்பீரமாக கையசைத்துவிட்டுச் செல்கிறான். அவனும் என்னுடன் வேலைசெய்பவன்.

நடந்து கொண்டிருக்கிறேன். பாருங்கள் அந்த வீட்டுக்கு மேல் காற்றில் அசையும் அந்த சிகப்பு வர்ணத்தில் குறுக்கு நெடுக்காக டென்மார்க் தேசியக் கொடியை இன்றைக்கு அந்த வீட்டில் யாருக்கோ பிறந்த நாளாக இருக்கலாமென மனதுள் நினைத்துக் கொள்கிறேன்.

வலது பக்கத்திலுள்ள வீட்டுக் காரி ஜன்னல் களைத் திறந்து புதிய காற்றை வீட்டுக்குள் வரவேற்கிறாள். வாசலுக்கு ஓடி வந்த நாயொன்று என்னைப் பார்த்துக் குலைத்து விட்டு மீண்டும் வீட்டுக்குள் ஓடி மறைகிறது.

இப்போதுதான் அந்தச் சிகப்பு விளக்கெரிய "டிங்..... டிங்....."என்றபடி வீதியை மறித்துக் கதவுகள் மூடிக் கொள்ள........ புறாவையொத்த அந்த மென்மையான காலைப் புகையிரதம் சத்தமின்றி ஓடி மறைகிறது. மீண்டும் கதவுகள் திறந்து வழிவிட தண்டவாளத்தைக் கடந்து முன்னேறிச் செல்கிறேன். அதோ! அவர்கள் நிற்கிறார்கள்.

அவர்கள் நிற்கும் அந்தப் புல்வெளியைச் சுற்றி போடப் பட்டிருந்த முள்வேலிக்கருகில் நின்றேன். எனக்கு நன்கு பழக்கமாகிப் போன அந்த

நான்கு மாடுகளும் வேலிக்கரைக்கு ஓடிவந்தன. காலை வணக்கம் சொன்னேன். நன்றாக என்னை நிமிர்ந்து பார்த்தன. அவற்றின் முகத்தில் மகிழ்ச்சி.

கடவாயில் வழிந்து நுரையில் மேய்ந்த புற்களின் மீதங்கள் ஒட்டியிருக்க எனக்கு ஏதோபோல இருந்தது. இந்த மாடுகளுக்கும் எனக்கும் அது சுவையாக இருந்தது.

அந்த நாலுமாடுகளும் என்னைக் கண்டதும் மின்சாரம் பாச்சப்பட்ட முள்வேலிக் கரைக்கு ஓடி வருவதைப் பார்த்தால் இப்போதெல்லாம் எனது கண்கள் பனித்து விடுகிறது.

நல்ல வடிவான மாடுகள் அவை. கறுப்பும் மண்ணிறமும் கலந்து நல்ல கட்டுமஸ்தான தேகத்துடன் கூடியவை. நல்ல பெரிய கறுப்புக் கண்கள். அதிகம் வளராத கொம்புகள். உயரம் எனது இடுப்பளவே இருக்கும். நாலுமே நாம்பன்கள் தான். வால்களும் அதிகம் நீட்டானவையல்ல.

"சரி....... பின்னேரம் சந்திப்பம்......." என்று நான் சிரித்தபடியே சொன்னபோது..... அவைகள் ஏதோ விளங்கிக் கொண்டு தலையாட்டுவது போலவே எனக்குத் தெரிந்தது. இன்னமும் கொஞ்சத் தூரம் நடந்து தொழிற்சாலைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன்.

***

நான் அந்த மாடுகளைச் சந்திப்பதும் பேசாமல் பேசுவதும் சந்தோசப் படுத்துவதும் தொடர்ந்து கொண்டிருந்தது. மாதங்களோ இரண்டு. முடிந்தது. அந்த மாடுகளும் உருவத்தால் பருத்தும் அழகாகவும் மாறியிருந்தன. இப்போதெல்லாம் நான் வேளைக்கே வேலைக்குப் போகத் தொடங்கினேன். அந்த மாடுகளைச் சந்திப்பதிலுள்ள ஆர்வம் ஏதோ என் மனதுள் விகிர்த்து நின்றது. இந்த நாட்டில் யாருமற்ற எனக்கு ஏதோ ஒரு வகைப் புது உணர்வு. இந்த உறவால் கிடைத்தது போலவே உணர்ந்தேன். இந்த மாட்டு விவகாரத்தை ஒரு நாள் எனக்குத் தெரிந்த தமிழர் ஒருவரிடம் சொல்லப் போய்...... போதாக் குறைக்கு அழைத்துச் சென்று மாடுகளையும் காட்டியதற்கு அந்தத் தமிழர் செய்த பரிகாசமும், நக்கலும், நளினமும் கலந்த பார்வையும் என்னை எச்சரிக்க, இந்த விடயம் பற்றி யாரிடமும் சொல்லாமல் தவிர்த்து வந்தேன்.

இன்று சனிக்கிழமை. வேலையில்லை. சமையல் பாகத்திற்காக ஒரு கோழியை எடுத்துத் தண்ணீரில் ஊறவைத்து விட்டு வெங்காயத்தை உரிக்கத் தொடங்கியபோது இலங்கைத் தபாலொன்று கதவிடுக்கால் வந்து விழுந்தது. உடைத்து வாசித்தேன். வெங்காயம் வெட்டியதால் எரிந்த

கண்ணோடு கண்ணீரும் வந்தது. கடிதத்தின் சுருக்கம் இதுதான். ஊரில் எனது தம்பி வேந்தனையும் வெளிநாட்டுக்கு கூப்பிட வேணுமாம். ரூபா 15 லட்சம் செலவாகுமாம். தாங்களும் இப்ப இடம் பெயர்ந்து வேறொரு இடத்தில் வசிக்கின்றனராம்.

என்ன செய்வது இப்படித்தான் வாழ்க்கை சில வேளைகளில் சுமையாகவும். அர்த்த மற்றதாகவும் ஒரு மனிதனுக்கு இருக்கலாம். அதுவும் கலந்ததே வாழ்க்கை. ஆனால், என்னைப் போன்றவர்களுக்கு வாழ்க்கையே முழுமையாகச் சுமையாகிவிட்டால்..... கோழியை எடுத்து கூரிய கத்தியால் இரண்டாக வெட்டினேன். அந்தக் கோழியின் இறைச்சியிலிருந்து இரத்தம் எதுவும் வரவில்லை. காரணம் அந்தக் கோழி கொல்லப் பட்டு பல ஆண்டுகள் இருக்கலாம்.

அத்துடன் அது குளிர் பெட்டியில் போடப்பட்டு விறைத்துக் கிடக்கிறதே. இந்தக் கோழி தான் வாழ்ந்த காலத்தை விடவும். இறந்த பின் குளிர்ப் பெட்டியில் வாழ்ந்த காலமே அதிகமானதாக இருக்கும்.

எரிச்சலோடு யாழ்ப்பாணத்துத் தூள் போத்தலை எடுத்துத் திறந்தேன். வாசனை மூக்கைத் துளைத்தது. கூடவே தும்மலும் வந்தது.

புலம் பெயர்ந்த என்னைப் போல் வாழும் தமிழர்கள் எல்லோருடைய பிரச்சனைகளும் எனது பிரச்சனைகள் போன்றனவல்ல. சிலருக்குப் பிரச்சனைகளே இல்லை என்று நான் நினைப்பதுண்டு. நான் அப்படி நினைப்பதற்கு அவர்களது ஆடம்பர வாழ்க்கை முறையே காரணமாகும் அதனாலே என்னவோ நானும் என்பாடுமாக தனிக்கட்டையாக வாழ வேண்டி ஏற்பட்டு விட்ட ஒரு வகையில் இதுவும் இங்கு பாதுகாப்பானதே. தனிமைதான் எனது பெரிய பிரச்சனை. ஆனாலும் இப்போதெல்லாம் அந்தத் தனிமையைப் போக்க ஏதோ ஒரு வடிவில் துணையாக அந்த மாடுகள் இருக்கின்றன. இந்த நாலுமாடுகளின் தினசரிச் சந்திப்பு..... எங்கோ எனது மனதுள் ஒதுங்கிக் கிடந்த பழைய நினைவொன்று விரிந்து விருட்சமாயிற்று.

அந்த நினைவு இதுதான். பெயர் சின்னமணி. ஏதோ எனது சகோதரியோ அல்லது எனது காதலியோ என்று நினைத்து விட வேண்டாம்.

அந்தச் சின்னமணியும் ஒரு மாடுதான். எங்கள் வீட்டுப் பசு. எனது மூத்த அக்கா திருமணம் முடித்துத் தனது கணவனுடைய வீட்டுக்குப் புலம் பெயர்ந்த போது இந்தப் பசுக்கன்று பிறந்ததாம்.எங்கள் பெரியக்காவின் நினைவாக அம்மா வைத்த பெயர் தான் சின்னமணி. சின்னமணி வடிவான பசு.

வீட்டின் அதிட்டக் காரி என்பதால் நல்ல செல்லம். சின்னமணி என்று அழைத்தால் போதும். எங்கிருந்தாலும் அது ஓடி வரும். தவிட்டுக் கடகத்தைத் துடைத்து நக்கிப் போதாமலிருந்தால் கடகத்தைக் கொம்புகளில் கொளுவிக்

கொண்டு அடுப்படி வாசலில் நின்று அம்மா என்று கத்தும். என்னை அடிப்பதற்காக அம்மா கையில் பிடித்துக் கொண்டு தடி எடுக்கும் போது நான் உரத்துக் கத்துவேன். அந்தக் குரலோடு சின்னமணி எங்கு நின்றாலும் ஓடிவந்து எனக்கும் அம்மாவுக்கும் இடையே நின்று தலையைத் திணித்து விலக்குப் பிடிக்கும். அப்போதெல்லாம் "இது முந்தின பிறப்பில உன்ர தாயாக இருந்திருக்கும்போல" என்ற அம்மா சொல்லுவா.

ஒரு முறை சின்னமணியும் கண்டுத்தாச்சியானா. நாட்கள் நெருங்க நெருங்க வெளிமேச்சலைத் தவிர்த்து வீட்டுக்குள்ளேயே சாப்பாடு தரப்பட்டது. வீட்டு முற்றத்தில் கிடந்து அசைபோடக் காகங்கள் உண்ணி பொறுக்குவதைக் கண்டு கொள்ளும் எங்கள் வீட்டு அடுத்த தோழர் சூரன் நாய் காகங்களைக் கலைத்து விட்டு சின்னமணிக் கருகில் காவலிருக்கும். வீட்டில் குழந்தைகள் அழுதாலோ சின்னமணியும் வந்து எட்டிப் பார்த்து குசலம் விசாரிக்கும். வேர்த்துக் களைத்து தோட்டத்தால் வீட்டுக்கு வரும் ஐயாவுக் கருகில் வந்து சின்னமணி நிற்பா. ஐயாவின் ஆதர்சமான தடவலைப் பெற்ற பின்னரே பலா நிழலுக்குத் திரும்பிச் சென்று படுக்கும். இந்த ஸ்பரிசத்தில் ஐயா மகிழ்வதை நான் பலமுறை இரசித்திருக்கிறேன். இப்படி ஒரு சகோதரம் போல் பழகிய சின்னமணி ஒரு வெள்ளைக் கன்றொன்றை ஈன்றெடுத்தாள். அந்தநாள் முதல் எங்கள் எல்லோரைக் கண்டும் பயந்தாள். ஒதுங்கி ஒதுங்கிக் கன்றோடு வாழ்ந்தாள்.

வீட்டில் நாங்கள் எல்லாருமே அவளது அச்சத்தைப் புரிந்து கொண்டோம். ஆனாலும், தோழர் சூரனுக்கோ இந்த விடயத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பழையபடி சின்னமணியின் பின்னாலும், அதற்குக் காவலாகவும் பக்கத்தே படுத்திருக்க விரும்பினார். ஒரு நாள் அம்மா கன்றைத் தொட்டபோது சின்னமணி இடிக்க வரவும் சூரன் கடிக்க வரவும் பெரிய பிரச்சனையாகப் போய்விட்டது. இந்தச் சுகமான நினைவுகளோடு கோழிக் குழம்போடு சுடுசோறும் சேர்த்து சாப்பிட்டுக் கெண்டிருந்தேன். காலம் செல்லச் செல்ல சின்னமணியின் கன்று துள்ளித் துள்ளி தாயை விட்டு விலகவே சின்னமணியும் சூரன் நாயும் வழமைக்குத் திரும்பின. இந்த நாலு நாம்பன் மாடுகளினால் துருவி விடப்பட்ட எங்கள் சின்னமணியின் நினைவும்........

நினைத்தாலே சந்தோசம் தான். ஆனால், இப்போதோ அம்மாக்களும் இடம் பெயர்ந்திட்டால் சின்னமணியையும் கூட்டிக் கொண்டு போயிருப்பினமோ........ அல்லது?..........

முன்பொருநாள் பங்குனி மாதப் பற்றி எரியும் வெய்யில். அதுவும் மத்தியானம். சின்னமணி வெளியே வயலுக்கு மேச்சலுக்குப் போய்விட்டு அலறி அடிக்க ஓடிவந்தது. வழமையை விடவும் "அம்மா...... அம்மா...." என்ற குரல் அதிகமாக இருக்கவே...... அம்மா வந்து பார்த்துவிட்டு............

"ஆளுக்கு நல்லாத் தண்ணிவிடாச்சுப் போட்டுது...... தண்ணி அள்ளிவை என்றா அம்மா.

நான் கிணற்றடிக்குப் போகவே எனக்குப் பின்னால் வந்து அள்ளி ஊற்றிய தண்ணீரை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்துவிட்டு போதாதென அண்ணாந்து பார்த்து வாங்கிக் குடித்த அந்த சம்பவம் எனக்கு ஞாபகம் வரவே சாப்பாட்டுக் கோப்பையைக் கழுவி வைத்துவிட்டுத் தானாகவே வந்த பெருமூச்சை விலக்கிக் கொண்டு படுக்கையில் விழுந்தேன். வெளியே ஜன்னலால் பார்த்தேன். வானம் காற்றாடி ஒன்றைத் தூக்கி வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தது. கண்கள் அயர்ந்தன.

***

டென்மார்க்கில் கோடைகாலம் முடிவடைகின்ற காலமிது. சூரியன் வானத்தில் சஞ்சரிக்கும் நேரம் சரிந்து கொண்டே வரும். நேரத்துக்கே இருள் சூழத் தொடங்கும். நேரமாகியே விடியும்.

இவையெல்லாம் சோகம் தரும் குளிர்காலம் தொடங்குவதற்கான அறிகுறிகள். இருந்தாலும் இந்த முடியும் தறுவாயிலுள்ள கோடைகாலத்தை அவசர அவசரமாக மக்கள் அனுபவித்து மகிழ்வார்கள். வழமைபோல வேலைக்குச் செல்லும் வழியில் அந்த மாடுகளுடன் செல்லம் கொஞ்சும்போது அந்தப் புல்வெளியில் ஒன்றை அவதானித்தேன். அது ஒரு இரும்பாலான பெரிய கூடு. அதன் வாசல் திறந்திருந்தது. அது அங்கு ஏன் இருக்கிறது என்று..... பெரிதாக ஒன்றும் அலட்டிக் கொள்ளாமலே அந்த மாடுகளிடம் விடைபெற்று வேலைக்குச் சென்று விட்டேன். அன்று வழமைக்கும் மாறாக அடுத்த மூலைவரை வந்து விட்டு புல்மேய நடுவெளிக்கு சென்று கொண்டிருந்தன அந்த மாடுகள்.

***

நான் வேலை செய்யும் தொழிற் சாலையில் இயந்திரங்கள் இயக்கப் பட்டு இரைந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு இயந்திரமும் ஒவ்வொரு விதமாக இரையும். வேலைக்குச் சேர்ந்த புதிதில் அந்த இரைச்சல்கள் எனக்கு வேடிக்கையாக இருந்தன. ஆனாலும் போகப் போக அவை எரிச்சலையும் தலைவலியையும் தந்தன. ஒரு இயந்திரம் குதிரையைப் போல அடிக்கடி கனைக்கும். இன்னொரு இயந்திரம் யானையைப் போலவே பிளிறும். இப்படி கோழி பூனை போன்று இத்தியாதி இத்தியாதி இரைச்சல்களையும் கேட்கலாம். நான் அனேகமாக அருகாமையில் நின்று வேலைசெய்யும் ஒரு இயந்திரத்தின் இரைச்சலோ ஒரு புரோகிதர் அவசர அவசரமாக

மந்திரமோதுவது போலவே இருக்கும். யாரோ தார்ரோட்டில் காவோலையை இழுத்துக் கொண்டு ஓடுவது போல அடிக்கடி இரைந்து தொலைக்கும்.

இந்த இரைச்சல்களுக்குள்ளாகவும் நான் தமிழ்ப் பாடல்களை மனதுக்குள் முணுமுணுக்கப் பழகிக் கொண்டு விட்டேன். இரைச்சலினால் தலையிடி அதிகமாகும். வேலைகளில் நானும் ஐயாவும் எங்கள் வயலில் வேலை செய்யும் போது அனுபவிக்கும் அமைதியை நினைத்துக் கொள்வேன்.

நான் நாட்டிலிருக்கும் போது அங்கிருந்த சூழல் மற்றும் அனுபவங்களின் அருமையை அதன் பெருமைகளை இன்று வேறொரு சூழலிலிருந்து நினைக்கும் போது அதன் பெறுமானங்கள் மிக அதிகமானவை.

இப்போது நேரம் 9.30 தேனீரோ கோப்பியோ அருந்தியபடியே ஆறுதலெடுக்கும் நேரம். நான் வழமைபோல ஜோன் என்ற டனிஸ் காரருடன் தான் இடைவேளையைப் போக்குவதுண்டு. இன்றும் வழமைபோலவே நான் தேனீரை ஊற்றிக் கொள்ளுகிறேன். ஜோன் கோப்பியை ஊற்றிக் கொள்கிறான். நான்தான் கதையைத் தொடங்கினேன்.

அந்தக் கூடு...... எனது நாம்பன் மாடுகள் நின்று புல்மேயும் வெளிக்குள் நான் வரும்போது கண்ட அந்த இரும்பாலான பெரிய கூடு பற்றி அவனிடம் கேட்டேன்.

ஓ! அதுவா........ அது அந்த மாடுகளை இறைச்சிக் கடைக்காரன் பிடித்துக் கொண்டு போவதற்கு வசதியாக கொண்டு வந்திருப்பான். டென்மார்க்கில் நாம்பன் மாடுகளை ஒரு ஆறுமாத ஏழுமாத பருவத்தில் இறைச்சிக்காக எடுத்து விடுவார்ளகள். வயதான மாடுகளின் இறைச்சியைவிடவும் இளம் மாடுகளின் இறைச்சியே ருசி நிறைந்ததும் மாட்டுக்காரருக்கும் இலாபகரமானதாகும்.

நீ ஓர் இந்துவானதால் மாட்டிறைச்சி உண்பதில்லைத்தானே. அதனால் அதன் சுவை உனக்குத் தெரியாதுதானே...... ஒரு மாட்டிலிருந்து பெறப்படும் இறைச்சியை பலவகையில் பாகம் செய்து வெவ்வேறு விலைகளுக்கு விற்பனை செய்வார்கள். கால்தொடை இறைச்சி ஒருவிலை...... முள்ளந் தண்டு இறைச்சி ஒருவிலை........

இப்படி..... மாட்டீரல், மாட்டின் இதயம், மூளை, இரத்தம் என்பன வெவ்வேறு சுவைகளிலும் வெவ்வேறு முறைகளிலும் பாகம் செய்து உண்ணலாம். மிகவும் சுவையாக இருக்கும்.

ஏன் உனக்குத் தெரியுமோ..... மாட்டின் நாக்கை பொரித்துச் சாப்பிட்டால் மிக மிகச் சுவையாக இருக்கும் என்ற ஜோன்...... ஏன் மாட்டின் வாலிலிருக்கெல்லோ...... என்றபடி மேலும் தொடர்ந்தான்.

எனக்கோ ஏதோமாதிரி இருந்தது. நாங்கள் இந்துக்கள் என்றும் நாங்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை என்றும் மாட்டைப் புனிதமான மிருகமாக நாம் கருதுவதாக அவன் நம்பிக் கொண்டிருக்கிறான். அந்த நல்ல அபிப்பிராயத்தை நானேன் கெடுக்க வேண்டும்........ என எனது எண்ணங்கள் பலவாக ஓடினாலும்...... நான் அருந்தாத தேனீர் ஆறிக் கிடந்தது.

இடைவேளை முடிந்து எல்லோரும் எழுந்தபோது நானும் எழுந்து எனது இயந்திரத்தின் பக்கமாக நின்று எனது அலுவலில் மூழ்கினேன்.

***

வேலை முடித்து எல்லோருடனும் சேர்ந்து ஆலையை விட்டு வெளியேறினேன். வழமையை விடவும் எனது நடையில் ஏதோ ஒரு வேகம். அந்த மாடுகள் நின்று மேயும் புல் வெளி வந்தது. நீளவே நோக்கினேன். அங்கே மாடுகள் இல்லை.

வெறும் புல்வெளியே நிசப்தமாய்க் கிடந்தது. அங்கே கிடந்த மாடு பிடிக்கும் அந்தப் பெரிய இரும்புக் கூடும் இல்லை.

புல்வெளியைச் சுற்றிக் கிடந்த மின்சாரம் பாச்சிய முட்கம்பிகளைப் பார்த்தபடியே வீடு நோக்கி நடக்கிறேன்.

அம்மாவின் கடிதமும், அதில் தம்பி வேந்தனைப் பற்றி எழுதியிருந்தவைகளும் ஞாபகத்தில் வந்தன. அவனையும் அவசரமாய் எங்காவது வெளியில எடுக்க வேணும். அல்லது அந்த மாடுகள்போல......ஆ!

"இன்றும் சூரியன் நீண்ட நேரம் வானத்தில் நிற்காது" என மனது நினைக்கிறது. இது குளிர்காலமன்றோ!

# கட

இரவுப் புகையிரதத்தின் நகர்வுக்கு இசைவாகப் படுக்கையில் சாய்ந்து கொள்கிறேன். நான் டென்மார்க்கு வந்து 12 வருடங்களின் பிறகு இப்போது நான் யேர்மனிக்கு செல்லுகின்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

குடும்பத்தோடும், வேலைப்பளுவோடு, அமைதியாக உல்லாசப் பயணங்கள் மேற்கொள்ளுகின்ற வாய்ப்புப் புலம் பெயர்ந்து வாழும் ஐரோப்பிய தமிழர்களுக்குப் போலவே எனக்கும் பெரிதாக இல்லை.

இன்றும் கூட, எனது இந்தப் பயணமும் தவிர்க்க முடியாத ஒன்று. குடும்பத்தோடு எல்லோருமாகவே வரச் சொல்லி எனது நண்பன் சிறி கூறியிருந்தாலும் மனைவிக்கு வேலை. லீவு எடுக்க முடியவில்லை. அதனால் தனியாகவே கிளம்ப வேண்டியதாயிற்று.

எனது நண்பன் சிறி எனக்கு முன்னதாகவே யேர்மனிக்கு வந்து விட்டான். அவன் ஒரு சங்கீத ஆசிரியராக இலங்கையில் பணிபுரிந்தவன். ஊரில் எனது வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரன். நானும் டென்மார்க்கிற்கு வந்ததன் பின் எங்கோ எப்படியோ தொடர்பு கொண்டு முதல்நாள் தொலைபேசியில் உரையாடிய போது நாங்கள் இருவரும் அழுத நேரமே அதிகமாக இருந்தது. பின்னர் அவ்வப்போது தொலைபேசியில் நலம் விசாரித்துக் கொள்வதோடு சரி.

நேற்றுத்தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது தகப்பனார் சிவக் கொழுந்து காலமான செய்தியைச் செல்லி மரணச் சடங்கிற்கு வரச் சொல்லியுமிருந்தான்.

அந்த சிவக் கொழுந்து அண்ணரின் மரணச் சடங்கிற்காகவே இப்போது யேர்மனிக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். புகையிரதம் படுவேகமாக ஓடிக் கொண்டிருந்தது. நான படுத்திருக்கும் புகையிரதப் பெட்டியில் ஏனைய பயணிகள் யாவரும் தூங்கி விட்டனர். எனக்குத் தூக்கம் வராத நிலை. காலம் சென்ற சிவக் கொழுந்து அண்ணரின் நினைவுகள் படையெடுக்கத் தொடங்கின.......

அவர் ஒரு நல்ல மனிசன். இப்ப வயது ஒரு 65, 66 இருக்கும். திடீரென இதயம் வலித்தபடியே நின்று விட்டதாம். அவரும் அவரது மனைவி தெய்வநாயகியும் ஏற்கெனவே யேர்மனியில் குடியேறிவிட்ட தமது ஐந்து பிள்ளைகளுடனும் வந்து இணைந்து கொண்டார்கள்.

சிவக் கொழுந்தண்ணர் ஊரில் பலசரக்குக் கடை வைத்திருந்தவர். ஒரு சாதாரண கடைதான். ஊரில் நல்ல மரியாதைக்கும் உரியவர். கடை அலுவல்கள் போல ஊரில் அத்தனை பொது விடயங்களையும் தனது வீட்டு அலுவல்போலவே அதீத ஈடுபாட்டுடன் செய்து முடிப்பவர். அதுவும் ஊரின் மத்தியில் இருக்கும் சித்திர வேலாயுதர் கோவிலின் தர்மகர்த்தாவும் இவர்தான்.

திருவிழாக்காலங்களில் அவரது வெள்ளை வண்டிக்குக் கீழ் இறுக்கிக் கட்டப் பட்டிருக்கும். வெள்ளை வேட்டி. வெறும் சிவந்த மேனியில் உருளும் தங்கச் சங்கிலி. நெற்றி நிறைந்த திருநீற்று குறிகளின் நடுவே நிலவாக ஒளிரும் சந்தனப் பொட்டு. அகன்று உயர்ந்த நெற்றியை விட்டு மேவி வாரப் பட்டிருக்கும் கருமுடிகள். அவருக்கு மிகவும் எடுப்பாகவே இருக்கும்.

அவர் ஒரு கடைவியாபாரியாக இருந்தாலும் சமூகத்தில் அக்கறை உள்ளவர். பழிவாங்கலுக்கு அஞ்சுபவர். யேர்மனிக்கு இடம் பெயர்ந்தபோது கடை, வீடு வளவு எல்லாவற்றையும் தனது ஊரிலுள்ள வசதி குறைந்த சனங்களுக்கு பராமரிக்கக் கொடுத்து விட்டுத் தான் ஊருக்குத் திரும்பும்போது மீளவும் ஒப்படைக்கும்படி சொல்லிவிட்டு வந்தவராம். இப்போதோ யாருக்கும் சொல்லாமலே அவர் போய்விட்டார்.

இப்படித்தானே மனித வாழ்வு. தான் தர்மகர்த்தாவாகவிருந்த சித்திர வேலாயுதர் கோவிலின் முன்றலிலுள்ள நெல்லி மரத்திலிருந்து உதிரும் காய்ந்த சருகுகளை தினமும் காலையில் கூட்டி துப்பரவு செய்து காலையில் குளித்து வீட்டு வளவுக்குள் பூத்துச் சொரிந்து கிடக்கும் சிதம்பரத்தை, நந்தியாவட்டை பூக்களைச் சேகரித்து முருக தரிசனம் முடித்து ஏதோ ஒரு தேவாரத்தை வாய்க்குள் முணுமுணுத்தபடியே கடைக்குச் சென்று சுவரில் தொங்கும் பிள்ளையார், லட்சுமிப் படங்களுக்கும் பூ வைத்து சாம்பிராணிப் புகையைக் கடை நிறையப் பரவி விட்ட பின்புதான் வியாபாரத்தை ஆரம்பிப்பார்.

பெயருக்கு ஏற்றாற் போல் சிவகாரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட கொழுந்து அண்ணருக்கு ஏன் இதய வலிவந்து மரணிக்க வேண்டும். இப்படியான மனிதர்களுக்கு இத்தகைய மரணங்கள் வருவதில்லை என்று சொல்வார்களே........

இப்படி இப்படி சிவக்கொழுந்து அண்ணரைப் பற்றிய பலப்பல நினைவுகளோடு என்னையும் அறியாமலே தூக்கத்தில் விழுந்தேன்.

குளிர்காற்று ஜன்னல்வழியாக வந்து எழுப்பிற்று. பயணப் பெட்டியிலிருந்த சகபயணிகளில் பலரும் விழித்தெழுந்து காலைக் கோப்பி அருந்திக் கொண்டிருந்தனர். நானும் இறங்க வேண்டிய இடமும் நெருங்கவே தலையைச் சற்றுச் சரிசெய்து கொண்டு தலைமாட்டிலிருந்த கைப்பெட்டியைச் சரிசெய்து எடுத்துக் கொண்டு தரித்துக் கொண்ட புகையிரதத்திலிருந்து இறங்கிக் கொள்கிறேன்.

அவசரிக்கும் பயணிகளை அவசர அவசரமாக விலக்கிக் கொண்டு நீண்டு கிடக்கும் தடத்தில் நண்பன் சிறியை தேடுகிறேன். குளிர்காலத்தில் இறந்து போய் மீண்டும் இலைதுளிர் காலத்தில் அதே பூவாகவே அதே நிலத்தில் சொன்னபடி பூத்துக் கொள்ளும் அந்த சிகப்புமலரைப் போல சிறியும் என்னை வரவேற்கக் காத்திருக்கிறான்.

காலங்களின் அசுரத்தனமான துரத்தல்களினால் வீட்டைப் பிரிந்து அவரவர்க்கு வசதிப் பட்ட நாடுகளுக்குள் ஓடிமறைந்த நிலை ஏற்பட்டு விட்டாலும் எப்படியோ நாம் ஒருவரை ஒருவர் தேடிக் கண்டுபிடித்து உறவுகளைப் பேணிக் கொள்கின்ற போது இந்த இயற்கையைப் போல நாமும் கைகோர்த்துக் கொள்கிறபோதுள்ள பூரிப்பு இருக்கிறதே அதை அகதிகளாலேதான் புரிந்து கொள்ள முடியும்.

அதே ஆள். அதே சுருள் முடி. சரியாகத் தகப்பனைப் போலவே. கொஞ்சம் மெலிந்திருந்தான். இருந்தாலும் ஊரில் நான் பார்த்த வடிவான சிறீயை என்னால் காணமுடியவில்லை. இந்த விடயத்தை நான் மேலும் பல நண்பர்களிடமும் அவதானித்திருக்கிறேன்.

ஓடி வந்து ஆவலோடு கட்டி அணைத்துக் கொள்கிறான் என்னை. நெஞ்சு ஒருகணம் விம்மியதை நான் எனது நெஞ்சால் உணர்ந்து கொள்கிறேன். தந்தையை இழந்த துன்பம் போலவோ அல்லது நீண்ட நாட்பிரிவின் பின் நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதாகவோ இருக்கலாம். நேரடியாகச் சென்று காரில் ஏறிக் கொள்கிறோம். கார் புறப்படுகிறது.

"நாங்கள் நேரடியாகவே செத்த வீடு நடக்கிற இடத்துக்குப் போவம். பிறகு எல்லாம் முடிந்த பிறகு வீட்ட போகலாம்" என்றபடி லாவகமாகக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான் சிறி. காரின் முற்பக்கத்தில் தகப்பனார் சிவக் கொழுந்துவின் புகைப்படம் ஒன்று இருந்தது. "நல்லாகத்தான் இருந்தவர். திடீரென்று நெஞ்சைப் பொத்திக் கொண்டு சரிஞ்சவர்தான்....... ஆள் உடன சரி".

அவரது புகைப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்த என்னை அவதானித்த சிறி" என்ன அவருக்கு உரிய பொறுப்பெல்லாம் வடிவாத் தீத்துப் போட்டுத்தான் போயிருக்கிறார். என்ன........ இனி அம்மாதான் பாவம்........ தனிய" என்றபடி கியரைமாற்றியபடி வேகத்தை முடுக்கி விட்டபடி..... கார் பறந்து கொண்டிருந்தது.

"என்ன சிறி செத்த வீடு தமிழ் முறைப் படியோ..... அல்லது......?" என்ற எனது சந்தேகத்திற்கு.......

"சீச்.....சீ..... அண்ணஆக்கள், அக்கா, அம்மா, தம்பி எல்லாரும் அதுக்கு ஒத்துவரயில்ல அதனால....." கார் ஓரிடத்தில் தரித்தது.

"இதுதானோ இடம்" என்ற எனக்கு தலையை ஆட்டியபடி காரிலிருந்து இறங்கினான் சிறி.

அந்த மண்டபக் கதவு திறந்திருந்தது. மண்டப வாசலிலிருந்து மலர்கள் அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. பலபேர் கதிரைகளில் உட்கார்ந்திருந்தனர். அதற்கும் முன்பாக மூடப்பட்ட சவப் பெட்டியிலும் பலவகை மலர்கள் வைக்கப் பட்டிருந்தன. அதற்குப் பின்னாலுள்ள சுவரில் ஒரு கறுப்புச் சிலுவை இருந்தது. நானும் சிறியும் அருகருகாக நின்று சிவக் கொழுந்தண்ணரின் உடலுக்குக் கண்களை மூடியபடியே அஞ்சலித்து விட்டு இருக்கையில் அமர்ந்தோம்.

சிவக் கொழுந்தண்ணரின் மனைவி தெய்வநாயகி சிந்தும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். மற்றும் அவரது பிள்ளைகளது முகத்தில் அவ்வளவு பெரிதாக அழுகையிருக்கவில்லை. ஏதோ எல்லாவற்றையும் புரிந்து கொண்ட பக்குவ முள்ளவர்களாக அவர்கள் எனது பார்வைக்குப் பட்டார்கள். எவ்வளவு தான் வாழ்வனுபவங்களிருந்தாலும் தமது உறவுகளின் பிரிவில் அதிர்ந்து போவதும் அதனால் வெடித்து அழுது தீர்ப்பதும் எமது தமிழ் பாரம்பரியத்தின் ஒரு பகுதியல்லவா..........

கதவு ஒன்றைத் திறந்து கொண்டு கறுப்பு உடை அணிந்திருந்த ஒரு பாதிரியார் முன்னால் வந்தார். அவரது கையில் கறுப்புப் புத்தகம் ஒன்று இருந்தது. அவர் யேர்மனிய பாசையில் தனது உரையை ஆரம்பித்தார். அவரது உரையைச் சாந்தன் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துக் கூறிக் கொண்டிருந்தார். சாந்தன் சிவக் கொழுந்தண்ணரின் மூத்த மகன். இவர்தான் முதலில் யேர்மனிக்கு வந்தவர். பின்புதான் படிப்படியாக எல்லோருமே குடும்பமாக வந்து சேர்ந்தார்கள். சாந்தன் எந்த விதமான சிரமமில்லாமல் சரளமாக மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பாரதிரியாரின் உரையின் இடையில்.....

"எங்களை விட்டுப் பிரிந்த இம்மானுவேலின் ஆத்மா சாந்திபெற பிராத்திப்போமாக." என்று கூறினார். யார் இந்த இமானுவேல்?

சிவக்கொழுந்தண்ணருக்குப் பெயர் மாற்றம் ஏன்? இவ்வாறு எதுவுமே புரியாமல் நான் உட்கார்ந்திருந்தேன். வெளியே குளிருக்குள் இறந்த காடு வெண்பனிகளுக்கிடையே கறுப்பாக இருந்தது.

***

பிரயாணக் களைப்புத்தீர ஆறுதலாகக் குளித்துவிட்டு வந்து சிறியின் மனைவி தந்த தேனீரை குடித்தபடி சிறியை உற்று நோக்கினேன்.

அவனே என்னைப் புரிந்து கொண்டு விடயத்தை தொடங்கினான்.

"ஐயா மதம்மாறி ஒருவருடம். முழுக்காட்டலும் நடந்தது. உங்களுக்கும் தெரியும்தான்....... ஆள் ஒரு சைவப் பழமாய் இருந்தது...... எல்லாம் அண்ணற்ற வேலைதான்."

ஆரம்பத்தில அண்ணரும் சொல்லச் சொல்ல..... ஐயாவும் பேசி...... கோவிச்சு.... நீங்கள் எனக்குப் பிள்ளையாகப் பிறக்கேல்ல..... என்று வலுகடுமையாக எல்லாம் பேசி வலு உறுதியாக இருந்தவர். பேந்து அம்மாவும் மாறின பிறகு இவரும் மாறிவிட்டார்."

"அதுசரி.... சிறி! உங்கட அண்ணர் சாந்தன் ஏன் மதம் மாறினவர்?" என்று கேட்ட எனக்குச் சிறி சொல்லத் தொடங்கினான்.

சாந்தன் அண்ண முன்னம் ஒரு யேர்மனியக் காரியைக் கலியாணம் செய்திருந்தவர். இரண்டு பிள்ளையளும் பிறந்தது. பிறகு குடும்பம் சரிவரயில்ல.... விவாகரத்து எடுத்துக் கொண்டு அவள் போட்டாள். அண்ணர் குடிக்கத் தொடங்கினார். அவரது பிள்ளையைக் கூட அவருக்கு பார்க்கக் கூட அனுமதியில்ல. தனியத் தனியத் திரிஞ்சு குடிச்சுச் சகோதரங்கள் எங்கட சொல்லக் கூட கேட்காமல் தனியவே இருந்தவர். பிறகு ஐயா அம்மாக்கள் பாத்து தமிழ்ப் பொம்பிளையைக் கலியாணம் செய்து வைச்சு ஒரு மாதிரி குடியை நிறுத்திக் கொண்டு தமிழ் சாப்பாட்டுக்கடை ஒன்றை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில நல்லாத்தான் நடந்தது. பிறகு சீட்டுக்கட்டி பல லட்சம் டொலோசைக் கொண்டு இன்னொரு தமிழ் நண்பன் நாட்டை விட்டே ஓடிவிட்டான். சாப்பாட்டுக் கடை வருமானத்தை எடுத்துக் கடனக் குடுக்க கடை நடத்த முடியாமல் போக....... மீண்டும் குடிக்கத் தொடங்கினார். குடும்பத்தில தோல்வி. பண நட்டம். கடன்..... போதாக்குறைக்கு அண்ணிக்கும் அண்ணருக்குமிடையில பழைய யேர்மன் காரியின்ர விவகாரம் தெரிய வந்து குடும்பத்துக்குள்ள பிரச்சனை வலுத்திட்டு.

கடையும் மூடியாச்சு..... இப்பதான் அந்த ஆக்கள் அண்ணயப் பிடிச்சிட்டாங்கள். பெரியண்ணர்தான் முதலில மதம் மாறி முழுக்காட்டப் பட்டார். இப்ப மிச்சப் பேரையும் மாத்திப் போட்டார்.

"நெடுகச் சொல்லிச் சொல்லி அது எல்லாரையும் மாத்திப்போட்டுது". என்று கூறிவிட்டு நிமிர்ந்தான் சிறி.

"நீங்களும் ஒருக்கால்....... அண்ண வீட்டையும் போட்டு வாருங்கோ......" என்றான் சிறி.

நாங்கள் எல்லாரும் பக்கத்த பக்கத்த தான் இருக்கிறம். நானும் கொஞ்ச நேரம் படுத்து ஆறுறன். நீங்கள் எல்லாரிட்டயும் போட்டு வாருங்கோ.........

***

சாந்தன் வீடு இலக்கம் - 5

வாருங்கோ! சோபாவில் அமர்ந்தேன். தேனீர் தந்தனர். அருந்தினேன். விடயத்துக்கு நேரடியாகவே வராமல் எமது சுகநலங்களை விசாரித்துக் கொண்டு தொடங்கினார்.

இஞ்ச பாருங்கோ...... இந்த நூல் ஒன்று தான் உலகத்திலேயே அதிகமொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது...... எல்லா விடயமும் அழகாகவும் தெளிவாகவும் சொல்லப் பட்டிருக்கு........ ஆதி முதல் மனிதன் செய்த தவறினால் அவனது பரம்பரை மரணத்தை அனுபவிக்கிறது. இதற்கெல்லாம் ஒரு தீர்வு எல்லோரும் இதை நம்புறதுதான். இதை நம்புபவர்கள் மட்டுமே மரணமில்லாத வாழ்வை நிரந்தரமாக அனுபவிப்பார்கள். உலகம் அழியப் போகிறது..... இப்ப எல்லாம் நடக்கிற இயற்கையின் சீற்றங்களைப் பாருங்கோ..... இவை எல்லாம் இந்த இறுதி நாட்களில் நடக்கும் என்று இந்தப் புத்தகத்தில சொல்லியிருக்கு..... இந்த மனிசர நம்பிறதுக்கு இந்தச் சாத்தான் விடமாட்டான். இதை எல்லாம் சொல்லுறது என்ர கடமை....... இதை அவரே எனக்கு காரியப் படுத்தியிருக்கிறார்.

எங்கட தங்கச்சி சுமதிய உங்களுக்குத் தெரியும் தானே..... அவள்தான் எனக்குப் பிறகு முழுக்காட்டப் பட்டவள். அவளுக்கும் இரண்டு பிள்ளைகள். மூத்த பெட்டையும் சாமத்தியப் பட்டிட்டாள். இளையவன் தகப்பனப் போல ஒரே குழப்படி. பள்ளிக்குடத்துக்குக் கூட ஒழுங்கில்ல.......

சுமதியின்ர புருசன் குடும்பத்த விட்டிட்டு எங்கேயோ ஓடிவிட்டான். அவளின்ர நகை நட்டையெல்லாம் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான். ஆள்...... இப்ப லண்டனில இருக்கிறதாய்க் கேள்வி. சுமதியும் இதில நம்பிக்கை வைத்ததிற்குப் பிறகு...... குடும்பத்தில அமைதியும் சாந்தமும் நிலவுகிறது. அவளுக்கும் இந்தச் சமூகத்தில ஒரு பாதுகாப்பும் அங்கீகாரமும் இருக்கு. அவளை ஒரு கணவனைப் பிரிந்து வாழும் ஒரு பெண்ணாக எங்கள் சகோதரர்கள் கருதுவதில்லை. மாறாக அவளை ஒரு கடவுளின் உயிராகவே கருதுகின்றோம்.

இதற்குள் அந்தக் கறுப்பு அட்டைபோட்ட புத்தகத்திலிருந்து சில பகுதிகளை வாசித்துக் காட்டி அதற்கு விளக்கமும் சொன்னார். நன்றி சொல்லிக் கொண்டு விடை பெற்றேன். எனது வருகைக்கும் நன்றிதெரிவித்து விடைகொடுத்தனர். அந்த நூலை ஒரு தரமாவது வாசிக்கும் படி நினைவூட்டி..... கதவைச் சாத்திக் கொண்டனர்.

***

சுமதியின் வீடு - இலக்கம்: 18.

வாசல் அழைப்பு மணியை அழுத்தினேன். கதவு திறந்தது. உள்ளே வரச் சொன்னார்கள். சென்று உட்காரந்தேன். தேனீர் வேணடாமென்று சொல்லி சாந்தன் வீட்டுக்குச் சென்று வந்ததைக் கூறினேன். ஊரில் பக்கத்து வீடு என்ற பழக்கத்தை மறக்காமல் தனது தந்தையாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டமைக்கு நன்றி சொல்லி சந்தோசப் பட்டாள் சுமதி.

சுவரில் அவளது நாடு கடந்தோடிப்போன கணவனோடு குடும்பமாக எடுத்துக் கொண்ட படம் ஒன்ற பெரிதாக மாட்டிவைக்கப் பட்டிருந்தது. இது எல்லாம் சாந்தனின் வேலை. நான் இந்த ஆக்கள முன்னமே சந்திச்சிருந்தால் அவரும் மனம் திரும்பி நல்லாய் சந்தோசமாய் குடும்பத்தோடயே இருந்திருப்பார்.

ஆனால், அவர் போனதுக்குப் பிறகுதான் சாந்தன் அண்ணைக்கும் இந்த ஈடுபாடுகள் வந்தது. ஆரம்பத்தில ஏதோ ஒருவகை இழப்புப் போலவே இருந்தது. ஆனால் இப்ப எல்லாம் இந்த ஊழியத்தில ஈடுபடுறதால மனதுக்கு திருப்தியும் சந்தோசமும். இப்ப எல்லாம் நானும் பிள்ளையளும் சந்தோசமாக இருக்கிறோம்.

பேசா மடந்தையாக ஊரில இருந்த இந்த சுமதியோ இவற்றை எல்லாம் கதைக்கிறாள் என்று எனக்குள் ஆச்சரியப் பட்டுக் கொண்டேன்.

எ அந்தப் புத்தகத்தில சொல்லியிருக்கிறபடி மனிதர்கள் நம்பி நடப்பார்களேயானால் இந்தப் புனிதபூமி சொர்க்கமாக என்றும் திகழும். அந்தப் புனிதமான நாட்கள் வரும்போது ஆடும் சிங்கமும் சந்தோசமாக அருகருகே இருந்து அச்சமின்றி வாழும்.

இந்த விடயங்களை எல்லாம் சில சனங்கள் ஏற்றுக் கொள்ளுகுதுகளில்ல. ஏதோ நாங்கள் பிரச்சாரம் செய்யுறதாகவும். இந்த மதத்தை பரப்புவதால் எங்களுக்கு ஏதோ பெருமளவு பணம். வசதி வாய்ப்புகள் கிடைக்கிறதாகவும் வீணாகச் சொல்லித் திரியுதுகள். இதுவும் சாந்தனின் வேலைதான்.

அந்த இறுதி நாட்கள் வந்து கொண்டிருப்பதை நாங்கள் இப்போதே சொல்லி வைக்கிறோம். கேட்பவர்கள் பாக்கியசாலிகள்..... என்று அடுக்கிக் கொண்டே போனாள் சுமதி.

"அதுசரி உங்களது மற்ற அண்ணர் ஈஸ்வரனும் முழுகாட்டப் பட்டுவிட்டாரா?" என்று கேட்டேன். ஓமோம்.... அவருக்கும் இரண்டுதரம் காட் அற்றாக் வந்தது. இப்ப முழுக்காட்டப் பட்டதற்குப் பிறகு சிகரட் எல்லாம் துப்பரவாய் விட்டிட்டார்.

தனக்கு ஆரோ ஊரில இருக்கேக்க பில்லி சூனியம் செய்தவங்களெண்டும் அதனாலதான் தனக்கு எப்பவும் பிரச்சனையான வாழ்க்கை என்றும் சொல்லிக கொண்டிருந்தவர். இப்ப அவருக்கு ஒரு பிரச்சனையுமில்லை. சந்தோசமாக இருக்கிறாராம் என்றாள் சுமதி. ஈஸ்வரன் வீட்டுக்கும் போகவேண்டுமென்று சொல்லி விடைபெற்றேன்.

***

## ஈஸ்வரன் வீடு - வீட்டு இலக்கம்: 20.

"எவ்வளவுகாலம்...... வாருங்கோ வாருங்கோ........" அன்பான வரவேற்பு. ஈஸ்வரன் உட்கார்ந்திருந்த அந்தப் பெரிய நாற்காலிக்கு அருகில் அந்த கறுப்பு மட்டைப் புத்தகம் இருந்தது. சாந்தன் வீட்டிலும் சுமதி வீட்டிலும் எடுத்துச் சொல்லப் பட்ட விடயங்களைக் கிரகித்துக் கிரகித்து எனக்கு ஏற்பட்ட களைப்புத் தீர............ ஒரு தேனீர் கேட்டுவாங்கிக் குடிக்கிறேன்.

ஈஸ்வரனும் அந்தப் புத்தகத்திலிருந்து பல பகுதிகளை வாசித்துக் காட்டி விளக்கமும் சொன்னார். இவை எல்லாம் எனக்குச் சலிப்புத் தட்டத் தொடங்கிவிட்டது. கதையை வேறு எங்குதான் திருப்பினாலும் ஈஸ்வரன் அதற்கான விளக்கத்தையும் அந்தப் புத்தகத்திலிருந்தே ஆதாரங்களை எடுத்து விளக்கினார்.

அது எல்லாம் இருக்க....... "உங்கட தம்பி அசோகன் எப்படி இருக்கிறார்" என வினாவினேன்.

"அவனும் இப்ப எங்கட சபையிலதான் இருக்கிறான். முன்னயமாதிரி இல்ல..... நல்ல திருத்தம் உங்களுக்குத் தெரியும் தானே........ ஊரில பேரெடுத்த சண்டியன். இப்ப தான் செய்த பாவங்களையெல்லாம் நினைச்சு மனம் வருந்திறான். அதற்கு பிராயச்சித்தமாக அந்த புனிதரின் பெயரால் ஊழியம் செய்து மனம் திருந்தி இருக்கிறான். அடாவடித்தனத்திலும் அட்டகாசப் பயங்கர வேலைகளிலும் மூழ்கியிருந்த நிலமை தலைகீழாக மாறிச் சாந்தமாக இருக்கிறான்.

எங்கட சகோதரர்கள் ஆயுதங்களைத் தூக்குவதுமில்லை. அதை கறபதுமில்லை. அன்பு ஒன்றே எங்களது ஆயுதம்....... இதை உலகம் முழுவதுமாக அனுசரிக்கும் பட்சத்திலேதான் உலக சமாதானம் அந்த புனிதரின் ஆட்சியின் கீழ் உருவாகும்" என்றார் ஈஸ்வரன்.

"ஈஸ்வரன் அண்ண நீங்கள் எல்லாருமே வேறுமதத்திற்கு குடும்பமாகவே மாறிவிட்டீர்கள். ஆனால் உங்கட தம்பி சிறி மட்டும் மதம் மாறாமலே

இருக்கிறார். அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்?" என்று பொறுக்க மாட்டாமல் கேட்டு விட்டேன். அதற்கும் அவரிடம் பதில் தயாராகவே இருந்தது. சொன்னார்.

"அவர் இன்னமும் சாத்தானின் பிடியிலிருந்து மீளவில்லை. அதவிடவும் தான் தானாம் கடவுள். ஆகாய வெளியிலிருந்து கடந்து இந்த பூமியுள் வந்ததாகவும், கட! உள் என்பதே கடவுள் என்பதன் விளக்கம், என்றும் சொல்லுகிறான். இந்தப் பிறவியை முடித்து மீண்டும் வெளியே செல்வதே மரணம் என்றும் புது விளக்கம் சொல்லுறான்.

மண்டைக்குழப்பம். தான் அவனையும் திருத்த வேண்டும். அதைவிட எங்கட அம்மா சொல்லுவா..........

"ஆக்களுக்கு கோமணத்த கட்டிப் போட்டு கடவுள் எண்டு காட்ட நாங்களும் அதுகளை நம்பி கையெடுத்துக் கும்பிட்டுக் காலத்தை போக்கினம்......... என்று சொல்லி கவலைப் படுவா........" என்று ஈஸ்வரனிடமிருந்து விடைபெற்று வீதியில் நடந்து கொண்டிருந்தேன்.

***

## மீண்டும் சிறியின் வீடு

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தேன். ரம்மியமான மிருதங்கத்தின் ஒலி எனது காதைத் தழுவியது. மனமெங்கும் அந்த இதமான ஒலிபரவியது.

நடுவராந்தாவிலிருந்து சிறிதான் மிருதங்கம் வாசித்துக் கொண்ருந்தான். என்னைக் கண்டதும் வாசிப்பை நிறுத்திக் கொண்டு எழ முயற்சித்தவனை தடுத்து நிறுத்தி......

"நான் நல்லாய் களைச்சுப் போய் வாறன்...... கொஞ்ச நேரம் வாசி....... வாசி...... கேட்க ஆறுதலாக இருக்கும்" என்றேன்.

சிறி தொடர்ந்து வாசித்து...... ஒரு முத்தாய்ப் போடு நிறுத்தியபடியே........

"என்ன நல்லாய்க் களைச்சுப் போனியளோ...... நினைச்சனான்........ நல்லாய் போதிச்சிருப்பினமே. இவையளுக்குள்ளால நான் தப்பி வாழுறதுக்கு படுறபாடு...... உப்பிடி இஞ்ச நிறையத் தமிழ் ஆக்கள் மதம் மாறியிருக்கினம். டென்மார்க்கில என்னமாதிரி........ இப்பிடிப் பிரச்சனையள் இல்லையோ?" இது சிறி.

"டென்மார்க்கிலும் இந்தப் பிரச்சனை இருக்குதுதான். வெற்றிடங்களை நோக்கி வீசும் காற்றைப் போல, பிரச்சனைகள் அதிகமாக உள்ள இடங்களில் அவர்கள் புகுந்து விடுகிறார்கள். உங்கட குடும்பத்தில ஏதோ

எல்லோரும் தங்கள் பிரச்சனைகளின் அழுத்தத்திலிருந்து விடுதலைபெற இந்த மார்க்கத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய பிரச்சனைகள் தீர்ந்து போய்விட்டது என்று பொருளுமல்ல. பிரச்சனைகள் தீராமல் அப்படியே இருக்கத் தற்காலிகமாகத் தமது தலையிலிருந்து பாரத்தை இறக்கி யாரோ ஒருவரிடம் நம்பி எங்கோ ஓரிடத்தில் இறக்கி வைத்திருக்கிறார்கள். அவ்வளவுதான். அதைக் கூட நாங்கள் அனுமதிக்கலாம். ஏனென்றால் அதனால் அவர்கள் விடுதலையும் அமைதியும் அடைகின்றார்களல்லவா."

விளங்காப் பொருளுக்கு சக்தி அதிகம். பொருள் விளங்கி விடுமிடத்து அப்பொருள் தரும் தனது சக்தியை இழந்து விடுகிறது. இப்படி பல விடயங்கள் விளங்காப் பொருளாகவே இருந்து விடுகின்றன.

அதைவிடவும் இவர்கள் தமது பழைய நம்பிக்கைகளையும் பழக்க வழக்கத்தையும் எப்படி மறந்தார்கள் என்பது முக்கியமானது.

கால இடைவெளியும், தூர இடைவெளியும் தான் இவர்களையும் இவர்களை பழமைகளிலிருந்து பிரித்தது எனலாம். அத்துடன் புழக்கத்தில் இல்லாதனவும் இலகுவில் மறக்கப் பட்டு விடுவனவே. என்னதான் இருந்தாலும் சிவக் கொழுந்து, சாந்தன், சுமதி, ஈஸ்வரன், அசோகன், தெய்வநாயகி...... எல்லோருக்கும் இப்போதோ புதிய பெயர்கள் உண்டு. ஆனாலும், அவர்களை அந்தப் பழைய பெயர்களால் அழைக்கவே எனக்கும் ஆசை.

சிறி மீண்டும் தனது மிருதங்கத்தை வாசிக்கத் தொடங்கினான்.

●



## ஓர் அறிமுகம்

ஈழத்து இலக்கியப் பரப்பில் சமூக அவலங்களைப் பொரிதும் கவனத்திற் கொண்டு மனிதத்தின் மேம்பாட்டிற்காய் எழுத்துருவாக்கங்களைத் தருபவர்களுள் கவிஞர் முல்லையூரான் அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவர்.

சிவராஜா முருகேசு எனும் இயற்பெயரைக் கொண்ட கவிஞர் முல்லையூரான் அவர்கள் கடலன்னையின் அழகோடு காடும் காடுசார்ந்த நிலமான முல்லைத்தீவு வற்றாப்பளையை பிறப்பிடமாகக் கொண்டவர்.

முருகேசு, சிவபாக்கியம் ஆகியோரின் மகனான இவர், வற்றாப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து சாவகச்சேரி இந்துக்கல்லூரி, றிபேக்கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

1984ல் தாயகத்தை விட்டுப் பிரிந்த இவர் 1986 லிருந்து டென்மார்க் நாட்டில் வாழ்ந்து வருகிறார். புலம் பெயர்ந்ததும் சில ஆண்டுகள் தன்னை எழுத்துத் துறையில் ஈடுபடுத்த முடியாமலிருந்த இவர், சிறிது சிறிதாய் தன் மனநிலையை மாற்றிக் கொண்டு 1993ல் 'நிர்வாண விழிகள்' என்னும் கவிதைத் தொகுதியையும் 'காகம்' என்ற பெயரில் ஒரு மாத சஞ்சிகையையும் வெளியிட்டார்.

அண்மைக் காலங்களில் இவரது பல படைப்புகள் ஐரோப்பிய வானொலிகளால் எமது நேயர்களின் நெஞ்சங்களைத் தொட்டுள்ளன. கவிஞர் ஆட்கொள்ளும் கருப் பொருட்கள், சொற்பதங்கள், அவற்றின் கூர்மை என்பன நேயர்களையும் வாசகர்களையும் வெகுவாய்க் கவர்ந்துள்ளன. இவரது அனைத்துப் படைப்புக்களும் எம் தாய் மண்ணோடும் உறவாடிக் கொண்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. துன்பத்தில் வாடும் உலகத்தோருக்காய் இவரது மனமும் எழுதுகோலும் அழும்.

யூலியஸ் அன்ரனி
'தேன்தமிழோசை' வானொலித் தயாரிப்பாளர்
நோர்வே.
11 – 12 – 2001

ISBN 955825015-5
9 799558 250159